بسم الله الرحمن الرحيم

"

மார்க்கத்திலிருந்து
நூஹூக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும்,இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

"


காந்தி கொலையில்
சவார்கர் தப்பியது எப்படி? - 7

காந்தி கொலை வழக்கு
நீதிமன்றத்தில் கோட்சேவுடன்
சாவர்கர் பேச மறுத்தது ஏன்? - 19

கரையைத் தாண்டிய ஒகியும்
கதிகலங்கிய குமரியும் - 21

சொராபுதீன் கொலையில் அமித்ஷாவை
விடுவிக்க ரூ 100 கோடி - 26

நாடாளுமன்றத்தில் தாக்கல்
செய்யப்பட்ட முத்தலாக் சட்டம் - 34

அலாவுத்தீன் கில்ஜியும்
பத்மாவதியும் - 38

ஹாதியா -
மறுக்கப்படும் மதச் சுதந்திரமும்
பரப்பப்படும் இஸ்லாமிய வெறுப்பும் - 60



ஜனவரி-2018

# வைகறை

## வெளிச்சம்

ரபியுல்ஆகிர்-1439

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly
will come under the jurisdiction of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

தலையங்கம்

# பெருகிவரும் பெண்களுக்கெதிரான குற்றங்கள்

நம் நாட்டில் நடக்கும் குற்றங்களை ஆண்டுதோறும் கணக்கெடுத்து அவற்றை பதிவு செய்யும் அரசு நிறுவனம் National Crime Record Bureau : NCRB அதாவது இந்த நிறுவனம் ஆண்டுதோறும் நாட்டில் நடக்கும் குற்றங்கள், அவற்றின் தன்மை, இவற்றை ஆய்வுகள் மூலம் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை தரும். அதாவது நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதை நமக்குச் சொல்லும். இந்த வருடம் டிசம்பர் திங்கள் தொடக்கத்தில் அது தந்த அறிக்கையில் அது அரசின் கவனத்தைப் பெரிதாகப் பெரு கிவரும் பெண்களுக்கெதிரான குற்றங்களின் பக்கம் ஈர்த்தது.

நம் நாட்டில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் சென்ற வருடத்தைக் காட்டிலும் 2.9% சதவிகிதம் அதிகரித்திருக்கின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் 34 சதவிகிதம் அதிகரித்திருக்கின்றது எனக்கூறியது. (ஆதாரம் NCRB. as Quoted in First Post. Dec. 30, 2017) நீதித்துறையிலும் கூட பெண்களுக்கு பாதுகாப்பே இல்லை.

பாசிசத்தின் கோரப்பிடியில் சிக்கி இருக் கும் நம் நாட்டின் பெண்களைக் காப்பாற்றிட எல்லா பத்திரிகைகளும் பெண்களின் பாது காப்பைப் பற்றி நிரம்பவே எழுதின. அரசின் கவனத்தைப் பெண்களின் பாதுகாப்பின் பக்கம் ஈர்த்திட தலையங்கங்களை எழுதாத பத்திரிகைகளே இல்லை.

நாகரிகம் வளர்ந்துவிட்டது, அதனால் பெண்களெல்லாம் விடுதலை அடைந்துவிட் டார்கள் எனப் பேசுகின்ற இன்றைய நாட்களில் பெண்களுக்கெதிரான குற்றங்களும் பல வகை யாகப் பெருகி இருக்கின்றன. அவற்றை நாம் குறிப்பிட்ட NCRB தேசிய குற்றப் பதிவு குழுமம் இப்படிப் பட்டியல் போடுகின்றது.

1) கற்பழிப்புகள், 2) கூட்டுக் கற்பழிப்புகள், 3) வரதட்சனை சாவுகள், 4) வீட்டுத் தகறாறால் கொடுமைப் படுத்துதல், கொலை செய்தல்,

5) அழகான பெண்களை திருமணம் செய்து கொள்ள அவர்களுக்கு பின்னாலே செல்வது, மணக்க மறுத்தால் முகத்தில் ஆசிட்-ஐ வீசுவது, வெட்டி வீழ்த்துவது.

6) தான் விரும்பிய பெண்ணை வேறு யாரையும் திருமணம் செய்யவிடாமல் தடுப்பது, கொலை செய்வது.

7) திருமணம் செய்வதற்காகக் கடத்திச் சென்று கட்டாயப்படுத்துவது, சித்திரவதைச் செய்வது, கொலை செய்வது.

இவையெல்லாம் புதிதாகப் பெண்களுக் கெதிராகப் பெருகிவரும் குற்றங்கள்.

இவற்றில் நமது இராணுவத்தினர் கஷ்மீரிலும், வடக்கிழக்குப் பகுதியிலும் செய்யும் கொலைகள், கற்பழிப்புகள் இவை சேர்க்கப்படவில்லை.

கஷ்மீரில் அது கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போர் என்று மறைக்கப்படுகின்றது. அதேபோல் வகுப்புக் கலவரங்களின்போது நடக்கும் கறபழிப்புகள், பெண் கொலைகள் இவையும் கணக்கில் கொள்ளப்படவில்லை. இவையெல்லாம் நமது தேசியத்தைக் காப் பாற்றிட (In the National Interest) செய்யப்படும் கற்பழிப்புகள் என்றும், கொலைகள் என்றும் பார்க்கப்படுவதால் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவற்றை செய்பவர் களுக்குச் சம்பளமும் சில நேரங்களில் பதவி உயர்வும் பதக்கங்களும் வழங்கப்படுகின்றன.

தேசிய குற்றப்பதிவு குழுமம் தரும் தகவல்கள் ஓர் உண்மையை நமக்கு முகத்தில் அறைந்தாற்போல, எடுத்துச் சொல்கின்றன. அது, நாம் புதுமை, பெண் விடுதலை, என்றெல் லாம் பேசியதன் விளைவு, பெண்கள் புதுப்பது

தாக்குதல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள், அடுத்து, நாம் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பொருளாதார வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொள்ளும் பொருளாதார மிருகங்களாகவும் சோற்றால் அடித்தப் பிண்டங்களாகவும் மாறி விட்டோம். நமது ஆட்சியாளர்களைத் தேர்ந் தெடுக்கும்போது நமக்கு (Social Index) என்ற மனிதாபிமானம். மனித மாண்புகள் ஒழுக்க மாண்புகள் நமது சிந்தையில் இல்லாமல் செத்துப் போய்விட்டன.

இவற்றை நாம் கவனத்தில் கொண்டி ருந்தால் நாம் நிச்சயமாக இப்போது இருக் கின்ற பிரதமரையோ, அவருக்கு கைத்தடியாக இருக்கும் அமைச்சர்களையோ, தேர்ந்தெடுத் திருக்க மாட்டோம். இவர்கள் பதவி ஏற்ற வுடன், "New York Times" நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகை Gallery of Rougues ரவுடிகளின் குழுமம் என எழுதியது.

கற்பழிப்புக் குற்றங்களில் குற்றம் சுமத்தப் பட்டவர்களும், இந்த அமைச்சரவையில் இருந்தார்கள். இவர்களிடம் பெண்கள் எப்படி பாதுகாப்பை எதிர்பார்க்க முடியும்?

நாம் மேலே சொன்ன (NCRB) தேசிய குற்றப்பதிவு குழுமம் நாட்டின் முக்கிய நகரமான டெல்லியும், மும்பையுந்தான் பெண் களுக்கு அறவே பாதுகாப்பில்லாத நகரங்கள் எனக் குறிப்பிடுகின்றது.

இந்தப் பின்னணியில் தலையங்கங்களைத் தீட்டிய எல்லாப் பத்திரிகைகளும், காவல் துறையின் கண்காணிப்புகளை அதிகப்படுத்திட வேண்டும் என்றும், தண்டனைகளின் கோரத்தை அதிகப்படுத்திட வேண்டும் என்றுமே எழுதின. ஆனால் இவற்றிற்கு நேர் எதிரான ஒரு சமுதாய அமைப்பை இஸ்லாம், கற்றுத் தந்துக் கட்டியெழுப்பியது.

அதில் பெண்கள் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டார்கள். இதில் இஸ்லாம் செய்த முதல் வேலை பெண்களின் நிலையை சரியாகப்புரிந்து அதைப் பறைசாற்றியதுதான்.

பெண்கள் மென்மையாகப் படைக்கப் பட்டவர்கள். அதனால் மென்மையானவர்கள். பெண்மை கவர்ச்சியானது. ஆண்மையைக் கவர்ந்திழுக்கக்கூடியது. அதனால் பெண்மை பேணிக் காக்கப்பட வேண்டியது. அது சந்திக்கும், சந்தைக்கும் வந்துவிடக்கூடாது. ஏனெனில் முனிவன் மனத்தையும் மயக்கும் பூமி - பெண்மை.

தவிர்க்க முடியாத காரணங்களால் அது ளியே வருவதாக இருந்தால் அது தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும். அங்கங்களைத் தகத்தகாயமாகக் காட்டிக் கொண்டு வெளியே வரக்கூடாது. இதனைத்தான் "புர்கா" என்கின்றோம்.

பெண்களைப்போல் ஆண்களுக்கும் இஸ்லாம் சில தடைகளை விதிக்கின்றது. வீதியில் நடக்கும்போது அவர்கள் பெண் களைக் கண்டால் தங்கள் பார்வையைத் தாழ்த் திக் கொள்ள வேண்டும். அவர்கள் மீது மோகப் பார்வையை பாய்ச்சுவது விபச்சாரத்திற்கு இணையான குற்றம். இதில் மனிதர்கள் தங்கள் உள்ளங்களை மனிதர்களின் கண்களிலிருந்து மறைத்துவிடலாம். நிச்சயமாக உள்ளத்தில் உள்ளுவதையும் உற்று நோக்கும் இறைவனின் பார்வையிலிருந்து மறைத்துவிட இயலாது.

பெண்கள், நிர்பந்தமான சூழ்நிலைகளில் வெளியே வந்திட வேண்டிய நிலை இருந்தால் அவர்கள் உற்றதொரு துணையுடன் வர வேண்டும்.

இப்படி பெண்களின் கண்ணியத்தைக் கட்டிக் காத்திட்டபின் அது தவறு செய்வோ ருக்கு கடுமையான தண்டனைகளைச் சொல்லு கின்றது. மனிதர்கள் வழங்கிடும் தண்டனை களைவிட இறைவனின் தண்டனையை அதிக மாகப் பயந்தார்கள். இஸ்லாம் கட்டியெழுப் பிய சமுதாய அமைப்பில்.

இப்படியொரு சமுதாய அமைப்பைக் கட்டியெழுப்பிய பின் பெருமானார் (ஸல்) அவர்கள் சனாவிலிருந்து ஹழரமௌத் வரை ஒரு பெண் இறைவனைப் பற்றிய அச்சம் ஒன்றை தவிர வேறு எந்த அச்சமுமில்லாமல் பயணிக்கும் ஒரு காலம் வரும் என்றார்கள். அந்தக் காலத்தை உருவாக்கிக் காட்டினார்கள்.

இதைப் படித்த மகாத்மா காந்தி அவர்கள்

இப்படியொரு காலம் வரும்போதே நாம் உண்மையான விடுதலையை அடைந்தவர்களா வோம் என்றார்கள். ஆனால் அப்படியொரு காலம் வருவதற்கு பதிலாக பெண்ணினத்திற்கு எதிரான கொடுமைகள் பெருகியே இருக் கின்றன. பட்டப்பகலில் பட்டணங்களில் அவர்கள் வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே காந்தியின் கனவை நனவாக்கிட இருக்கும் ஒரே வழி இஸ்லாத்தைப் பின்பற்று வதில்தான் இருக்கின்றது. இஸ்லாத்தை முன் வைத்து உண்மையான விடுதலையை நோக்கி நகர்வோம். இந்தியாவை அந்தப் பாதையில் செலுத்துவோம். அதற்காக உழைப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

**மார்க்கத்திலிருந்து நூஹூக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியுள்ளான். (நபியே!) உமக்கு நாம் வஹீ அறிவித்தோமே அதுவும்,இன்னும் எதனை இப்ராஹிமுக்கும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்தோமோ அதுவும் என்னவெனில் "இம்மார்க் கத்தை நிலை நாட்டுங்கள்; இதில் நீங்கள் பிரிந்து விடாதீர்கள்" என்பதாகும்.** (அல்குர்ஆன் - 42:13)

# நூல் வெளியீட்டு விழா

அஷ்பகுல்லாஹ் கான் என்ற முஸ்லிமும் 'ஆரிய சமாஜ்' உறுப்பினர் 'பண்டிட் ராம் பிரசாத் பிஸ்மில்' என்ற அய்யரும் பிரிட்டிஷ் இந்தி யாவில் வாழ்ந்த நண்பர்கள்.



தீவிரமான போராட்ட வடிவங்கள் வழியாக நாட்டின் விடுதலைக்காக இருவரும் இணைந்து போராடியதாக இருவர்மீதும் பிரிட்டிஷ் அரசு குற்றவியல் வழக்கு தொடர்ந்தது.

"கர்கோரி ரயில் நிகழ்வின் ஹீரோக்கள்" என்று அழைக்கப்பட்ட இவ்விருவரும் 90 ஆண்டுகளுக்கு முன் 19.12.1927 இதே நாளில் தூக்கிலிடப்பட்டனர்.

இது பற்றி விரிவாகப் பேசும் நூல் இந்தியா முழுக்க 250 இடங்களில் வெளியிடப்பட்டது. தமிழகத்தில் சென்னை மண்ணடி "நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்" தலைமை அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

வைகறை வெளிச்சம் மாதஇதழ் ஆசிரியர் மூத்த பத்திரிக்கையாளர் மு. குலாம் முஹம்மது நூலை வெளியிட்டு ஆய்வுரை நிகழ்த்தினார். நான்(இல்யாஸ் ரியாஜி) நூலை பெற்றுக் கொண்டேன்.

இந்நூலை வாசிக்கும் போது ஏற்படும் எண்ணம் என்னவென்றால்....

'இந்துத்துவ வாதிகள் அப்போதே இந்து ராஷ்டிராவுக்காகத்தான் உழைத்துள்ளனர். முஸ்லிம்கள்தான் அன்றும் இன்றும் அப்பாவித்தனமாக நாட்டுக்காக உழைத்துள்ளோம்.'

நூலாசிரியர் Syed Naseer Ahamed இந்து முஸ்லிம் ஒற்றுமை'க்கு இந்நூல் வழி வகுக்கும் என்பதற்காகவே இந்நூலை வெளியிடுவதாக கூறுகிறார்.

நூல் பற்றிய தொடர்புகளுக்கு.

**தாருல்இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் & நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்.**

**அலைப்பேசி : 814 812 9887**



# காந்தி கொலையில் சவார்கர்

## தப்பியது எப்படி?

### காந்திஜி கொலையின் இன்னொரு பக்கம்?

தேசத்தின் தந்தை எனப் போற்றப்படும் காந்திஜி அவர்கள் கொலை செய்யப் பட்ட நாள் ஜனவரி 30, 1948. அவர் ஒரு காங்கிரஸ் காரர். காந்திஜியை முன்னிறுத்தி அரசியல் களம் காணும் காங்கிரஸ் அவர் கொலை செய்யப்பட்ட ஜனவரி 30 ஆம் நாளை நாடெங்கும் விழிப்புணர்வு களை ஏற்படுத்திடும் நாளாக ஆக்கி இருக்க வேண்டும். இதன்மூலம் காந்திஜியைக் கொன்றவர் கள் தாம் ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் அவர்களின் ஜால் ராவாகப் பவனிவரும் சங்கப் பரிவாரத்தினரும் என்பதை மக்கள் மனதில் நிலைநாட்டி இருக்க வேண்டும்.

இடைவிடா முயற்சிகளின் வழி இதைச் செய்திருந்தால், பாசிசம் பதவிகளைப் பிடித்து விடாமல் மக்கள் தடுத்திருப்பார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி, அதுகண்ட ஆட்சி மயக்கத்தில் இதைச் செய்திடவில்லை. அத்தோடு இன்னொரு கீழறுப்பு வேலையையும் செய்தது. அது காந்திஜி கொலை செய்யப்பட்ட நாளை தீண்டாமைக்கு எதிரான நாள் எனப் பிரடகனப்படுத்தி மக்களின் கவனத்தை திசைதிருப்பவும் செய்தது.

இந்தச் சதியில் காங்கிரஸ் கட்சியில் புகுந் திருந்த இந்துமகா சபையினரும் பாசிச சிந்தனை உடையவர்களும் முக்கியப் பங்காற்றினார்கள். அவர்கள் சங்கப்பரிவாரத்தை முற்றாகக் காப்பாற்றி விட்டார்கள் என்றே சொல்லிட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் மீது நடந்த முதல் தாக்குதல் நாளான (நவம்பர்-7, 1966) இதுவும் நாடு நினைவு கூற தவறிவிட்ட நாள்களுள் ஒன்று.

ஆனால் நான் பொறுப்பேற்று நடத்திவந்த மனித நீதி பாசறை என்ற அமைப்பு, காந்திஜி கொலை செய்யப்பட்ட நாளான ஜனவரி 30-ஐ தீவிரவாத எதிர்ப்பு நாளாகவும், பாசிச எதிர்ப்பு நாளாகவும் எடுத்து, தமிழகமெங்கும் மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வந்தது. அந்த நிகழ்ச்சிகள் ஒன்றில் சென்னையில், விடுதலை இராஜேந்திரன் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

காந்திஜி கொலையின்
இன்னொரு பரிமாணத்தை
வெளிச்சம் போட்டு காட்டினார்கள்.
அதனை இங்கே தருகின்றேன்.

இவண்

**மு. குலாம் முஹம்மது**
ஆசிரியர் - வைகறை வெளிச்சம், மாதஇதழ்
நிறுவனர் - விடியல் வெள்ளி மாதஇதழ்

## காந்திஜியை ஏன் கொலை செய்தார்கள்?
**விடுதலை க. இராசேந்திரன்**

காந்திஜியின் நினைவு நாள் இந்த நாட்டில் அமோகமாக மறந்து விட்ட நிலையில், இந்த நினைவுநாளை நாம் மக்களிடத்தில் நினைவு படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

காந்தி ஜெயந்தி கோலாகலமாக கொண்டா டப்படும் வேளையில் காந்தியின் நினைவு நாள் மட்டும் திட்டமிட்டே மறக்கடிக்கப்பட்டு வருகின்றது.

ஏன் மறக்கடிக்கப்படுகின்றது? காந்தியின் நினைவு நாளைப் பற்றி பார்க்கும்போது வெறும் மரணச் செய்தியை மட்டும் பார்த்துவிட்டுப் போக முடியாது.

காந்தியின் மரணத்திற்குப் பின்னால் மத வெறிச் சக்திகளின் கோரத்தாண்டவம் மறைந் திருப்பதை கூறாமல் நாம் அந்த வரலாற்றைக் கூறிவிட முடியாது.

இவ்வுண்மைகள் மக்கள் மன்றத்தில் வெளிச் சத்திற்கு வந்துவிடும் என்ற காரணத்தினால், இந்த வரலாறு இளைய தலைமுறைக்கு தெரியக்கூடாது என்கின்ற காரணத்தினால்தான், காந்தி நினைவு நாளை (இந்த நாட்டில்) முதலமைச்சர் ஐந்து மணித்துளிகளை சில அரசு அதிகாரிகளை வைத்து தீண்டாமை ஒழிப்பிற்கு உறுதிமொழி என்கின்ற ஒரு சடங்கை நிறை வேற்றும் நாளாக மாற்றி வைத்திருக்கின்றார்கள்.

நியாயமாக பார்த்தால் காந்தியின் நினைவு நாள் என்பது இந்து மதவெறிக்கெதிரான கண்டன நாளாக இருந்திருக்க வேண்டும். அப்படி கொண்டாடுவதுதான் நாம் காந்திக்கு செய்யும் சரியான அஞ்சலியாக இருக்கும்.

ஆனால் இந்து மதவெறிக் கண்டன நாள் என்ற குரல் இந்த நாட்டில் ஒலித்துவிடக் கூடாது என அதனைத் தீண்டாமைக்கெதிரான நாளாக ஆக்கிவிட்டு மறந்துவிடும் படிச் செய்திருக் கிறார்கள்.

நமக்கு காந்தியாரோடு உடன்பட்ட கருத்து களும் உண்டு, உடன்படாத கருத்துகளும்உண்டு. இருந்தாலும் நமக்குள் ஒரு செய்தியால் மட்டும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கின்றோம். அது என்னவென்றால் காந்தியார் கொலை என்பது கொடூரமானது. அந்தக் கொலைக்குக் கராணமான கொள்கை அழிக்கபபட வேண்டும். ஒழிக்கப்பட வேண்டும்.

அந்த ஒற்றுமையின் அடிப்படையில்தான் இந்த நினைவுநாள் நடத்தபடுகிறது. இதை நாடு முழுவதும் நடத்தப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

காந்தியாருக்கு நட்பாக இருந்த சக்திகள் யார்?, எதிராக இருந்த சக்திகள் யார்? என்பதையும் அவர்கள் காந்தியடிகளை எவ்வாறு நடத்தினார்கள் என்ற வரலாற்று நிகழ்வுகளை யும் நினைத்துப் பார்க்க நாம் கடமைப்பட்டி ருக்கின்றோம்.



**திலகர்**

காந்தி இந்திய அரசியலில் நுழைவதற்கு முன்பு இந்தியாவில் திலகருடைய தலைமையில் ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொணடிருந்தது.

மராட்டிய பார்ப்பன பேஷ்வா பரம்பரை யைச் சார்ந்த திலகர் விடுதலை பெறும் இந்தியா இந்து நாடாக மாற வேண்டும் என்ற நோக்கில் சுதந்திரப் போரை இந்து ராஜ்யத்திற்கான போராட்டமாக நடத்திக் கொண்டிருந்தார். அவருடைய கருத்துகள் இந்துக்களை திரட்டி ஆங்கிலேயரை எதிர்க்க வேண்டும் என்பதாகவே இருந்தது.

அவர் வர்ணாசிரமத்தை ஆதரித்தார், ஜாதியை ஆதரித்தார், சலவைத் தொழில் செய்பவனும், செக்கிழுப்பவனும் சட்ட மன்றத் திற்குப் போகக்கூடாது என்றார். பெண்கள் கல்வி கற்கக் கூடாது என்று சொன்னார். பெண்களுக்கு குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்ய வேண்டும் என்ற இந்து தர்மத்தை ஏற்றுக்

கொண்டார்.

பிளேக் நோய்க்கு காரணமாக இருந்த எலிகளை வேட்டையாட வந்த ஆங்கிலேய அதிகாரிகளைச் சுட்டுக் கொன்ற இந்து வெறியர்களின் சதிக்கு ஆதரவாக இருந்து தண்டனை பெற்றவர்களிலும் ஒருவராக இருந்தார்.

அப்போதே சுதந்திரப் போரை ஓர் இந்து ராஜ்யத்தை நோக்கிய போராட்டமாக நடத்திய காலத்தில், அதற்குப் பின் போராட்டத்திற்குத் தலைமையேற்ற காந்தியார், இப்போராட்டத்தை இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், தலித்துகள் என்று அனைவரும் இணைந்து நடத்தும் போராட்டமாக மாற்ற முயன்றார்.

திலகருடைய செல்வாக்கு மறைந்து, காந்தி இந்திய அரசியலில் மையமாக மாறுகின்ற சூழ்நிலையில் மராட்டிய பேஷ்மா சித்பவன் பார்ப்பனர்கள் காந்தியின் இந்த எழுச்சி நம் கனவான இந்து ராஷ்டிரா உருவாவதற்கு பெரும் தடையாக வந்துவிடும் என்று அஞ்சி காந்தியடிகளை வீழ்த்துவதற்கு என்னென்ன திட்டங்கள் உண்டோ அவற்றையெல்லாம் செய்யத் துவங்கினர். சுதந்திரப்போர் வரலாற்றில் பல்வேறு போராட்டங்களில் சித்பவன் பார்ப்பனர்கள் ஒதுங்கி நின்று காந்தியினுடைய தலைமையை ஏற்காதிருந்தார்கள்.

### பெரியாரும் காந்தியாரும்

காந்தியாரின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கையில் அதிக ஆர்வம் காட்டியவர் பெரியார் அவர்கள். பிற்றைய நாட்களில் காந்தியாரின் கொள்கையில் பெரியாருக்கு அதிருப்தி ஏற்பட்டபோதும் கூட அவரின் தீண்டாமை ஒழிப்புக்கு இறுதிவரை ஆதரவளித்தே வந்துள்ளார் என்பதுதான் உண்மை.



பெங்களூரில் காந்தியடிகளைச் சந்தித்து பெரியார் பேசிய பொழுது நீங்கள் பிராமணர்களையெல்லாம் வெறுத்துக் கொண்டிருக்கின்றீர்களா? பிராமணர்களில் நல்லவர்கள் இல்லையா? என்று காந்தியடிகள் கேட்டதற்கு எனக்குத் தெரிந்து இந்த நாட்டில் நேர்மையான ஒரு பிராமணர் கூட இல்லை என்று பெரியார் சொன்னனர்.

அதற்கு காந்தியார் ஏன் கோபாலகிருஷ்ண கோகலே ஒரு நல்ல பிராமணன் இல்லையா? என்று கேட்டதற்கு, மகாத்மாவாகிய உங்களுக்கே நாட்டில் ஒரே ஒரு பிராமணர்தான் நேர்மையானவராக தெரிகின்றபோது, சாதாரண ஆத்மாவாகிய எனக்கு அதுகூடத் தெரியாமலிருப்பதில் வியப்பில்லை என்று பெரியார் கூறினார். இதைப்போல் ஏன் இந்து மதத்தை நாம் சீர்த்திருத்தக் கூடாது என்று காந்தியார் ஒரு கருத்தைக் கேட்டபோது அதனை மறுத்து பதிலளித்தார் பெரியார். பிற்றைய நாளில் காந்தியாருடைய சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டது.

தமிழகத்தில் பார்ப்பனர் அல்லாதவர் எழுச்சி ஏற்பட்ட காலங்களில் காந்தியார் தமிழகத்திற்கு வந்திருக்கின்றார். 1915ஆம் ஆண்டு வந்தபோது தரங்கம்பாடி என்ற ஊரில் காந்தியடிகளிடம் ஊர் மக்கள் ஒரு மனு கொடுத்தனர். இந்த ஊரில் எங்களுக்கு (தாழ்த் தப்பட்ட மக்களுக்கு) பொது இடங்களில் நடப்பதற்கு, தண்ணீர் எடுப்பதற்கு உரிமையில்லை. நீங்கள் இந்த உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று அம்மனுவில் கேட்கப்பட்டிருந்தது. அந்த மனுவைப்பெற்ற காந்தியடிகள் தரங்கமபாடியிலேயே பார்ப்பனர்களுக்கெதிரான உரையை நிகழ்த்தி தன்னுடைய எதிர்ப் புணர்வைப் பதிவு செய்தார்.

### 1920 காந்தி வந்தபோது கூறுகிறார்...

நான் கடந்த முறை வந்ததற்கும் இந்த முறை வந்ததற்கும் சில மாற்றங்களைப் பார்க்கிறேன். கடந்த முறை வந்தபோது மயிலாப்பூரில் சீனிவாச ஐயங்காரின் வீட்டில் வாசல் வரைதான் அனுமதிக்கப்பட்டேன். ஆனால் இம்முறை வீட்டின் உளளே வரை என்னை அனுமதித்தார். ஆகவே தமிழகத்தில் பெரும் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

(நூல் : தமிழகத்தில் காந்தியார்
காதிகிராமோத்பவன் வெளியீடு)



சீனிவாச ஐயங்கார் என்ற தேசியத் தலைவரின் வீட்டிற்குள் தேசத் தந்தை என்றழைக்கப்படும் காந்தியாரே அனுமதிக்கப்படவில்லை. அந்தள விற்கு வர்ணாசிரம வெறி தலைவிரித்தாடியது தமிழகத்தில். 1927-ல் மீண்டும் தமிழகத்திற்கு வந்தபோது சென்னை பச்சையப்பன் கல்லூரி யில் ஏன் பஞ்சமர்களும், முஸ்லிம்களும் சேர்க்கப் படுவதில்லை என்று அதே கல்லூரியிலே பேசினார் காந்தியார்.

(பச்சைய்யப்பன் கல்லூரி இந்து நிர்வாகத் தால் நிர்வகிக்கப்படுகிறது. அங்கே தாழ்த்தப் பட்டவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அனுமதி இல்லையென்று அறிவிப்பு செய்யப்பட்டி ருந்தது)

தமிழகத்தின் பல்வேறு கோவில்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையத் தடை விதிக்கப் பட்டிருந்த கொடுமைகளைப் பார்த்தார். குற்றால நீர்வீழ்ச்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் குளிப்ப தற்கு தடை உள்ள செய்தியைக் கேட்டு 1934-இல் தமிழகத்திற்கு வந்தபோது குற்றால நீர்வீழ்ச்சி யில் குளிக்க மாட்டேன் என்று அங்கிருந்து வெளியேறி விட்டார்.

அதே காலக்கட்டத்தில் மதுரைக்கு அருகில் உள்ள கள்ளர் சமூக மக்களிடத்தில் இங்குள்ள தாழ்த்தப்பட்டவர்களை ஏன் ஒதுக்குகிறீர்கள் என்று கடிந்து கொண்டார்.

தில்லை கோவிலுக்குள்ளும், காஞ்சி வரதராஜன் கோவிலுக்குள்ளும் காந்தியார் அனுமதிக்கப்படவில்லை. அதுபோல் குற்றாலம், சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை, தஞ்சை போன்ற இடங்களில் உள்ள கோவில்களிலும் காந்தியார் அனுமதிக்கப்படவில்லை. காரணம் காந்தியாருடன் தாழ்த்தப்பட்டவர்களும் உள்ளே நுழைந்துவிடுவார்கள் என்பதுதான். இதனால் காந்தியாரும் கோவில்களுக்கு செல்வதைப் புறக்கணித்தார்.

### காஞ்சி மடம்

சந்திரசேகர சரஸ்வதி சங்கராச்சாரி காந்தி யாரை காஞ்சி மடத்தில் மாடுகளைக் கட்டி வைக்கும் இடத்தில் அமர வைத்துதான் பேசினார்.

"சாதி வர்ணாசிரமத்திற்கெதிரான காந்தியின் போராட்டம், வர்ணாசிரம நம்பிக்கை கொண்ட வர்களை இம்சை செய்யும் போராட்டம்" என்று அப்போதே இந்த சங்கராச்சாரி காந்தியைக் கடிந்து கொண்டார்.

1937-இல் வைக்கம் போராட்டத்தில் பெரியார் தீண்டாமையை எதிர்த்து மிகப்பெரிய மனித உரிமைப் போராட்டங்களை நடத்திய பின்தான் திருவாங்கூரு சமஸ்தானத்தில் முதன் முதலில் கோவில்கள் தலித்துகளுக்கு திறந்து விடப்பட்டன. அதற்குப் பின்தான் காந்தியடிகள்

தலித்துகளுடன் கோவில்களுக்குள் நுழைய முடிந்தது. அதுவரை தமிழக கோவில்களுக்குள் தலித்துகள் நுழைய முடியவில்லை.

எனவே காந்தியடிகள் இந்துத்துவ எதிர்ப்பு என்ற ஒரு காரணத்தினால் இந்துத்துவ பார்ப்பன வர்ணாசிரம ஆதரவாளர்களின் கடுமையான எதிர்ப்புணர்வுகளுக்கு அவர் உள்ளாகியிருக்கின்றார்.

1948 ஜனவரியில் 30-இல் காந்தி படுகொலை செய்யப்பட்ட அன்றைய தினத்திற்கு முன் காந்தியாரின் மன நிலையில் பல மாற்றங்கள் வந்தன. அதற்குக் காரணம் தமிழகத்தில் முதல்வராக இருந்த ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள்.

ஓமந்தூர் ரெட்டியார் சாதியில்லாத பார்ப்பனராகவே செயல்படுவார் என்று ஒரு குற்றச்சாட்டை பார்ப்பனர்கள் காந்தியிடம் கொண்டு சென்றபோது, நீங்கள் வைதீக முறைப்படி அர்ச்சகர்களாகாமல் ஏன் டாக்டர்களாக, இஞ்சினீயர்களாக மாறுகின்றீர்கள் என்று அவர்களைப் பார்த்து காந்தியடிகள் கேட்டார். இந்தக் கேள்விகள் காந்தியாருக்கு பார்ப்பனர்களின் எதிர்ப்பை அதிகம் பெற்றுத் தந்தது.

1947-ல் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்ட நாளில் காந்தியார் சந்தோஷமடையவில்லை. காரணம் எல்லையில் மிகப்பெரிய கலவரம் வெடித்திருந்தது. அப்போது காந்தியடிகள் கலவரத்தைத் தடுக்கும் பணியில் இருந்தார். அப்போது மவுண்ட்பேட்டன் ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பினார்.

நாடு முழுவதும் கலவரம் நடக்கின்றது. பஞ்சாபில் கலவரத்தை அடக்க 55 ஆயிரம் இராணுவத்தினரை அனுப்பியிருந்தும் அடக்க முடியவில்லை. ஆனால் கல்கத்தாவில் கலவரத்தை அடக்குவதற்கு ஒரே ஒரு இராணுவத்தைத்தான் அனுப்பினோம் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. அதனால் அன்று முஸ்லிம் லீக் காந்தியாருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

இன்று சங்கப்பரிவார சக்திகள் இரண்டு விஷயங்களை முன் வைக்கின்றன. காந்தியார் பாகிஸ்தான் பிரிவினைக்குக் காரணமாக இருந்தார். அதனால் அவரை கோட்சே கொலை செய்தான். அதுபோல் கோட்சேவுக்கும் ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று தொடர் பொய்ப் பிரச்சாரங்களை செய்கின்றனர் சங்கப்பரிவாரங்கள். முஸ்லிம் லீக் 1940-ல் தான் லாகூரில் பாகிஸ்தான் வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியது. ஆனால் அதற்கு முன்பே 1936லேயே சங்கபரிவார் கூட்டம் இதை முன் வைத்தது. (Two Nations Theory) இரண்டு தேசம் கோஷத்தை முன்வைத்தது சங்பரிவார்.

காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட (1948, ஜனவரி 30) நிகழ்ச்சி ஏதோ பாகிஸ்தான் பிரிவினை கோஷத்தால் வந்ததல்ல. அதுபோல் பாகிஸ்தானுக்கு 55 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று காந்தியார் கோரியதால் வந்ததுமல்ல. மாறாக காந்திப் படுகொலை முன்கூட்டியே திட்டமிடப்பட்டது.

### காந்தியைக் கொலை செய்ய முதல் முயற்சி

முதன் முதலில் காந்தியைக் கொல்ல முயற்சி (1934-ல் ஜூன் 25) புனேயில் நடைபெற்றது. காந்தியார் துணைவியாருடன் காரில் செல்லும் போது, காந்தியார் செல்லும் காருக்கு முன்னால் சென்ற கார் முதலில் நிகழ்ச்சி நடக்குமிடத்திற்கு



வந்தவுடன் காந்திதான் வந்து விட்டார் என்று நினைத்த பார்ப்பனக் கூட்டம் அந்தக் காரின் மீது வெடிகுண்டு வீசி எறிகிறது. அதில் பலர் காயமடைகின்றனர்.

இந்த நிகழ்ச்சியை காந்தியின் உதவியாளராக இருந்த பியாரிலால் அவர்கள் பதிவு செய்து வைத்துள்ளார். மேலும் பியாரிலால் அவர்கள் இதனை இரண்டாவதாக நடந்த கொலை முயற்சி என்றே குறிப்பிடுகிறார். அப்படியானால் இதற்கு முன்பே ஒரு கொலை முயற்சி நடந்துள்ளது. ஆக இந்தக் கொலை முயற்சிகள் (1930 மற்றும் அதற்கு முன்) நடந்தபோது பாக், பிரிவினை கோஷமோ அல்லது பாக். 55 கோடி நிதிகேட்டு நஷ்ட ஈடு கோரிக்கையோ எழவில்லை என்பது உண்மை.

கோட்சே காந்தியைச் சுடுவதற்கு முன்னால் தன் ஒருகையில் இஸ்மாயில் என்று பச்சைக் குத்திக் கொண்டான். எப்படியும் காந்தியைச் சுட்டதும் தன்னை மக்கள் கொன்று விடுவார்கள். தன் பிணத்தைச் சோதிக்கையில் சுட்டது ஒரு முஸ்லிம் என நம்புவார்கள். நாடு முழுவதிலும் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுவார்கள். இந்து ராஷ்ட்ராவுக்கு வித்திட இது உதவும் எனக் கோட்சே திட்டமிட்டான். ஆனால் மக்கள் கோட்சேவை உயிரோடு பிடித்துவிட்டார்கள்.

காந்திஜியைக் கொலை செய்தது இன்றைய ஃபாசிஸ்டுகளின் அன்றைய முன்னோடிகள் என்பது அம்பலமாயிற்று.

– நன்றி இந்தியா டுடே, ஆகஸ்ட்-5, 98

அதுபோல் இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சி என்னவென்றால் 1934-இல் காந்தி புனேயில் கலந்துகொண்டது தீண்டாமை ஒழிப்பு நிகழ்ச்சி ஆகும்.

## 1948-இல் காந்தியைக் கொலை செய்ய இரண்டாம் முயற்சி

அதற்குப்பிறகு இரண்டு முயற்சி நடக்கிறது. கோட்சே காந்தியாருடன் நேரடிப் பேச்சு நடத்த அனுமதி கேட்கிறான். காந்தி அனுமதி கொடுத்த பின்னரும் அவன் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வரத் தயாராக இல்லை. அதற்குப் பிறகு கொலை செய்வதற்கு 10 நாட்களுக்கு முன் அவர் தங்கியிருந்த பிர்லா மாளிகையில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்ற பொழுது, அங்கேயே குண்டு வைத்து கொலை செய்யும் முயற்சியும் நடைபெற்றது. இதிலும் அரை டஜன் பார்ப்பனர்கள்தான் ஈடுபட்டார்கள். மதில்மேல் ஒருவன், காந்தியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒருவன், வேலையாட்கள் அறையிலேயே 2 பேர், வெளியிலேயே ஒருவன், வெளியில் இருப்பவனிடமிருந்து சைகை கிடைததவுடன் மதில்மேல் இருப்பவன் கூட்டத்தில் குண்டை வீசி பதற்றத்தை உருவாக்க வேண்டும்.

ஒற்றைக் கண் மனிதன் ஒருவன் வேலையாட்கள் இருந்ததால் கெட்ட சகுனம் என்று முயற்சியைக் கை விடுகிறார்கள்.

ஆனால் முதலில் குண்டு வீசுபவன் கூட்டத்தை நோக்கி வீசி விடுகிறான். அதனால் அவன் பிடிபடுகிறான். குண்டு வீசியதாகக் கைது செய்யப்பட்ட



அந்தப் பார்ப்பான், ஓர் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர். அவன் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. இதை மறுக்க முடியாது.

### காந்தி கொலை

10 நாட்களுக்குப் பிறகு காந்தியாரை கோட்சே சுடுவதற்கு முன் வணங்குகிறான்.

ஏன் தெரியுமா? பார்ப்பான் தர்மப்படி முதலில் பிரணாயம் செய்ய வேண்டும். அதாவது வணங்க வேண்டும்.

இப்பொழுது ராம. கோபாலன், இல. கணேசன் போன்றவர்கள் கோட்சேயை ஆர்.எஸ்.எஸ். காரர்தான் என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? என்று சவால் விடுகிறார்கள். இநதச் சவாலுக்கு சரியான பதிலைச் சொல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது.

கோட்சே ஆர்.எஸ்.எஸ்.காரன்தான் என்பதை நிரூபிக்க கோட்சேவின் தம்பி கோபால் கோட்ஸே ஒரு சாட்சியாக ஆகலாம். இவனும் காந்தியார் கொலையில் பங்கெடுத்து தண்டனை பெற்றவன். ஆயுள் தண்டனை. இவன் விடுதலை யான பின் 2 புத்தகங்கள் எழுதியுள்ளான். 1. நான் ஏன் காந்தியைக் கொலை செய்தேன்? (Why I assassinated Gandhi?) 2. May it Please your Honour

இந்த இரண்டு புத்தகங்களின் வெளியீட்டு விழா 1993ம் ஆண்டு டிசம்பர் மாதம் டெல்லி யில் நடைபெற்றது. அதில் பேசிய கோபால் கோட்சே கூறுகிறான்.

நாங்கள் வீட்டிலுள்ள 4 சகோதரர்களும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். நாங்கள் வீட்டில் வளர்ந் ததை விட ஆர்.எஸ்.எஸ்.ஸில் வளர்ந்ததுதான் அதிகம் என்று சொல்லலாம். நாதுராம் ஒரு அறிவார்ந்த ஊழியன். காந்தி கொலை செய்யப் பட்டபின் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு சில நெருக்கடி இருந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் நாதுராம் ஆர்.எஸ்.எஸ்.ஸை விட்டு வைக்க வில்லை.

**கோழைகள்**

நான் அத்வானியைக் கண்டிருக்கிறேன். நாதுராம் ஆர்.எஸ்.எஸ். தொண்டர் அல்ல என்று கூறுபவர்கள் கோழைகள். அதுபோல் ஆர்.எஸ்.எஸ். காந் தியைக் கொல்வதற்கு தீர்மானம் போடவில்லையே என்றும் கேட் கலாம். ஆனால் நாதுராமை ஆர்.எஸ்.எஸ். இல்லை என்று புறக்கணிக்க முடியாது. நாது ராமை இந்து மகாசபை ஏற்றுக் கொள்கிறது. அவன் இந்து மகா சபையில் இருந்துகொண்டே ஆர்.எஸ்.எஸ்.ஸில் அறிவார்ந்த முறையில் வேலை செய்தான்.



கோட்சே நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போது நான் அவரை (காந்தியை) குண்டு மழையால் நனைத்தேன். நான்தான் அவரைச் சுட்டேன். நான் நினைக்கிறேன் இது சரியான காரியமென்று.

அவர் (காந்தி) இந்துக்களுக்கு ஆதரவாக இல்லை. முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருந்தார். உண்மையான இந்துக்கள் நாட்டில் இருக்கின் றார்கள் என்பதை நிரூபிப்பதற்காகவே அவரைச் சுட்டேன் என்று கூறுகிறான்.

அதுமட்டுமல்ல அவன் காந்தியைக் கொலை செய்யச் சென்றபோது ஒரு கையில் பகவத்கீதை புத்தகத்தையும் இன்னொரு கையில் பிரிக்கப் படாத இந்தியா வரைபடத்தையும், ஆர்.எஸ்.எஸ். கொடியையும் தாங்கி வந்தான் என்று அவனுடைய வாக்குமூலம் பற்றிய புத்தகத்தில் கோபால் கோட்சே கூறியிருக்கின்றான்.

அதுமட்டுமல்ல, நாதுராம் கோட்சேயை தூக்கில் போடுவதற்காக அழைத்துச் செல்லப் படும்போது 1940களில் ஆர்.எஸ்.எஸ். ஷாஹாக் களில் ரகசியமாகப் பாடப்படும் பாடலைத்தான் பாடிக்கொண்டே சென்று இருக்கின்றான்.

அதுமட்டுமல்ல, மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதை எழுதியிருக்கிறார். அதில் நாதுராம் கோட்சே ஓர் ஆர்.எஸ்.எஸ். காரன் என்று பதிவு செய்திருக்கின்றார்.

காந்தி சமாதியைச் சுற்றிப் பார்க்கச் சென்ற போது அங்குள்ள வழிகாட்டி தாமோதரன் நாயர் கோட்சே ஓர் ஆர்.எஸ்.எஸ்.காரன் என்று கூறி வந்திருக்கின்றார். மொரார்ஜி தேசாய் செல்லும் போது அவ்வாறே சொன்னார். அவர் உடன் சென்றவர் சிக்கந்தர் பக்த் என்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உள்ளவர்.

மேலும் வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்தார். வழிகாட்டி (Guide) இவ்வாறு சொன்னதும் சிக்கந்தர்

பக்திற்கு கோபத்தை மூட்டியது.

அடுத்த நாளே ஆர்.எஸ்.எஸ். வெறியர்களால் அந்த வழிகாட்டி அடித்து உதைக்கப்பட்டார். அடுத்து வந்த இரண்டு நாட்களில் அந்த வழிகாட்டியை வேலை நீக்கம் செய்திருக்கின்றார்கள் என்பது வரலாறு.

எனவே இப்படிப்பட்ட அடக்குமுறைகளைப் பயன்படுத்தி இந்துத் துரோக வரலாற்றை இதுவரை மறைத்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் இதை மறைக்க முடியாத காலக்கட்டம் இப்பொழுது வந்திருக்கின்றது. இதை எடுத்துச் சொல்ல வேண்டியது நமது கடமையாக இருக்கின்றது.

ஆகவே காந்தியார் நினைவு நாள் என்பது பார்ப்பன ஃபாசிஸத்திற்கு எதிரான நாள் என்பதாக இருக்க வேண்டும். இந்தப் பிரச்சார இயக்கங்கள் தொடர்ந்து நடக்க வேண்டு. இதற்கு ஏற்பாடு செய்த எம்.என்.பி-க்கு நன்றிக் கூறிக்கொள்கிறேன். இவ்வாறு விடுதலை ராஜேந்திரன் தன் உரையில் குறிப்பிட்டார். •

# யார் இந்த சவார்கர்?

இவர் மராட்டிய மாநிலத்தின் சித்பவன் பிராமணர்கள் இனத்தில் *1883*, மே *28*ஆம் நாள் பிறந்தார். நாசிக்குப் பக்கத்திலுள்ள பகுர் என்பதுதான் இவர் பிறந்த ஊர்.

தந்தையின் பெயர் தாமோதர், தாய் ராதா பாய் சவார்கர். கணேஷ் சவார்கர், நாராயணன் சவார்கர் என இரண்டு சகோதரர்களும், மைனா என்ற சகோதரியும் உடன் பிறந்தவர்கள்.

முஸ்லிம்களை வெறுப்பதும் - இஸ்லாத்தை வெறுப்பதும் இளம் வயதிலேயே இவரிடம் மூர்க்கத்தனமாக இருந்திருக்கின்றது. தாள முடியாத இந்த வெறுப்பால் *12* வயதிலேயே ஒரு வகுப்புவாத கலவரத்தை முஸ்லிம்களுக்கு எதிராக முன்னின்று நடத்தி இருக்கின்றார்.

தொடர்ந்து வகுப்புக் கலவரங்களை நடத்துவதிலும், அதற்கான பழியை முஸ்லிம்கள் மேல் போடுவதிலும் மிகப்பெரிய புத்திசாலித்தனமாகத் தன்னைக் காட்டினார். இதனால் இவரது நண்பர்கள் வட்டாரம் இவரை வீர சவார்கர் என அழைத்தது.

இவருக்கு இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் கோபம் பொங்கியதற்குக் காரணம்.

இஸ்லாம் பிரகடனப்படுத்திய சமத்துவம், சகோதரத்துவம். இதன் பயனாய் ஜாதிக் கொடுமைகளுக்கு ஆளாகி நின்ற மக்கள் அணி, அணியாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது, இவருக்கு வெறுப்பையும் கோபத்தையும் அதிகப்படுத்தியது.

இவருடைய வெறுப்புக்கு இன்னொரு காரணம், இவர் பிறந்த சித்பவன் பிராமணர்கள் ஜாதிய அடுக்கு முறைகளைத் தீவிரமாக ஆதரிப்பவர்கள். அந்த ஜாதிய அடுக்கு முறைக்கு எதிராக நிற்கும் எந்தக் கொள்கையையும், அந்தக் கொள்கையின் பிரதிநிதிகளாக நிற்கும் யாரையும் இவர்கள் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்கள். இதனால் இஸ்லாம் இவர்களின் வெறி முஸ்லிம்கள் இவர்களின் நிரந்தர எதிரிகள்.

இதனால் இவர்கள் இந்துக்களை வன்முறைக்குத் தயார் செய்வதை சதாசர்வ காலமும் தங்கள் பணியாகக் கொண்டவர்கள்.

இன்றளவும், இவர்கள் பின்பற்றி வரும் இந்து மதத்தை ஒரு வன்முறை வெறியோடு வளர்க்க முனைந்தவர்கள். இவர் பிறந்த மராட்டிய மாநிலத்தில்தான் Militant Hindu Nationalism இராணுவ இந்து தேசம் வளர்ந்தது என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

நாட்டின் மிகப்பெரிய தீவிரவாத செயல்களுக்குப் பின்னால் இவர்கள்தாம் இன்றளவும் இருக்கின்றார்கள். இதில் காந்திஜியின் கொலை ஒரு நிகழ்வுதான். (ஆதாரம் Hindu Nationalism : Chelen Bhatt)

### ஜாதியம் இவர்களின் வெறி?

சில ஆய்வாளர்களின் கருத்துக்களின்படி காந்திஜியை இவர்கள் கொலை செய்வதை லட்சியமாகக் கொண்டிருந்தார்கள். இதற்காகப் *10* முறை முயற்சி செய்தார்கள். காந்திஜி,

தலித்கள், தீண்டத்தகாத மக்கள் இவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்ததும் அவர்களை மனிதர்களாக மதித்து சமமானவர்களாக நடத்திட எடுத்த முயற்சி இவற்றால்தான் காந்திஜியின் மேல் கடுப்பும், கோபமும் என்கின்றார்கள். (விரிவாக பார்க்க, விடுதலை இராஜேந்திரனின் உரை)

தலித் எழுத்தாளர் வி.டி.ராஜசேகர் அவர்கள், இஸ்லாமும் முஸ்லிம்களும் தாக்கப்படுவதேன் என்ற கேள்விக்குப் பதில் சொல்லிடும்போது இந்தியாவில் "Egalitarianism" என்ற சமத்துவத்தைப் பறை சாற்றிக் கொண்டிருப்பதால்தான் அது தாக்கப்படுகின்றது என்கின்றார். (Who Made Indian Muslims Communal : By VTR also, India's Muslims Problem: By VTR)

ஆக வருணாஸ்ரத்தில் அதீத நம்பிக்கை கொண்ட சித்பவன் பிராமணர்களுக்கு இஸ்லாத்தின் மேலுள்ள காட்டும் கசப்பும் புரையோடிப்போன ஒன்று.

சவார்கர் தன் வெறுப்பை மராட்டிய மாநிலத்தில் வாழ்ந்தபோது வகுப்புக் கலவரங்களை ஏற்பாடு செய்வதில் மட்டும் காட்டிக் கொண்டிருக்க வில்லை. உயர் படிப்பிற்காக லண்டன் சென்றபோதும் அதைக் காட்டினார்.

**லண்டனில் சவார்கர்**

அன்றைய நாட்களில் உயர்கல்வி என்பது லண்டன் சென்று படிப்பது என்றே இருந்தது. இந்தப் பின்னணியில் சவார்கரும் லண்டன் சென்றார் சட்டம் படிக்க. 1902-இல் யமுனா பாய் என்ற பெண்ணை மணந்தார். இந்த நிலையில் அவருடைய தந்தை இறந்து போனதால் மாமனார் இராமச்சந்திரா திரியாம்பாக் சிப்லுக்கர்தான் அவருடைய லண்டன் மாநகர் படிப்புச் செலவுகளை ஏற்றுக் கொண்டார்.

லண்டனில் படிக்கச் செல்லும் இந்தியர்கள் அடிக்கடி குழுமுமிடம் "இந்தியா ஹவுஸ்". இதனை முஸ்லிம்கள்தாம் நிறுவி பராமரித்து வந்தார்கள்.

இங்கே அதாவது லண்டன் ஹவுஸ் கூடும் இந்தியர்கள் அரசியல், பொருளாதாரம், சட்டம் போன்றவைப் பறறி அடிக்கர் விவாதங்களை நடத்துவார்கள். நம் நாட்டு விடுதலையைப் பற்றியும் பேசுவார்கள், விவாதிப்பார்கள்.

அதேபோல் இந்தியாவிலிருந்து, அறிஞர்களோ இதர முக்கியமானவர்களோ லண்டன் வந்தால், அவர்களை வைத்து சிறப்பு சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்வார்கள்.

ஆனால் சவார்கர் அங்கே உள்ள வக்கிரமாகச் சிந்திப்பவர்களை கொண்டு அபிநவ் பாரத் என்றொரு அமைப்பை நிறுவினார். இதில் வன்முறையும் குண்டுகள் வைப்பதையும் பற்றி அதிகமாக விவாதித்தார்கள் குண்டுகள் செய்வதைப் பாடமாகக் கற்றுக் கொடுத்தார்கள்.

இந்த அபிநவ் பாரத் என்ற அமைப்பின் இன்றைய வடிவத்தை காந்திஜியைக் கொலை செய்த கோட்சேயின் குடும்பத்தினர்தான் நடத்தி வருகின்றார்கள்.

இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள்தாம் மும்பைக்குப் பக்கத்திலுள்ள மாலேகான் பகுதியில் இரண்டுமுறை குண்டுகளை வைத்தார்கள்.

இந்தக் குண்டு வெடிப்புகளைப் புலனாய்வு செய்த நேர்மையான காவல்துறை அதிகாரி ஹேமநத் கர்கரே அவர்கள், நாட்டில் நடந்த பல குண்டு வெடிப்புக்கள் இந்த அபிநவ் பாரத் என்ற அமைப்பின் கைவண்ணம்தான் என்பதைக் கண்டுபிடித்தார். அத்தோடு இந்தக் குண்டு வெடிப்புகள் வழி இவர்கள் இந்தியாவை ஆரியவர்க்க இந்து ராஷ்டிரமாக ஆக்கிட முயற்சி செய்கின்றார்கள் என்பதையும் கண்டுபிடித்தார். அதனால் அவரை கொலை செய்வதற்காக நவம்பர் 26 ஆம் நாள் 2008 ஆம் ஆண்டில் மும்பை தாக்குதலை நடத்தினார்கள். அதில் அவரை கொலையும் செய்தார்கள்.

இன்றைய அபிநவ் பாரத் அமைப்பின் உறுப்பினர்களாக நமது இந்திய ராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பல இராணுவ அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர்தான் கலோனல் பிரசாந்த் புரோகித். இவர் இந்தியாவில் இந்து ராஷ்டிரம் அமைக்க இஸ்ரேல் நாட்டில் தலைமையகம் அமைத்துள்ளார். இதற்கும் நம் நாட்டின் பொதுமக்கள் நிதியில் பலமுறை பயணம் செய்திருக்கின்றார். ஆக, அன்றே நச்சுவிதைகளை விதைத்தவர் சவார்கர்.

**ஆங்கிலேயே அதிகாரி கொலை**

இவர் தன்னுடைய போதனைகளை ஏற்ற சிறுவர்களை ஏவி ஆங்கிலேய அதிகாரி ஒருவரை

மராட்டிய மாநிலத்தில் குண்டு வைத்துக் கொலை செய்தார். இதில் கைதானவர்கள் தங்களைப் பயிற்றுவித்தவர் சவார்கர்தான் எனக் கூறிவிட்டார்கள். அதனால் கைது செய்யப்பட விருந்தார். தகவலறிந்து பாரிஸ் நகருக்கு தப்பி ஓடிவிட்டார். ஆனால் பாரிசில் வைதது கைது செய்யப்பட்டார். இந்தியா கொண்டு வரப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பெற்று, அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆங்கிலேயர்களிடம் அடங்கி ஒடுங்கி மன்னிப்புக் கேட்டு தப்பித்தார். இவர் அடுத்தவர்களை ஏவி கொலைகளையும், குண்டு வெடிப்புகளையும் செய்வதில் வல்லவர். தான் அதில் சிக்கிக்கொள்வோம் என்ற நிலை வருகின்றபோது உலகமகா கோழையாக மாறி மன்னிப்புக் கேட்பார்.

இவர் நம் நாட்டில் ஆயிரக்கணக்கான இல்லை லட்சக்கணக்கான விடுதலைப் போர் வீரர்களையும், அவர்களின் குடும்பங்களையும் ஈவு இரக்கமின்றிக் கொலை செய்த ஆங்கிலேயர் களிடம், உயிர்ப்பிச்சைக் கேட்டு மன்றாடிய கோழை!

நம் நாட்டை வேட்டையாடி, அத்தனை கனிம வளங்களையும் சூறையாடிய ஆங்கிலேயர் களுக்கு ஆயுள் உள்ளவரை அடிமையாகக் கிடப்பேன் என எழுதித் தந்தவர். இவருக்குப் பேர் வீர சவார்கராம். வீரம் என்ற சொல்லுக்கு இழுக்கு இவரால்தான் வந்தது. **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயலை செய்து காட்டியவர்.**

எப்படி ஆங்கில அதிகாரியை கொலை செய்ய சிலரை ஏவி சிக்க வைத்துவிட்டு தப்பி விட்டாரோ அதபோல்தான் சுதந்திர இந்தியா வின் முதல் தீவிரவாத செயலையும் அதாவது காந்திஜியை கொலையையும் செய்தார்கள்.

காந்தியைக் கொலை செய்வதற்காக இவர் சில இளைஞர்களை மூளை சலவைச் செய்தார். அவர்களிடம் வெடி குண்டுகளையும், துப்பாக்கி களையும் தந்தார். அவர்களிடம் காரியத்தைக் கச்சிதமாக முடிக்க வேண்டும் என்றார். பின்னர் முடிக்காமல் திரும்பக் கூடாது என்றார்.

வரலாற்றில் இவர் அந்த இளைஞர்களுக்கு இட்ட கட்டளை என்ன தோரணையில் இருந் தது என்றால் காந்திஜியை முடிக்காமல் வந்தால் அதாவது கொலை செய்யாமல் வந்தால் உங்களைக் கொன்று விடுவேன் என்பதுபோல் அமைந்தது.

பின்னர் அவர்கள் சிக்கிக் கொண்டார்கள். இந்த வீர(?)சவார்கர் மன்னிப்புக் கேட்டுவிட்டு தப்பித்துவிட்டார்.

**மகாத்மா காந்தி கொலை வழக்கிலிருந்து சவார்கர் தப்பியது எப்படி?**

சவார்கர்தான் காந்திஜியைக் கொலை செய்திடும் வெறியோடு அலைகின்றார். அதற் கான திட்டங்களைத் தீட்டுகின்றார் என்பதை உளவுத்துறையின் மூலம் அரசு அறிந்தே இருந் தது. ஆனால் யாரும் அதைத் தடுக்க முயற்சி செய்யவில்லை. இதற்கு சான்றாக ஒரு நிகழ்வைத் தருகின்றோம்.

காந்திஜி அவர்களைக் கொலை செய்தது ஜனவரி 30, 1948. ஜனவரி 31, 1948-இல் மராட்டிய மாநில உளவுத்துறை அதிகாரி நாகர்வாலா ஒரு தாக்கீதை மத்திய அரசுக்கு அனுப்புகின்றார். அதாவது மகாத்மா காந்திஜி அவர்கள் கொல செய்யப்பட்ட அடுத்த நாளே மராட்டிய மாநில உளவுத்துறை அதிகாரி ஓர் அறிக்கையை அனுப்புகின்றார் அதில்,

மகாத்மாக காந்திஜியைக் கொலை செய்வ தற்கான மொத்த திட்டமும் பம்பாயிலுள்ள சவார்கர் சதான் என்ற சவார்கர்-இன் வீட்டில் வைத்துதான் தீட்டப் பெற்றது. இந்த வகையில் காந்திஜியை கொலை செய்த கோட்சே, ஆப்தி முதலானோர் சாவர்கரை அருடைய இல்லத்தில் ஜனவரி 14, 17 (1948) ஆகிய தேதிகளில் நீண்ட நேரம் சந்தித்துக் கொலை திட்டம் பற்றிப் பேசி இருக்கின்றார்கள். இதனை சவார்கரின் உதவியாளர்கள் கசார் (Kasar) என்பவரும் டாம்லி (Damle) என்பவரும் என்னிடம் சொன்னார்கள்.

அத்தோடு காந்திஜியைக் கொலை செய்ய அவர்கள் கோட்சே, ஆப்தி ஆகியோர் மும்பை யிலிருந்து புறப்படும் போதெல்லாம் சவார்கர் அவர்களை வழியனுப்பி வைத்திட தவறாமல் வந்துகொண்டே இருந்தார்கள்.

இந்த அறிக்கையின் பின்னிணியில் சவார் கருக்கு எதிரான சாட்சியங்களாக இந்த நகர் வாலாவின் அறிக்கையையும், கசார், டாம்லி

ஆகியோரையும் நீதிமன்றத்தில் நிறுத்தி இருந்தால் சவார்கர் தண்டிக்கப்பட்டிருப்பார். வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருக்க மாட்டார்.

ஆனால் அன்றைய அரசு இதை செய்யாதது ஒரு புதிராகவே இருக்கின்றது என்கின்றார் மூத்த பத்திரிகையாளரும், மூத்த வழக்கறிஞருமான ஏ.ஜி.நூரானி அவர்கள். (ஆதாரம் The Hindu, June 29. 2013)

யார் இந்த நாகர்வாலா? இந்த நாகர் வாலாவின் முழுப் பெயர் ஷம்ஷத் நாகர்வாலா. இவர் அன்றைய பம்பாய் (CID) சி.ஐ.டி. குற்றப் புலனாய்வுத் துறையின் தலைவர். மிகவும் திறமையானவர். இவரிடம்தான் காந்திஜியை கொலை செய்ய நடந்துக் கொண்டிருக்கும் சதியை உளவு பார்க்கும் பொறுப்பையும் விசாரணை செய்யும் பொறுப்பையும் ஒப்படைத் திருந்தார்கள். அப்படி ஒப்படைத்தவர் அன்றைய மும்பையில் வீற்றிருந்த மராட்டிய மாநிலத்தின் உள்துறை அமைச்சர் மெரார்ஜி தேசாய் அவர்கள்தாம்.

அதேபோல் இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். அது காந்திஜியைக் கொலை செய்ய சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் *10* முறை முயற்சிகளைச் செய்தார்கள். அதில் *9*-ஆவது முயற்சி ஜனவரி *20, 1948* -ல் நடந்தது. இதில் முக்கிய முயற்சியை மேற்கொண்டவர் மண்டல்லால்.



**மொரார்ஜீ தேசாய்**

மண்டல்-இன் முயற்சி வெற்றிப் பெற்றிருந்தால் இன்று கோட்சேவுக்கு கோயில்கள் எழுப்பட்டி ருக்காது. இந்த மண்டல் லாவுக் குத்தான் கோயில் எழுப்பப்பட் டிருக்கும்.

இந்த மண்டல்லால் காவல்துறையிடம் சிச்சினான். சவார்கர்தான் தன்னை தயாரித்தது என்பதை தெளிவான சொற்களால் சொன்னான் இதனால்இவருடைய சொற்களை அடிப்படை யாகக் கொண்டு சவார்கரைக் கைது செய்யவும் அனுமதிக் கேட்டார் சி.ஐ.டி. புலனாய்வு காவல் துறை அதிகாரி நாகர்வாலா, அன்றைய மராட்டிய உள்துறை அமைச்சர் மொரார்ஜீ தேசாயிடம் அனுமதி கேட்டார். மொரார்ஜி தேசாய் கோபத் தால் நெருப்பானார். அனுமதிக்க மறுத்து விட்டார். Front Line, 22 Sep to Oct 5, 2012

இவையெல்லாம் நமக்கு ஓர் உண்மையை எடுத்துச் சொல்லும். அது காங்கிரஸ் கட்சிக்குள் இந்துத்துவாவைச் சார்ந்தவர்கள் கொலைகாரரர் களைக் கூட காப்பாற்றிடும், இந்துத்துவா சிந்தனைக் கொண்டவர்கள் நிரம்பவே ஊடுருவி இருந்தார்கள்.

சவார்கரை கைது செய்ய மொரார்ஜீ தேசாய் குறுக்கே நின்றார் என்ற செய்தி நாடெல்லாம் பரபரப்பை ஏற்படுத்தியது. இது மும்பை சட்ட மன்ற மேலசையில் ஏப்பிரல் எட்டாம் நாள் *(1948)* விவாதத்திற்கு வந்தது. அப்போது மொரார்ஜீ தேசாய் இப்படிக் கூறினார் "Savarkar's Past Services are more than offset, by the present desservice"

அதாவது சவார்கரின் முந்தைய சேவைகள் இப்போதைய குற்றத்தை (கொலையை) அளவுக்கு மேல் சரிகட்டிவிட்டது.

**சர்தார் வல்லபாய் பட்டேல்**



இதுபோன்றவர்கள் - அப்போது காங்கிரஸ் கட்சியில் நிரம்பவே இருந்தார்கள். அவர்களுள் ஒருவர்தான், இந்தியாவில் நீண்ட காலம் உள் துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல். இவர் காங்கிரஸ் கட்சியில் இருந்த இன்னொரு இந்துத்துவ சிந்தனைக் கொண்டவர்.

இவர் காந்திஜியைக் கொலை செய்தவர் களைக் காப்பாற்றுவதில் மிகவும் கவனமாக இருந்தார். அன்றைய பிரதமர் பண்டித ஜவஹர் லால் நேரு அவர்கள் பல முயற்சிகளை எடுத்தார். காந்திஜியின் கொலையில் ஈடுபட்ட அனைவரை யும் சட்டத்தின் முன் நிறுத்திட வேண்டும் என் பதில் கவனமாக இருந்தார். ஆனால் வல்லபாய் பட்டேல் எல்லாவற்றையும் கண்காணித்து வரு கின்றேன் எனக்கூறி தட்டிக் கழித்துக்கொண்டே

இருந்தார். பிப்ருவரி *27, 1948* -இல் அவர் நேருவுக்கு இப்படியொரு கடிதத்தை எழுதினார்.

"நான் பாபுஜீயின் கொலை வழக்கு விசாரணையை நாள் தவறாமல் கண்காணித்து வருகின்றேன். இந்து மகாசபையின் தீவிரவாத பிரிவு ஒன்று சவார்கரின் தலைமையின் கீழ்தான் சதிகளைத் தீட்டி இருக்கின்றது. அந்தக் குழுதான் சதி நிறைவேறும் வரை (அதாவது) காந்திஜி கொலை செய்யப்படும் வரை அனைத்தையும் கண்காணித்து வந்திருக்கின்றது.

"அப்படி இந்து மகா சபையையோ ஆர்.எஸ்.எஸ்.-ஐயோ சவார்கரையோ வழக்கில் சேர்க்க வேண்டும் என்றால் அதற்கு முன் அது சம்மந்தமான அறிக்கைகளையும் என் முன் சமர்பிக்க வேண்டும் என அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளேன். அவர்கள் நான் சொன்னவற்றைக் கண்டிப்பாகச் செய்வார்கள் எனக் கருதுகின்றேன். (Source : Sardar patels Correspondence Vol 6, P56 Front Line : 22, Sept - 5 Oct 2012)

அதேபோல் நேருவின் அமைச்சரவையில் ஷியாம் பிரசாத் முகர்ஜி என்றொரு அமைச்சர். இவர் இந்து மகா சபையின் தலைவராகவுமிருந்தார். இவர் பட்டேலுக்கு தொடர்ந்து நெருக்கடிகளைத் தந்து சவார்கரை காப்பாற்றுவதிலும், இந்து மகா சபையை வழக்கில் இணைத்து விடாமலும் பார்த்துக் கொண்டார். (Front Line, 22 to 5 Oct 2012, A.G. Noorani) ஆனால் சவார்கரை சில நேர்மையான அதிகாரிகள் வழக்கில் இணைத்தார்கள். ஆனால் விடுவிக்கப்பட்டார்.

**சவார்கர் ஏன் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்?**

காந்திஜி கொலையை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதியாக ஆத்மசரன் என்பவர் இருந்தார். காந்திஜியைக் கொலை செய்ததில் ஈடுகட்ட டிகம்பர் பாட்ஜே, அரசு தரப்பு ஒப்புதல் சாட்சியாக ஆனார். அவர் சவார்கர்தான் சதியைத் தீட்டினார். காந்திஜியைக் கொலை செய்ய எங்களைத் தயாரித்தார் எனக் கூறினார்.

ஒரு அப்ரூவரின் சாட்சியத்தை தனித்து நிற்கக் கூடிய இன்னொரு சாட்சி (Independent Witness) உறுதி செய்ய வேண்டும். இது இல்லை, அதனால் சவார்கரை தண்டிக்க இயலவில்லை. - இது தீர்ப்பு. இப்படி சில்லரை காரணங்களால் தப்பித்தார் சவார்கர்.

**காந்திஜி கொலையை விசாரித்த விசாரணை ஆணையம்**

காந்திஜி கொலை செய்யப்பட்ட முழுப் பின்னணியையும் விசாரிக்க ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஜே.கே.கபூர், (J.K.Kapur)- தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையம் காந்திஜியை கொலை செய்த சதி என வருகின்றபோது இப்படிக் கூறியது.

"All these facts taken together were destrutive of any theory other than the conspiracy to murder by Savarkar and his group" The Hindu, June 29, 2013

இதன் பொருள் - இந்தத் தகவல்கள் கொலையை சவார்கரும் அவருடைய கூட்டமும் தான் திட்டமிட்டது என்பதை நிரூபிக்கின்றன ஏனைய அனுமானங்கள் அனைத்தையும் உடைத்து விடுகின்றது. சவார்கர் இதில் ஒரு மன்னிப்புக் கடிதம் கொடுத்தார். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. (The Hindu June 29, 2013)

**சவார்கரும் இந்துத்துவாவும்**

சவார்கர் *1921-24* களில் அந்தமான் சிறையில் இருந்தபோதுதான் அவர் இந்துத்துவா என்ற கொள்கையை வளர்த்து ஒரு நூலையும் எழுதினார். அதன் பின்னர்தான் இந்துத்துவா என்ற கொள்கை நாட்டில் உலாவந்தது என்ற வரலாறு இப்போது வரையப்பட்டிருக்கின்றது.

இதனை பலரும் மேற்கோள் காட்டுகின்றார்கள். நாம் ஆய்வு செய்த வரை ஆரியவர்த் இந்து ராஷ்ட்டிரா, முஸ்லிம் வெறுப்பு, இஸ்லாத்தை இடித்துரைப்பது, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை இந்து மதத்திற்கு மாற்றுவது இவையெல்லாம் இந்து மகா சபையின் கொள்கைகள். சுருக்கமாகச் சொன்னால் *1800* களிலே உலா வந்தது. இதில் சவார்கர் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார் அவ்வளவுதான்.

**நாடாளுமன்றத்தில்**

காந்திஜியின் புகைப்படமும், அவரை கொன்றவரின் புகைப்படமும் நமது நாடாளுமன்றத்தில் அருகருகே வைக்கப்பட்டிருக்கின்றது என்னே விநோதம்!

**- MGM**



# காந்தி கொலை வழக்கு நீதிமன்றத்தில் கோட்சேவுடன் சவார்கர் பேச மறுத்தது ஏன்?

நாள், இடம்: ஜனவரி *14, 1948*, பம்பாய் பின்னப்பட்ட சூழ்ச்சி, காந்தியை கொலை செய்தல் திகம்பர் பாட்ஜே - சவார்கருக்கு எதிராக இருந்த ஒரே சாட்சியம். அப்ரூவராக மாறினான். அவன் அளித்த வாக்குமூலம்

ஜனவரி *14, 1948*, பம்பாயில் வைத்து அவர்கள் சந்தித்து கொண்ட பின் சவார்கரின் இல்லம் நோக்கி ஆப்தேவும் கோட்சேவும் நகர்ந்தனர். "என்னை வெளியே இருக்குமாறு ஆப்தே கூறினான். கோட்சேவும், ஆப்தேவும் உள்ளே சென்றனர். *5-10* நிமிடங்களில் அவர்கள் இருவரும் வெளியே வந்தனர். என்னை பார்த்து ஆப்தே கேட்டான் - அவர்களுடன் டெல்லி போக தயாராக இருக்கின்றாயா?

டெல்லியில் என்ன வேலை என்று நான் அவனிடம் கேட்டேன்.

ஆப்தே: காந்திஜி, ஜவஹர்லால் நேரு மற்றும் சுக்ரவர்த்தியின் கதையை முடித்து விட வேண்டும் என சவார்கர் முடிவெடுத்துள்ளார். அந்த வேலையை அவர்களை நம்பி ஒப்படைத்துள்ளார். எனவே நீ கண்டிப்பாக அவர்களுடன் டெல்லி செல்ல வேண்டும்".

ஜனவரி *17* -பம்பாய் - பாட்ஜே திரும்பி வந்தான். கோட்சேவையும் ஆப்தேவையும் சந்தித்தான்.

"நாங்கள் டாக்சியில் இருந்து இறங்கினோம். சவார்கரின் இல்லம் நோக்கி நகர்ந்தோம். சவார்கரின் வீட்டு வளாகத்திற்கு வெளியே சங்கரை காத்திருக்குமாறு கூறிவிட்டு நானும், ஆப்தே, கோட்சே வீட்டினுள் நுழைந்தோம். என்னை கீழ்தளத்தில் காத்திருக்குமாறு கூறிவிட்டு கோட்சேவும் ஆப்தேவும் மேல் தளத்திற்கு சென்றனர். *5-10* நிமிடங்களில் அவர்கள் கீழே வந்தனர். அவர்களை தொடர்ந்து சவார்கரும் வந்தார்.

வெற்றியுடன் திரும்பி வாருங்கள் என்று கோட்சேவிடமும், ஆப்தேவிடமும் கூறினார் சவார்கர். நாங்கள் நால்வரும் ஒரு டாக்சியில் ருயா கல்லூரியை நோக்கி நகர்ந்த நேரம் டாக்சியில் வரும் போது ஆப்தே இப்படி கூறினான். காந்தியின் கதை முடிந்துவிட்டது என சவார்கர் கணித்துள்ளார். எந்த சந்தேகமும் வேண்டாம். நம் வேலை வெற்றிகரமாக முடியும் என்றான்".

**நீதிபதியின் குறிப்புகள்:**

*20/07/1948* முதல் *30/07/1948* வரை விசாரணை, குறுக்கு விசாரணை நடைபெற்றது. ஏழு நாட்கள் பாட்ஜேவிடம் குறுக்கு விசாரணை நடைபெற்றது. *1966* ஆம் ஆண்டு முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ஜிவான் லால் கபூரின் முன்னிலையில் அவனுடைய சாட்சியங்கள் உறுதிபடுத்தப்பட்டன.

சவார்கரின் இரண்டு உதவியாளர்கள் அவன் முன் கொண்டு வரப்பட்டனர். ஒருவர்- அப்ப ராம் சந்திரா, சவார்கரின் மெய்காப்பாளர். மற்றொருவர்- கஜனன் விஷ்ணு தாம்லே, சவார்கரின் செயலாளர். அவர்கள் இருவரும் கோட்சேவும், ஆப்தேவும் சவார்க்கரை சந்தித்தனர் என்ற பாட்ஜேவின் கூற்றை உறுதிபடுத்தினர். எல்லா சாட்சியங்களையும் விசாரித்த பின் நீதிபதி கபூர் முடிவை சொன்னார். " நடந்த எல்லா உண்மைகளையும் இணைத்து

பார்க்கும் பொழுது கொலைக்கான சதித்திட்டத்தை நிறைவேற்றியவர்கள் சவார்கர் மற்றும் அவனுடைய சகாக்கள் என்ற வாதத்தை தவிர வேறு எந்த வாதத்தையும் நிரூபிக்கவில்லை.



**நீதிமன்றத்தில் நடந்தது என்ன?**

கோபால் கோட்சே, D.S. பர்சூர் ஆகியோருக்காக வாதாடியவர் P.L. இனாம்தர். அவர் The - Story of the Trail in the Red Fort என்ற புத்தகத்தில் இப்படி கூறினார்:

செங்கோட்டையில் நடந்த ஒட்டுமொத்த விசாரணையின் போதும் ஒரு தடவை கூட தனது இடது பக்கம் அமர்ந்திருந்த கோட்சேவை திரும்பிக் கூட சவார்கர் பார்க்கவில்லை. குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டாலும் சிலையை போன்று அமைதியாக இருந்தார் சவார்கர். நீதிமன்றத்தில் வைத்து என்னுடன் ஒரே ஒரு தடவை தான் அவர் பேசினார். நான் நினைத்தேன், ஒருவேளை அவர் நீதிமன்றத்தில் வைத்து இப்படித் தான் நடக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்க வேண்டும். நாதுராம் உடன் இணைந்து அல்லது குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களுடன் இணைந்து சதி செயலில் ஈடுபட்டார் என்ற குற்றசாட்டிலிருந்து தன்னை பாதுகாத்திட.

நான் நாதுராமிடம் பலமுறை பேசிடும் போதும் அவர் ஒன்றை குறிப்பிட்டார். நீதிமன்றத்தில் வைத்தும் செங்கோட்டையில் நடந்த விசாரணையின் போது ஜெயிலில் வைத்தும் விளைவுகளை மனதிற்கொண்டு என்னை அவர் (சவார்கர்) வெளிப்படையாக தவிர்த்தது என்னை மிகவும் பாதித்து விட்டது என்றார். சிறையில் தனிமையில் இருந்த போது சவார்கர் தன் கரம் பிடித்து ஆறுதல் வார்த்தைகளை சொல்லிட மாட்டாரா அல்லது தன்னை பரிவுடனாவது பார்த்திட மாட்டாரா என கோட்சே ஏங்கினார். சிம்லா உயர்நீதிமன்றத்தில் வைத்து நான் இறுதியாக கோட்சேவை சந்தித்த நேரத்திலும் சவார்கரினால் தான் மனமுடைந்து போனதை குறிப்பிட்டார்.

காந்திஜி படுகொலை வழக்கில் தான் குற்றமற்றவர் என்று வாதிடும் வகையில் ஒரு வாக்குமூலத்தை தயாரித்து வைத்திருந்தார் சவார்கர்.

மகாத்மாவின் ஆளுமைகளை அடிக்கடி, மிகவும் உளபூர்வமாக பாராட்டிடும் போதும், புகழும் போதெல்லாம் சுதந்திர இந்திய அரசால் காந்திஜி கொலை வழக்கில் தானும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருப்பதை எண்ணி நொந்து கொண்டதை போல் தன்னுடைய வாக்குமூலத்தை அவர் வாசித்தார்.

உண்மையில், இதை படிக்கும் போது தன்னுடைய கண்ணீரைதுடைத்துக் கொண்டார். காந்திஜி படுகொலையை பற்றி தான் எதுவும் அறியாதவன் என்று அவர் வாதித்தார்........."

இவையெல்லாம் தெரியாமல் தான் சவார்கரை வீர் சவார்கர் என்று சங்பரிவாரத்தினர் புகழ்கிறார்கள் என்று சொல்வதிற்கில்லை. உற்று நோக்கினால் சவார்கரின் பண்பும் அவரை பின் பற்றுபவர்களின் பண்பும் தெளிவாக புரியும்.

*ஆதாரம்:* Frontline, *அக்டோபர் 14,-2-16*

- அபூஹாசின்

**காந்தி ஜி கொலை செய்யப்பட்ட தினத்தை முன்னிட்டு வெளிவந்த நூல்**





# கரையைத் தாண்டிய ஒகியும் கதிகலங்கிய குமரியும்

இந்தியாவின் கடைகோடியாம் குமரிமுனை தன் வாழ்நாளில் ஒருபோதும் கண்டதில்லை அந்த நாளை அதனால் அது கதிகலங்கியது. ஆம் நவம்பர் 30, 2017. குமரி மாவட்டம் ஒகி புயலின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்டது.

தங்கள் வீடுகளில் அமர்ந்து எங்கோ புயலால் பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளை வண்ண தொலைக்காட்சிகளில் பார்த்து பழகிவந்த குமரி மாவட்ட மக்கள் ஒகி புயலின் தாண்டவத்திற்கு தங்கள் உடைமைகளையும், உயிர்களையும் கொண்டு இறையாகினர். நம்பவர் 30, 2017 அன்று காலை வைகறைக்கு முன் ஒகி தன் சீற்றத்தை ஆரம்பித்து குமரி மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முடக்கிப் புரட்டிப் போட்டது.

புயலின் கோரத்தால் அங்கு பல வீதிகளிலும், தெருக்களிலும் தங்கள் தோட்டங்களிலும் லட்சக்கணக்கில் மரங்கள் சாய்ந்தன. பலரின் வீடுகள் இடிந்தன. வீட்டின் கூறைகள் பறந்தன. தென்னை மரத்தின் ஓலைகள் மரத்திலிருந்து பிடுங்கப்பட்டு வீசி எறியப்பட்டன. நான்கு பெயரின் உயிர்கள் இறையாயின எங்கும் மக்களின் ஓலங்கலாக ஒலித்துக்கொண்டே இருந்தன.

### இருண்டது குமரி மாவட்டம்

ஒகி புயலின் வேகம் மின் கம்பங்களை விட்டு வைக்கவில்லை. ஆங்காங்கே மின் கம்பங்கள் சாய்ந்து மின் வேலிகள் அறுபட்டு சுமார் ஆறு நாட்கள் குமரி மாவட்டம் இருளில் மூழ்கியது. சுமார் 5000 முதல் 7000 மின் கம்பங்கள் சரிந்தன. துரித நிலையில் பழுதுகளை பார்த்ததால் ஆறு நாட்களில் மின் வசதியை மீண்டும் பெற முடிந்தது. ஆயினும் கீரிப்பாறை போன்ற மலை, எஸ்டேட் பகுதிகளில் இன்னும் மின் வசதி வரவில்லை. காரணம் சுமார் 20 கி.மீ. தொடராக மின் கம்பங்கள் வீழ்ந்துக் கிடக்கின்றன. ஆக சுமார் ஆறு இரவுகள் குமரி மாவட்டம் ஓர் இருண்ட பூமியாக காட்சியளித்தது.

### வெள்ளப் பெருக்கின் பிடியில் மக்கள்

வெறும் புயல் மட்டுமல்லாமல் சுமார் மூன்று நாட்கள் அங்கே மழை தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. குமரி மாவட்டத்தின் பெரும்



அணையான பேச்சிப்பாறையும், பெருஞ் சானியும் நிரம்பியதால் அணை திறக்கப்பட்டது. தன் வழியிலே பெருக்கெடுத்த தண்ணீர் கன்னியாகுமரி சுசீந்திரம், ஆஸ்ரா மடத்தை மூழ்கடித்தது. இவ்வூரின் இடையே ஓடும் பழையாறு வழியாக தீயணைப்பு படையினர் பொதுமக்கள் உதவியோடு படகு வசதிகொண்டு அப்பகுதி மக்களை பாதுகாப்பான இடத்திற்கு இடமாற்றினார். 01, டிசம்பர் 2017 முதல் 05 டிசம்பர் 2017 வரை அவ்வூர் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றி ஆங்காங்கே தங்க வைக்கப்பட்டனர்.

### நிவாரண பணியில் இஸ்லாமிய சமுதாயம்

புயலின் சீற்றத்தின் முதல்நாள் முதலே தங்களின் நிவாரண பணியில் இஸ்லாமிய அமைப்புகள் தங்களை களம் இறக்கிக் கொண் டன. வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் த.மு.மு.க. ஜாக் பி.எஃப்.ஐ. போன்ற அமைப்பு களின் நிவாரண பணி பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களுக்கு ஓர் இன்றியமையதாக அமைந்தது.

### சேதமடைந்த மரங்களை நீக்கும் பணி

சுமார் 35-40 வருடங்களாக நிழல் கொடுத்த மரங்கள் தெருவின் குறுக்கே வீழ்ந்து போக்குவரத்தை பாதிப்புக்குள்ளாக்கியது, மரம் வீழ்ந்ததால் பல வீடுகள் பாதிப்புக்குள்ளாகின. அங்கே களம் இறங்கியது இடலாக்குடி முஸ்லிம் இளைஞர்கள் மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டக்குழு ஓர் சமுதாய உறுப்பின ரால் மரம் வெட்டும் இயந்திரம் இணாமாக கொடுக்கப்பட்டது. இறைவனின் மிகப்பெரிய உதவியால் அவ்வியந்திரத்தைக் கொண்டு இக்குழு சுமார் 40 மரங்களை அப்புரப்படுத் தியது, போக்குவரத்து பாதைகள் சீராகின. சில இடங்களில் தங்களின் உயிரகளை பணை யவைத்தும் மரங்கள் வெட்டப்பட்டன. மின் ஊழியர்களின் சிரமங்கள் போக்கும் வழியிலும் மரங்கள் அகற்றப்பட்டன.

### பிற மத சகோதர கிராமங்களுக்கும் உதவி

வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறப்பு அரசு பேருந்துகளும் ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த தீயணைப்பு படையினரோடு தங்களை இணைத்துக் கொண்டு ஆங்காங்கே உள்ள மக்களை பேருந்தில் ஏற்றி பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி வைத்தது அந்தக் குழு. அதுமட்டுமல்லாது அன்றைய தினம் தீயணைப்பு படையினர் உட்பட சுமார் 250 பேருக்கு வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக உணவுகள் தயார் செய்து விநியோகம் செய்யப்பட்டது. இறைவனின் உதவியால் அங்கு அம்மக்களின் பசி போக்கப் பட்டது.

### தத்தெடுக்கப்பட்ட கிராமம்

சமுதாய மக்களுக்கு தண்ணீர் விநியோகத்தை பிற அமைப்புகள் செய்து கொண்டிருந்த நிலையில் தன் மூட்டு வரை தண்ணீரோடும், இருளோடும் பசியோடும், பாதையை வழி மறித்து வீழ்ந்து கிடந்த மரங்களையும் அகற்றும் பணியில் ஊர்வாழ்மடம் இழுப்படி கிராம மாற்றுமத மக்களின் துயரத்தை போக்க வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் மற்றும் இடலாக்குடி இஸ்லாமிய இளைஞர்கள்

சுமார் இரண்டு நாட்கள் அந்த கிராமத்தை தத்தெடுத்து தங்கள் வாழ்வாதாரத்தைப் பற்றிக் கவலைப்படாமல் நிவாரணப்பணி மேற்கொண்டனர்.

புயலின் முதற்நாள் இக்கிராமத்தின் நிலை அறிந்து அன்றைய இரவு உணவு சமைக்கப் பட்டது. தங்களின் மூட்டு மூழ்க சென்று அப்பகுதி பிற சமுதாய மக்களுக்கு உணவு விநியோகம் செய்தனர். மறுநாள் காலை முதலே மரம் வெட்டும் இயந்திரத்தோடு அங்கே களம் இறங்கியது வாசகர் வட்டக்குழு. 40 வருடங் களாக நிழல் கொடுத்து புயலில் சாய்ந்த மரங் களை அப்புறப்படுத்தினர். அத்தோடு அம்மக் களின் மதிய, இரவு உணவுகளும் தயார் செய்யப் பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

ஜமாத்துல் முஸ்லிமுன் என்ற அமைப்பும் ஊர்வாழ்மடம் கிராமத்தில் நேரில் சென்று உணவு சமைத்துக் கொடுத்தனர்.

வைகறை வெளிச்சம் வாசகர்வட்டம் இடலாக்குடி இஸ்லாமிய இளைஞர்கள் குழு மற்றும் ஜமாத்துல் முஸ்லிமூன் அமைப்பின் நிவாரணப் பணிகளால் சுமார் 800 பேரின் பசிகள் மூன்று நாட்கள் காணாமல் போயின. கிராமத்தின் போக்குவரத்து சீராகின. இது போன்று குளத்தூர் கிராமத்தின் மக்கள் சிரமத் தைப் போக்கும் வழியில் அங்கு முறிந்து கிடந்த மரங்களை அகற்றினார்கள் அந்த மீட்புக்குழு. அல்ஹம்து லில்லாஹ்.

### எங்கள் நிலை என்னவாயிருக்கும்?

02 டிசம்பர் 2017 அன்று காலை புதிய தலைமுறை தொலைக்காட்சி இழுப்படி கிராமத்திற்கு பேட்டிகாண சென்றனர். அக்கிரா மத்தை சார்ந்த ஒருவர் கூறுகையில் எங்கள் சமுதாயம் எங்களுக்கு உதவவில்லை. இடலாக் குடியை சேர்ந்த முஸ்லிம் பாய்கள் தான் எங்கள் துயரங்களுகககு உதவி செய்தனர். உணவும் தந்தனர் என்று பதிலளித்தார். வேறொருவர் மற்றவரிடம் கூறுகையில் முஸ்லிம் சமுதாய மக்கள் எங்களுக்கு உதவவில்லை என்றால் எங்கள் நிலை என்னவாயிருக்கும் ? என்று அழுதுகொண்டே பேட்டியளித்தார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடுத்த வீட்டவர் பசித்திருக்கும்போது நீ வயிறு நிறைய

குமரி மாவட்டம்
ஊட்டுவாழ்மடம் அருகேயுள்ள இலுப்படி காலனி மக்கள் ஓதி புயலில் பாதிக்கப்பட்டனர். 300 சிக்கன் பிரியாணி அவர்களுக்கு தயாராகிறது. கோட்டாறு இளங்கடை முஸ்லிம் சமுதாய இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக கடந்த 3 நாட்களாக இவ்வாறு உணவு வழங்கி வருகின்றனர்.



உண்ணாதே என்ற உபதேசித்த காரணத்தால் பிற சமுதாயத்தின் பசியை பிற மதமென்று பாராமல் அங்கே அந்த குழு களம் இறங்கியது இறைவன் நாடிய உணவு அவர்களின் பசியை போக்கியது. அங்கே இஸ்லாம் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது.

### முகத்திரையை கிழித்த பிற மத சகோதரர்கள்

புயலால் பாதிக்கப்பட்டு இரண்டு தினங் களாகியும் இந்துகளின் ஒற்றுமைக்காக பாடு படுகிறோம் என்று பசப்பு பேசும் ஆர்.எஸ். எஸ். மீட்பு பணியின் வீரியம் குறைந்த பிறகு தன்னையும் ஓர் மீட்புக்குழுவினர்போல் இரண்டு நாள் கழித்தே காட்டிக்கொண்டனர். இழுப்படி கிராமத்தில் இரண்டு நாள் மீட்டுப்பணி முடிந்து வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் மற்றும் இடலாக்குடி முஸ்லிம் இளைஞர்கள் மாலை 6.00 மணியளவில் ஊர் திரும்பும் போது ஓர் வாகனத்தில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பி னர்கள் மூன்று பேர் சில உணவு பொட்டலங் களோடு ஊர்வாழ்மடம் சென்று கொண்டிருந் தனர். வழியே இரயில் தடுப்பு பாதையில் காத்துநின்றபோது ஆர்.எஸ்.எஸ்.ஸின் முகத்திரையை அக்கிராமத்து மக்கள் கிழித் தெரிந்தனர்.

பெருமிதமாக உணவுப் பொட்டலங்களை தங்கள் கிராமத்திற்கு தான் எடுத்து வருகின்றோம் என்று அவர்கள் கூறுகையில், அக்கிராமத்து மக்கள் எங்களுக்கு இப்போது எதற்கு உணவு? எங்கள் தேவைகளை இஸ்லாமிய மக்கள் செவ்வனே முடித்து தந்துவிட்டார்கள். எங்க ளுக்குத் தேவையில்லை என்று வெள்ளாடிச்சி விளை பிளாட் முத்துராமன் தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகளுக்கு பதிலுரைத் தனர். அத்தோடு வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் குழுவிற்காக பாசத்தோடு வாங்கி வரப் பட்ட தேனீரை அந்த ரயில் தடுப்புப் பாதை யிலேயே அவர்களின் முன் வாசகர் வட்டக் குழு விற்கு அக்கிராமத்து இளைஞர்கள் வழங்கினர்.

அல்லாஹ் அவர்களைச் சிறுமைப்படுத் தினான். அது தலித் கிராமம் என்பதனால் வேறு யாரும் அவர்களை கண்டுகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கையாலாகாத மத்திய அமைச்சர்

ஏற்கனவே இந்திய வானிலை மையம் ஒகி புயலை எச்சரித்தும் தமிழ்நாட்டு வானிலை மையம் எதையும் முன்னெச்சரிக்கை செய்ய வில்லை, கண்டுகொள்ளவில்லை. சுமார் ஐந்து லட்ச மரங்கள் 7000 மின் கம்பங்கள், நூற்றுக் கணக்கான வீடுகள் சேதமடைந்த பிறகு, தமிழ் நாட்டைச் சார்ந்த மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் வெறும் கையை பிசைந்து கொண்டு காழ்ப்புணர்ச்சியில் பேரிடர் மாவட்ட மாக குமரி மாவட்டத்தை அறிவிக்க முடியாது என்று தன் கையாலாகாத தனத்தை நிரூபித் துள்ளார்.

### பாசிசத்தை வெளிக்காட்டிய மத்திய அமைச்சர்

குமரி மாவட்டத்தை ஒகி புயல் தாக்கும் என்று தமிழக அரசும், மத்திய அமைச்சரும் முன்னெச்சரிக்கை செய்யாததன் விளைவே சுமார் 800 மீனவர்கள் காணாமல் போயினர். ஏற்கெனவே தமிழக மீனவ பிரச்சனை தாண்ட வமாடும் நிலையில் பா.ஜ.க. மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணனின் பேட்டி மீனவர்களை பெரும் போராட்டத்திற்கு தள்ளியது. இழப்பீடு கொடுக்கும் அளவில் பேரிடர் மாவட்டம் இல்லை என்பதே அவரது பேட்டி. வரட்டு வாதம்.

கன்னியாகுமரியை கன்னிமேரி கிறிஸ்தவர் களின் மாவட்டம் என்று வசைபாடும் பாசிச கும்பலின் மத்திய அமைச்சராக இருப்பதனால் அங்ஙனம் அவரது பேட்டி. மேலும் கிறிஸ்தவ சகோதரர்கள் அதிகம் வாழும் இணையம் புத்தன்துறை, குளச்சல் இன்னும் சில மீனவ கிராமங்களை அழித்து ஓர் முணையம் கொண்டு வர மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் களம் இறங்கியதால் அப்பகுதி கிறிஸ்தவ சகோதரர்கள் எதிர்த்தனர். மத்திய அமைச்சரின் வெற்று முயற்சி தோல்வியடைந்ததால் அக்கிறிஸ்தவ மக்களின் மீது கெண்ட காழ்ப் புணர்ச்சியே. இரண்டாவது காரணம் அவர்களுக் கான இழப்பீட்டை வழங்க மறுத்தது.

### வெடித்தது போராட்டம்

சுமார் 800 மீனவர்களை இழந்த மீனவ கிராமங்கள் ஒன்றுதிரண்டு தன் கோரிக்கைகளை முன் வைத்தனர். அதுதான் 20 லட்சத்திற்கான உதவித் தொகை, அரசாங்க உத்தியோகம் மத்திய அமைச்சரின் நரித்தனத்தால் வாழ்வா தாரத்தை இழந்த மீனவ சகோதரர்கள் தங்கள் போராட்டத்தை வீரியப்படுத்தினர். ரயில் நிலையங்களை மறித் தனர். தண்ட வாளத்தில் தன் உயிரை வைத்து மாண்டுபோக தயாராகினர்.



போராட்டத்தில் வேகம் எந்த அழிவிற்கு எழுச்சி பெற்றது. என்றால்? குமரி மாவட்டமும் கேரளாவும்



## நிவாரண பணி செய்தவர்களுக்கு பாராட்டு ஏற்பாடு

ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு இரவும், பகலுமாக தன் சொந்த பிழைப்பை பற்றி கவலைப்படாமல் சுமார் ஏழு நாள் வரை களம் இறங்கி நிவாரண பணி செய்த இளைஞர்களுக்காக இடலாக்குடியில் அமர்ந்திருக்கும் உகாசேவா சார்பாக பாராட்டு விழா மட்டும் பரிசளிப்பு இன்ஷா அல்லாஹ் வரும் ஜனவரி 6, 2018 அன்று எற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நன்றியை வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக தெரிவித்துக் கொள்ளப் படுகிறது. ஜஸாக்கல்லாஹ் கைரன்.

பிரிந்த நாளன்று சென்ற வருடம் கேரளா சென்று மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குமரி மாவட்ட மக்களை இழிவுபடுத்தும் விதமாக வசைபாடினார். அவரின் நரித்தனத்தை பட்டவர்த்தப்படுத்தி காட்டும் விதமாக குமரி மாவட்டத்தை கேரளாவுடன் சேர்க்க கோரிக்கை எழுந்தது. அது போராட்டத்தின் உச்சிக்கே சென்றது. இறுதியில் இவர்களின் பாசிச முகங்கள் வெளிப்பட்டதால் மீனவ சகோதரர்களின் கோரிக்கை நிறைவேறியது.

### கேரள முதலமைச்சரின் நிதியுதவி

ஒகி புயலால் கேரளாவிலும் சில பகுதிகளில் மிதமாக பாதிக்கப்பட்டது. காணாமல் போன மீனவர்களுக்காக மாநிலம் பாராமல், மாவட்டம் பாராமல் நிதியுதவிகளை மேற்கொண்டார் கேரள மாநில முதலமைச்சர் பிரணாப் விஜயன். அதுமட்டுமல்லாது பாதிக்கப்பட்ட மீனவர் யாராகிலும் தலா 20 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார் குறிப்பிடத்தக்கது. தமிழக மக்களை கவனம் கொள்ளாமல் தன் கட்சி சின்னத்திற்காக பதவியிலிருக்கும் தமிழக அரசு பெரும் போராட்டத்திற்கு பிறகே செவி சாய்ந்தது என்பது வருத்தத்திற்குரியது.

இதுபோன்ற பேரழிவுகள், சோதனை குறித்து இறைவன் தன் திருமறையில் கூறும்போது...

அன்றியும், நிச்சயமாக அவனே சிரிக்க வைக்கின்றான் ; அழச் செய்கின்றான். இன்னும் நிச்சயமாக அவனே மரணிக்கச் செய்கிறான். இன்னும் உயிர்பிக்கின்றான். (அல்குர்ஆன் - *53:43.44*)

ஆக இதுபோன்ற சோதனை நம்மை சிரிக்கவும், அழவும் செய்வதற்காக மட்டுமல்ல, பாடங்களும் படிப்பினைகளும் பெறுவதற்காக இதுபோன்ற பேரழிவுகளில் மரணித்தவர்களுமுண்டு. மரணத்தின் விழும்பில் சென்று உயிர்பெற்று திரும்பியவர்களும் உண்டு. இதுபோன்ற சோதனைகளை நம் வாழ்வின் ஓர் படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லாஹ் நம்மை எதற்கு படைத்தானோ அந்த லட்சியத்தோடு உழைத்து, அல்லாஹ்வின் சோதனையில் இருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம். இன்ஷா அல்லாஹ்.

- அப்துல் பாசித்.

# சொராபுதீன் கொலையில் அமித்ஷாவை விடுவிக்க

# ரூ 100 கோடி

**பாகம்-2**



சென்ற 2017 டிசம்பர் மாத இதழில் நீதிபதி லோயா அவர்களின் மர்ம மரணம் குறித்து தீக்கதிர் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை வெளியிடப்பட்டது. இன்னமும் இந்த வழக்கில் உயிரிழந்த நீதிபதிக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை.

நீதிபதியின் மரணத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படும் பிஜேபி கட்சியும் அமித் ஷாவும் கள்ள மவுனம் காத்து வருவது கொடுமை என்றால் நீதித்துறை மவுனம் காப்பது அதைவிட கொடுமை.

நீதிமன்றத்தின் மவுனத்தை கலைக்கும் விதமாக பஞ்சாப் ஹரியானா மாநிலங்களின் வழக்கறிஞர்கள் 470 பேர் உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளனர். அதில் நீதிபதி லோயா அவர்களின் மரணம் குறித்து சி.பி.ஐ.யோ அல்லது சிறப்பு விசாரணை குழுவோ (SIT) விசாரிக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த கோரிக்கையை அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மற்ற நீதிபதிகளுக்கும் மற்றும் மும்பை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதிக்கும் அனுப்பி உள்ளனர்.

" நீதிபதி லோயா அவர்களின் குடும்பத்தினர் முன் வைக்கும் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் நியாயமான மற்றும் பாரபட்சமற்ற நீதி வழங்கப்படுவதற்கு ஆபத்து வந்து விட்டது.

இது போன்ற மிகமுக்கிய வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகளின் உயிருக்கு ஆபத்து என்றால் அவர்கள் செல்வாக்கு மற்றும் அழுத்தத்தின் கீழ் வேலை செய்கிறார்கள் என்றால் நீதியும் பாதுகாப்பாக இல்லை என்று தான் அர்த்தம்" என்று அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

http://www.hindustantimes.com/punjab/470-lawyers-petition-sc-seeking-probe-into-judge-loya-s-death/story-dAKhK2sVfKenYjtoFLKMLO.html

நீதிபதி லோயாவின் மரணத்தில் பதில் சொல்லப் படாத கேள்விகள் பல உள்ளன. அவற்றை பட்டியலிடுகிறோம்.

பிரிஜி கோபால் ஹர்கிஷன் லோயா சி.பி.ஐ. நீதிமன்றத்தின் சிறப்பு நீதிபதி. இவர் மும்பையில் பி,ஜே.பி தலைவர் அமித் ஷாவால் நடத்தப்பட்ட போலி என்கவுண்டர் வழக்கை விசாரித்து வந்தார். அவ்வழக்கில் மிக கண்டிப்பாக நடந்து கொண்டார். இந்நிலையில் திடீரென்று ஒருநாள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இறந்து போனார்.

சொராப்தீன், கவுசர் பீ என்கவுண்டர் வழக்கில் அமீத் ஷாவையும் பல முக்கிய காவல் துறை அதிகாரிகளையும் விசாரித்து வந்த லோயா அமீத் ஷாவை நீதிமன்றத்தில் நேரிடையாக ஆஜராக வேண்டும் என்று கடைசியாக உத்தரவிட்டிருந்தார். அதன் பின்னர் அவர் டிசம்பர், 1,2014 அன்று நாக்பூரில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் அவருடன் பணிபுரிந்தவருடைய மகளின் திருமணத்திற்காக தங்கியிருந்த போது தான் கொல்லப்பட்டார். அவர் திடீரென்று மாரடைப்பால் இறந்து போனதாக அவருடைய குடும்பத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது.

அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. அவர் டான்டே மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்து செல்லப்பட்டார். அவருக்கு அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டது.

லோயாவின் சகோதரி இந்த மருத்துவ மனையை ஒரு தெளிவற்ற இடம் என்று கேரவன் இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். அந்த மருத்துவமனையில் உள்ள ஈ.சி.ஜி (electrocardiography unit) வேலை செய்யவில்லை என பின்னர் தெரிந்து கொண்டதாக அவர் கூறுகிறார்.

பின்னர் லோயா அவர்கள் மெடிட்ரினா மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அதுவும் ஒரு தனியார் மருத்துவமனை. அங்கு கொண்டு வரும் போதே லோயா இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் லோயாவின் குடும்ப உறுப்பினர்களின் பேட்டிகள், லோயா அவர்கள் இறந்து பிறகு நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள் குறிப்பாக உடற்கூறு ஆய்வு ஆகியவை குறித்து அப்போது நேரில் கண்ட நாக்பூர் அரசு அதிகாரிகளின் சாட்சியங்கள் ஆகியவை பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றன.

**1. லோயாவின் மரணம் குறித்து அவரது குடும்பத்தினருக்கு தகவல் தெரிவதற்கு முன் ஏன், எப்படி, எப்போது ஆர்.எஸ்.எஸ்.க்கு தெரிந்தது?**

லோயாவின் மனைவி மும்பையில் இருந்தார். தந்தை லதூர் நகரத்திலும் இரண்டு சகோதரிகள் துலே (ஜல்காவூன்)விலும் அவுரங்காபாத்திலும் இருந்தனர். டிசம்பர் 1 2014 அன்று காலை தன்னை நீதிபதி என அடையாளப்படுத்திக் கொண்ட பர்டே என்பவர் லோயா அவர்கள் இரவே இறந்து விட்டதாகவும் அவருடைய உடற்கூறு ஆய்வு முடிந்து விட்டதாகவும் அவருடைய உடல் பூர்வீக இடமான லதூர் மாவட்டத்தில் உள்ள கேட்காவூன் என்ற இடத்திற்கு அனுப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

லோயாவின் தந்தைக்கும் தொலைபேசி அழைப்பு வந்தது. லோயா இறந்து விட்டார் அவருடைய உடற்கூறு ஆய்வு முடிந்து விட்டது. அவருடைய உடல் கேட்காவூன் (Gategaon) என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது. லோயாவின் தந்தை அப்போது தன் மகள் ஒருவரின் வீட்டில் லதூரில் (Latur) இருந்தார்.

ஆனால் லோயாவின் தந்தைக்கு தகவல் அளித்தவர் ஈஷ்வர் பஹேதி (Ishwar Baheti) என்ற ஆர்.எஸ்.எஸ் ஊழியர். அவர் லோயாவின் தந்தையிடம் லோயாவின் உடலை கேட்காவூன் கொண்டு வர அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதாக கூறினார். ஆனால் இந்த ஆர்.எஸ். எஸ். அமைப்பை சேர்ந்த ஈஷ்வர் பஹேதி என்ற நபருக்கு எப்போது தகவல் தெரிந்தது (லோயாவின் குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவதற்கு முன்னதாக), எதற்காக தகவல் தரப்பட்டது, எப்படி யார் மூலம் தகவல் தரப்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாது.

லோயாவின் சகோதரி சரிதா மன்தானே (Sarita Mandhane) விற்கு காலை 5மணியளவில் பர்டேவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. பிரிஜ் லோயா இறந்து விட்டதாகவும் எங்களை உடனடியாக நாக்பூர் வரும்படியும் பர்டே கூறினார். சரிதா தன்னுடைய மருமகனை லதூரில் உள்ள ஒரு மருத்துவமனையிலிருந்து அழைத்து கொண்டு கிளம்பினார். அவருடைய மருமகன் (nephew) முன்னர் அந்த மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

லோயாவின் சகோதரி மருத்துவமனையை விட்டு வெளியேறும் போது ஈஷ்வர் பஹேதி (ஆர்.எஸ்.எஸ் ஊழியன்) அந்த மருத்துவ மனைக்கு வந்தான். அவனுக்கு எப்படி நாங்கள் சர்தா மருத்துவமனையில் இருக்கிறோம் என்பது தெரிந்தது என்பது இப்போதும் எங்களுக்கு தெரியாது என லோதாவின் சகோதரி சரிதா கூறுகிறார். யார் இந்த ஈஷ்வர் பஹேதி அவனுக்கு எப்படி இந்த தகவல்கள் தெரிந்தன என்பது மர்மமே.

லோயாவின் உடல் இரவு 11.30 மணிக்கு தரப்பட்டது. அதிர்ச்சி தரும் விஷயம் என்னவெனில் அவருடைய உடலுடன் லோயாவுடன் பணிபுரிந்த எவரும் வரவில்லை. வெறும் ஆம்புலன்ஸ் டிரைவர் மட்டும் தான் உடலைக் கொண்டு வந்தது.

லோயாவின் மனைவி சர்மிளாவும் அவருடைய மகள் அபூர்வாவும் மகன் அனுஜ் மூவரும்



மும்பையிலிருந்து கேட்காவூனுக்கு லோயா வுடன் பணி புரிந்த சில நீதிபதிகளுடன் சென் றனர். அந்த நீதிபதிகளில் ஒருவர் அனுஜையும் மற்றவர்களையும் யாரிடமும் எதுவும் பேச வேண்டாம் என தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு வந்தார். அது ஏன்?

சொராபூதீன் வழக்கு மட்டுமே இறக்கும் தருவாயில் லோயாவால் விசாரிக்கப்பட்டு வந்தது. நாட்டில் அனைவரின் கவனத்தையும் கவர்ந்த வழக்கு அது. அந்த வழக்கை குஜராத்திற்கு வெளியே விசாரிக்க தகுதியான வழக்கு தான் என கூறி மஹாராஷ்டிராவில் விசாரிக்க தீர்ப்பளித்திருந்தது உச்ச நீதிமனற்ம். இந்த வழக்கை ஒரே நீதிபதி முழுமையாக விசாரிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. ஆனால் இந்த தீர்ப்புக்கு மாற்றமாக இந்த வழக்கை முதலில் விசாரித்த ஜேடி உத்பத் என்பவர் 2014 வருட மத்தியில் பணியிடமாற்றம் செய்யப்பட்டார்.

லோயா இவ்வழக்கிற்கு நியமிக்கப்பட்டார். ஜூன் 6 2014ல் நீதிமன்றத்தில் அமீத் ஷா ஆஜரா வதிலிருந்து விலக்கு கேட்டதை கண்டித்தார் நீதிபதி உத்பத் அவர்கள். கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார். 20 ஜூன் அன்று வழக்கு விசாரணைக்கு அமீத் ஷா ஆஜராக வில்லை. ஜூன் 26க்கு உத்பத் வழக்கு விசார ணைக்கு உத்தரவிட்டு அன்று அமீத் ஷா ஆஜராக உத்தரவிட்டார். ஆனால் ஜூன் 25ம் தேதி அன்றே உத்பத் பணியிட மாற்றம் செய்யப் பட்டார்.

அதன் பின்னர் அக்டோபர் 31 2014அன்று விசாரணைக்கு அமீத் ஷா ஆஜராவதிலிருந்து லோயா விலக்களித்த போதும் ஏன் மும்பையில் இருந்த போதும் வழக்கு விசாரணையில் அமீத் ஷா ஆஜராகவில்லை என கேள்வி எழுப்பினார்.

அடுத்த விசாரணை தேதியை டிசம்பர் 15க்கு ஒத்தி வைத்தார் லோயா.

ஆனால் அதற்குள்...

**2) அவருடைய கழுத்திலும் அவருடைய சட்டை காலரிலும் இருந்த ரத்தக்கறைகள்**

லோயாவின் சகோதரி அனுராதா பியானி (Anuradha Biyani) லோயா அவர்களின் உடலை கண்டபோது சில வித்தியாசங்களை உணர்ந்தார். லோயாவின் கழுத்தில் சட்டை பின் காலரின் ரத்த கறைகள் காணப்பட்டன. மூக்குக்கண்ணாடி கழுத்துக்கு கீழே இருந்தது. அது அவருடைய உடலில் மாட்டிக் கொண்டிருந்தது.

அவருடைய பெல்ட் தவறாக மாற்றி வேறு திசையில் மாட்டப்பட்டிருந்தது. அவருடைய பேண்ட் கிளிப் உடைந்திருந்தது. இடது தோள் பட்டையிலிருந்து இடுப்பு வரை அவருடைய சட்டையில்ரத்தம் இருந்தது.

ஆனால் உடற்கூறு ஆய்வறிக்கையில் அவருடைய உடையின் நிலைமைப் பற்றி கூறும் போது ஈரமாக இருந்ததா? கறைகள் இருந் தனவா ? ரத்தக்கறைகள் அல்லது வாந்தியின் கறைகள் அல்லது மலக்கழிவுகள் இருந்ததா? என்ற கேள்விகளுக்கு மொட்டையாக உலர்ந் திருந்தது என்று மட்டுமே அறிக்கை தரப்பட் டிருந்தது.

ஒரு மருத்துவராக உடற்கூறு ஆய்வின் போது இருதயமும் நுரையீரலும் செயல்படாததன் காரணமாக ரத்தம் வெளிவராது என்பது எனக்கு தெரியும். எனவே, இரண்டாவது உடற்கூறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என நான் கோரிக்கை வைத்தேன். ஆனால் லோயாவின்

நண்பர்களும் உடன் வேலை பார்த்தவர்களும் எங்களை தடுத்துவிட்டனர் என்று கூறுகிறார் பியானி.

### 3. மரணத்திற்குபின்னர் நடந்த நடைமுறைகள்

இது போன்ற சந்தேகமான மரணங்களுக்கு பின்னர் பஞ்சநாமா எழுதப்பட்டிக்க வேண்டும். மருத்துவ-சட்ட (medico-legal) வழக்கு பதியப் பட்டிருக்க வேண்டும். சட்டப்படி காவல்துறை இறந்தவரின் தனியுடைமைகள் அனைத்தையும் சேகரித்து முத்திரையிட்டு சீல்வைத்து அதனை பஞ்சநாமாவில் குறிப்பிட்டு அதனை இறந்த வரின் குடும்பத்திடம் பஞ்சநாமாவின் நகலுடன் ஒப்படைக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யப்படவில்லை.

லோயா அவர்களின் கைபேசி பஹேதி என்ற ஆர்.எஸ்.எஸ் உறுப்பினரால் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. காவல்துறையால் அல்ல

லோயா அவர்களின் கைபேசி உடனடியாக குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மூன்றாவது நாள் அல்லது நான்காவது நாள் தான் அது லோயாவின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அது முன்னரே ஒப்படைக்கப்பட்டிருந்தால் சில விஷயங்கள் அவருடைய பலருக்கு தெரிந் திருக்கும். அதில் ஒன்று அவருக்கு வந்திருந்த குறுஞ்செய்தி.

லோயா இறப்பதற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு முன் வந்த குறுஞ்செய்தி. "ஐயா, இவர்களிடமிருந்து பத்திரமாக இருந்து கொள்ளுங்கள்" என்ற அந்த குறுஞ்செய்தி . இந்த செய்தி மட்டுமல்ல எல்லா விஷயங்களும் அந்த போனில் இருந்து அழிக்கப்பட்டிருந்தது.

### 4. லோயா எப்படி ஆட்டோவில் அழைத்து செல்லப்பட்டார்?

ரவி பவனுக்கு அருகில் எந்த ஆட்டோ நிறுத்தங்களும் (ஸ்டான்ட்) கிடையாது. இரண்டு கிலோமீட்டருக்கு அப்பால்தான் ஆட்டோக்கள் கிடைக்கும். பகல்நேரத்திலேயே ஆட்டோ அந்த இடத்தில் கிடைக்காது. அப்படியிருக்க எப்படி இரவு நேரத்தில் ஆட்டோவை பிடித்தார்கள்?

### 5. லோயா மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட போதே ஏன் அவருடைய குடும்பத்தாருக்கு தகவல் சொல்லப்பட வில்லை? அவர் இறந்தவுடன் ஏன் தகவல் தரப்படவில்லை?

உடற்கூறு ஆய்வு நடத்தப்படுவது ஏன் தெரிவிக்கப்படவில்லை அல்லது ஏன் அதற்கான ஒப்புதல் பெறப்படவில்லை? யார் உடற்கூறு ஆய்வை பரிந்துரை செய்தது. ஏன்? உடற்கூறு ஆய்வு செய்யும்படிக்கு லோயாவின் மரணத்தில் எழுந்த சந்தேகம் என்ன? அவருக்கு டான்டே மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட மருந்துகள் சிகிச்சைகள் என்னென்ன?

ரவி பவன் முறையாக முக்கிய பிரமுகர்கள் தங்கும் அரசு விருந்தினர் மாளிகை. அங்கே மந்திரிகள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள் என பல முக்கிய அதிகாரிகள் அங்கே தங்கு வதால் அங்கு கண்டிப்பாக வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இவரை ஆட்டோவில் ஏற்றிச் சென்றார்கள் என்றால் அங்கே எந்த வாகனமும் இல்லையா? ஏன்?

அவருக்கு டான்டே மருத்துவமனையில் என்னென்ன மருந்துகள் சிகிச்சைகள் கொடுக்கப் பட்டன என நான் மருத்துவர் என்ற முறையில் கேட்டறிய முயன்றேன். ஆனால் அங்குள்ள மருத்துவர்களும் ஊழியர்களும் எந்த தகவலையும் தர மறுத்துவிட்டார்கள்.

### 6. நவம்பர் 31 மற்றும் டிசம்பர் 1 அன்று ரவி பவனில் தங்கியிருந்த பிரமுகர்கள் யார் யார்?

மஹாராஷ்டிராவின் குளிர்கால தொடர் டிசம்பர் 7 அன்று தொடங்கியதால் முன்ன தாகவே இந்த விருந்தினர் மாளிகையில் முக்கிய பிரமுகர்கள் தங்கியிருப்பார்கள். அப்படி டிசம்பர் 1 அன்று தங்கியிருந்த பிரமுகர்கள் யார் யார்?

### 7. உடற்கூறு ஆய்வு எழுப்பும் கேள்விகள்

நாக்பூரில் உள்ள அரசு மருத்துவ கல்லூரியில் உடற்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. நாக்பூரின் சதார் காவல்நிலையத்தின் மூத்த காவல் ஆய்வாளர் உடற்கூறு ஆய்வின் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட்டிருக்கிறார். அதில் மற்றொருவர் இறந்தவரின் maiyatachachulatbhau தந்தை வழிசகோதரர் paternal cousin brother என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. அது யார்?

இவர் தான் லோயாவின் உடலை பின்னர் பெற்றிருக்கவேண்டும்.

## 8. கள்ளக் கையெழுத்து

லோயாவின் தந்தைக்கு எந்த சகோதரரும் நாக்பூரில் கிடையாது. அப்படியெனில் அவ்வாறு கைழுத்திட்டது யார் என்பது பதில் தெரியாத கேள்வி.

லோயா இறந்த நேரம்..

லோயாவின் உடல் மெடிட்ரினா மருத்துவ மனையில் இருந்து அரசு மருத்துவ கல்லூரிக்கு நாக்பூரில் உள்ள சீதாபர்தி காவல் நிலையத்தால் அனுப்பப்பட்டது. காவலர் பன்கஜ் என்பவர் அந்த உடலை கொண்டு வந்தார். அவருடைய பேட்ஜ் எண். *6238*. டிசம்பர் *1* காலை *10.05*க்கு உடல் அரசு மருத்துவ கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டது. *10.55*க்கு உடற்கூறு ஆய்வு ஆரம்பிக்கப்பட்டு *11.55*க்கு முடிக்கப்பட்டது என அறிக்கை கூறுகிறது.

காவலர்களின் கூற்றுப்படி அவருக்கு டிசம்பர் *1* காலை *4* மணிக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. காலை *6.15* மணிக்கு அவர் இறந்து போனார். அவர் முதலில் டான்டே மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். பின்னர் மெடிட்ரினா மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கே லோயா ஏற்கனவே இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டார் என அறிக்கை கூறுகிறது.

இது மிகப்பெரிய முரணாகும். ஏனெனில் லோயாவின் குடும்ப உறுப்பினர்களின் கூற்றுப்படி காலை *5* மணி முதலே லோயா இறந்து விட்டதாக அவர்களுக்கு அழைப்புகள் வந்து விட்டதாக அவர்கள் கூறுகின்றனர். எனவே உடற்கூறு ஆய்வறிக்கையில் அவர் *6.15* மணிக்கு இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது மிக முக்கிய முரண்.

சீதாபர்தி காவல்நிலையத்திலும் நாக்பூர் அரசு மருத்துவமனையிலும் உள்ள இரண்டு நம்பத்தகுந்த நபர்களின் வாயிலாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் லோயா நள்ளிரவிலேயே இறந்து விட்டார். அவருடைய உடலையும் அவர்கள் நள்ளிரவிலேயே பார்த்து விட்டனர்.



**Justice B.H. Marlapalle** (Retd.) — New Delhi, November 21, 2017

Dear Chief Justice,

I recently came across an article published in the latest issue of 'The Caravan' magazine, regarding the death of a ld. Sessions Judge on 1st December 2014, at Ravi Bhawan - Nagpur, under mysterious circumstances. I am pleased to forward herewith a copy of the said article for your kind reference.

I, for one, firmly believe this is a fit case for causing investigation by an SIT, irrespective of its outcome at this point of time. The Supreme Court of India, while interpreting Article 235 of the Constitution of India, has repeatedly stated that the High Court is the guardian of the subordinate judiciary.

In my humble view, ordering an investigation by an SIT by registering this article as a PIL petition, will certainly make the subordinate Court Judges to believe that they are not orphans. Undoubtedly, Your Ladyship - as the principal guardian, is better placed to appreciate the plight of the subordinate Court Judges.

May I, therefore, request Your Ladyship's kind and urgent attention to do the needful in this regard.

With warm regards

Yours Sincerely

Justice B.H. Marlapalle
(Retd.)

To,
Hon'ble Mrs. Justice Manjula Chellur
Chief Justice - The High Court of Bombay
Fort, Mumbai 400032
Maharashtra
Encl.- Photocopy of the article

D-314, basement, Defence Colony, New Delhi-110024 — Telephone: 011-24331880

மருத்துவ கல்லூரியில் உள்ள உடற்கூறு ஆய்வு செய்யும் போது இருந்த சில நபர்களிடம் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேலதிகாரிகளின் உத்தரவு என்னவென்றால் உடலை அறுத்து தைத்து விடவேண்டும். அது பார்ப்பதற்கு உடற்கூறு ஆய்வு செய்தது போல் இருக்க வேண்டும். அவ்வளவு தான்.

## 10. நல்ல ஆரோக்கியமான நபர் லோயா.

ஆய்வறிக்கையில் கரோனரி தமனி குறைபாடு (coronary artery insufficiency)மரணம் சம்பவிப்ப தற்கு காரணமாக கூறப்பட்டுள்ளது. பொதுவாக இது வயதானவர்கள், பாரம்பரியமாக இந்த நோய் பின்னணி கொண்டவர்கள், புகைப்பவர் கள், அதிக கொழுப்பு கொண்டவர்கள், அதிக ரத்த அழுத்தம் கொண்டவர்கள், குண்டானவர் கள், சர்க்கரை வியாதி கொண்டவர்கள் போன் றோருக்கு வரும்

ஆனால் இதில் எதுவும் லோயாவுக்கு கிடையாது என அவரது சகோதரி கூறுகிறார். லோயாவின் சகோதரி ஒரு மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது. லோயாவுக்கு *45* வயது. அவருடைய தாய் தந்தைக்கு முறையாக *80*,

85 வயது. அவர்களுக்கு இதுவரை மாரடைப்பு ஏற்பட்டது கிடையாது. லோயா மது அருந்துவது கிடையாது. தினமும் இரண்டு மணி நேரம் டேபிள் டென்னிஸ் விளையாடும் வழக்கம் கொண்டவர். சர்க்கரை வியாதியோ ரத்த அழுத்த வியாதியோ அவருக்கு கிடையாது.

அவருடைய சகோதரி பியானி கூறும் போது நான் ஒரு மருத்துவர். பிரிஜ் லோயா என்னை சின்ன சின்ன விஷயத்திற்கெல்லாம் ஆலோசனை செய்வார், இருமல், செரிமானக்கோளாறு போன்ற பிரச்சனைகளுக்கெல்லாம் உடனடியாக ஆலோசனை கேட்பார். அவருக்கு இதுவரை மாரடைப்பு வந்தது கிடையாது. எங்கள் குடும்பத்திலும் யாருக்கும் மாரடைப்பு வந்தது கிடையாது என கூறியுள்ளார். அப்படியிருக்க ஆரோக்கியமான லோயா அவர்கள் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இறந்தது எவ்வாறு? அந்த அமீத் ஷாவிற்கே வெளிச்சம்.

நன்றி: http://muslimmirror.com/eng/ten-unanswered-questions-that-make-the-death-of-judge-who-heard-sohrabuddin-fake-encounter-case-suspicious/

இதற்கிடையே மும்பையின் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி பி.எச்.மர்ளாபள்ளே அவர்கள் மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இது குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்க கோரிக்கை வைத்துள்ளார். "இது சிறப்பு புலனாய்வு குழு விசாரிக்க இது மிகச்சரியான வழக்கு என நான் கருதுகிறேன்" என்றும் அவர் கூறியுள்ளார். இவ்வாறு உத்தரவிடுவது உங்களுக்கு கீழே உள்ள நீதிபதிகளுக்கு அவர்கள் ஒன்றும் அநாதைகள் கிடையாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

https://scroll.in/latest/859257/former-judge-urges-bombay-hc-chief-justice-to-set-up-probe-into-cbi-judge-loyas-death

லதூர் பார் அசோஷியேஷனும் நீதிமன்ற கண்காணிப்பின் கீழ் சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோரிக்கையை வைத்துள்ளது.

http://www.livelaw.in/latur-bar-association-seeks-cbi-probe-suspicious-death-judge-handling-sohrabuddin-case/

**100 கோடி லஞ்சம்**

நீதிபதி உத்பத் என்பவர் தான் இந்த வழக்கை விசாரித்து வந்தார். உச்ச நீதிமன்றம் ஒரே நீதிபதி தான் இந்த வழக்கை விசாரித்து முடிக்க வேண்டும் என ஆணையிட்டிருந்தது. ஜூன் 6 2014ல் நீதிமன்றத்தில் அமீத் ஷா ஆஜராவதிலிருந்து விலக்கு கேட்டதை கண்டித்தார் நீதிபதி உத்பத் அவர்கள். கண்டிப்பாக ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார். 20 ஜூன் அன்று வழக்கு விசாரணைக்கு அமீத் ஷா ஆஜராகவில்லை. ஜூன் 26க்கு உத்பத் வழக்கு விசாரணைக்கு உத்தரவிட்டு அன்று அமீத் ஷா ஆஜராக உத்தரவிட்டார். ஆனால் ஜூன் 25ம் தேதி அன்றே உத்பத் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவிற்கு மாற்றமானது. அதன் பின்னர் லோயா இவ்வழக்கின் நீதிபதியானார்.

அதன் பின்னர் அக்டோபர் 31 2014 அன்று விசாரணைக்கு அமீத் ஷா ஆஜராவதிலிருந்து லோயா விலக்களித்தார். ஆனால் மும்பையில் இருந்த போது ஏன் அமீத் ஷா இவ்வழக்கில் ஆஜராகவில்லை என லோயா கேள்வி எழுப்பினார்.

இதன் பின்னர் மும்பை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த மோஹித் ஷா என்பவர் அமீத் ஷாவை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க 100 கோடி ரூபாய் லஞ்சம் பெற்று தருவதாக கூறியதாக லோயா தன் சகோதரி அனுராதா பியானியிடம் கூறியுள்ளார். லோயாவின் சகோதரியின் கூற்றுப்படி மொஹித் ஷா லோயாவை பின்னிரவுகளில் அழைத்து பேசியதாகவும் அப்போது இவ்வழக்கில் அமீத் ஷாவுக்கு சாதகமான தீர்ப்பை உடனே வழங்கும் படியும் கேட்டுக்கொண்டதாக லோயா கூறியுள்ளார்.

30 டிசம்பருக்குள் தீர்ப்பு வழங்கப்பட்டால் அது யாருடைய பார்வைக்கும் ஆளாகாது ஏனெனில் அதே நேரத்தில் வேறொரு பிரமாண்டமான செய்தி வெளிவர உள்ளது, எனவே மக்கள் இதை கவனிக்க மாட்டார்கள் என்றும் மொஹித் ஷா கூறியுள்ளார்.

"உங்களுக்கு வீடு வேண்டுமா? எவ்வளவு நிலம் வேண்டும், எவ்வளவு பணம் வேண்டும்




சொல்லுங்கள் பெற்றுத் தருகிறேன் என்று மொஹித் ஷா கேட்டார் என என் மகன் என்னிடம் கூறினான்" என்று லோயாவின் தந்தையும் கூறியுள்ளார்.

ஆனால் என் மகன் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. "ஒன்று நான் வேலையை ராஜினாமா செய்வேன், அல்லது வேறு இடத்திற்கு மாற்றலாவேன். நான் என் சொந்த ஊருக்கு சென்று விவசாயம் செய்வேன்" என்று என் மகன் கூறினான்.

லோயாவின் மரணத்திற்கு பின்னர் எம்.பி. கோசவி என்பவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 15 டிசம்பர் 2014ல் அவர் இந்த வழக்கை விசாரித்தார். மூன்றே நாட்கள் எதிர் தரப்பு வழக்கறிஞர்களால் வழக்கு எடுத்துரைக்கப்பட்டது. 15 நிமிடம் சி.பி.ஐ தரப்பு வாதங்களை வைத்தது. டிசம்பர் 17ல் அவர் தீர்ப்பை ஒத்தி வைப்பதாக அறிவித்தார். அவ்வளவு தான் ஒட்டு மொத்தமாக அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் அமீத் ஷா விடுவிக்கப்பட்டார். டிசம்பர் 30ம் தேதி அரசியல் காரணங்களுக்காக இந்த வழக்கு தொடரப்பட்டதாக எதிர்தரப்பில் கூறப்பட்டதை ஏற்றுக்கொண்டு கோசவி இந்த தீர்ப்பை வழங்கினார்.

அதே தினம் எம்.எஸ் தோனியின் டெஸ்ட் கிரிக்கெட் ஓய்வு அறிவிக்கப்பட்டது. ஊடகங்கள் எல்லாம் அதை முக்கிய செய்தியாக காட்டின. அவ்வளவு தான். மொஹித் ஷா கூறியது போல இது ஒன்றுமில்லாத செய்தியாக போனது.

நன்றி : http://www.caravanmagazine.in/vantage/loya-chief-justice-mohit-shah-offer-100-crore-favourable-judgment-sohrabuddin-case

இவ்வளவு முக்கியமானதொரு வழக்கில் சம்பந்தப்பட்ட நீதிபதி மர்மமான முறையில் இறந்துள்ளார். அவருடைய குடும்பத்தினர் தெளிவாக பிஜேபியின் மீதும் அமீத் ஷா மீதும் மும்பை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் பதில் சொல்லக்காணோம். ஒட்டு மொத்த நாடே இந்த கேள்விகளை கேட்ட போதும் எருமை மாட்டின் மீது மழை பொழிந்ததை போன்று சூடு சுரணை யற்றவர்களாக அமித் ஷா கோஷ்டியினர் இருப்பதை காண்கிறோம்.

தனக்கு சாதகமாக தீர்ப்பளித்தவர்களுக்கு ஆளுனர் பதவி எதிர்த்தால் பரலோக பதவி என அமீத் ஷா நீதிக்கு புது வழி காட்டியிருக்கிறார்.

விசாரணை கமிஷனோ அல்லது சி.பி.ஐ விசாரணையோ இவ்வழக்கில் நீதிபெற்று தராது என்பதே நமது எதிர்பார்ப்பு. ஏனெனில் அவர்களும் மிரட்டப்படுவார்கள் அல்லது விலைக்கு வாங்கப்படுவார்கள். நீதிபதி லோயாவின் மரணத்திற்கு பின்னர் வெறும் 15 நிமிடங்கள் சி.பி.ஐ வாதத்திற்கு பின்னர் அமீத் ஷா இவ்வளவு முக்கியம் வாய்ந்த வழக்கில் இருந்து விடுதலை பெற்றிருப்பது இதையே காட்டுகிறது.

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887

**Bill No. 247 of 2017**

# THE MUSLIM WOMEN (PROTECTION OF RIGHTS ON MARRIAGE) BILL, 2017

A

BILL

*to protect the rights of married Muslim women and to prohibit divorce by pronouncing* talaq *by their husbands and to provide for matters connected therewith or incidental thereto.*

BE it enacted by Parliament in the Sixty-eighth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

### PRELIMINARY

Short title, extent and commencement.

**1.** (*1*) This Act may be called the Muslim Women (Protection of Rights on Marriage) Act, 2017.

(*2*) It shall extend to the whole of India except the State of Jammu and Kashmir.

(*3*) It shall come into force on such date as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

**2.** In this Act, unless the context otherwise requires,—

(*a*) "electronic form" shall have the same meaning as assigned to it in clause (*r*) of sub-section (*1*) of section 2 of the Information Technology Act, 2000; 21 of 2000.

(*b*) "*talaq*" means *talaq-e-biddat* or any other similar form of *talaq* having the effect of instantaneous and irrevocable divorce pronounced by a Muslim husband; and

(*c*) "Magistrate" means a Magistrate of the First Class exercising jurisdiction under the Code of Criminal Procedure, 1973, in the area where a married Muslim woman resides. 2 of 1974.

## CHAPTER II

### DECLARATION OF *TALAQ* TO BE *VOID* AND ILLEGAL

*Talaq* to be *void* and illegal.

**3.** Any pronouncement of *talaq* by a person upon his wife, by words, either spoken or written or in electronic form or in any other manner whatsoever, shall be *void* and illegal.

Punishment for pronouncing *talaq*.

**4.** Whoever pronounces *talaq* referred to in section 3 upon his wife shall be punished with imprisonment for a term which may extend to three years and fine.

## CHAPTER III

### PROTECTION OF RIGHTS OF MARRIED MUSLIM WOMEN

Subsistence allowance.

**5.** Without prejudice to the generality of the provisions contained in any other law for the time being in force, a married Muslim woman upon whom *talaq* is pronounced, shall be entitled to receive from her husband such amount of subsistence allowance for her and dependent children as may be determined by the Magistrate.

Custody of minor children.

**6.** Notwithstanding anything contained in any other law for the time being in force, a married Muslim woman shall be entitled to custody of her minor children in the event of pronouncement of *talaq* by her husband, in such manner as may be determined by the Magistrate.

Offences to be cognizable and non-bailable.

**7.** Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973, an offence punishable under this Act shall be cognizable and non-bailable within the meaning of the said Code. 2 of 1974.

STATEMENT OF OBJECTS AND REASONS

The Supreme Court in the matter of Shayara Bano *Vs.* Union of India and others and other connected matters, on 22nd August, 2017, in a majority judgement of 3:2, set aside the practice of *talaq-e-biddat* (three pronouncements of *talaq*, at one and the same time) practiced by certain Muslim husbands to divorce their wives. This judgement gave a boost to liberate Indian Muslim women from the age-old practice of capricious and whimsical method of divorce, by some Muslim men, leaving no room for reconciliation.

2.The petitioner in the above said case challenged, *inter alia*, *talaq-e-biddat* on the ground that the said practice is discriminatory and against dignity of women. The judgement vindicated the position taken by the Government that *talaq-e-biddat* is against constitutional morality, dignity of women and the principles of gender equality, as also against gender equity guaranteed under the Constitution. The All India Muslim Personal Law Board (AIMPLB), which was the 7th respondent in the above case, in their affidavit, *inter alia*, contended that it was not for the judiciary to decide matters of religious practices such as *talaq-e-biddat*, but for the legislature to make any law on the same. They had also submitted in the Supreme Court that they would issue advisories to the members of the community against this practice.

3. In spite of the Supreme Court setting aside *talaq-e-biddat*, and the assurance of AIMPLB, there have been reports of divorce by way of *talaq-e-biddat* from different parts of the country. It is seen that setting aside *talaq-e-biddat* by the Supreme Court has not worked as any deterrent in bringing down the number of divorces by this practice among certain Muslims. It is, therefore, felt that there is a need for State action to give effect to the order of the Supreme Court and to redress the grievances of victims of illegal divorce.

4. In order to prevent the continued harassment being meted out to the hapless married Muslim women due to *talaq-e-biddat*, urgent suitable legislation is necessary to give some relief to them. The Bill proposes to declare pronouncement of *talaq-e-biddat* by Muslim husbands *void* and illegal in view of the Supreme Court verdict. Further, the illegal act of pronouncing *talaq-e-biddat* shall be a punishable offence. This is essential to prevent this form of divorce, wherein the wife does not have any say in severing the marital relationship. It is also proposed to provide for matters such as subsistence allowance from the husband for the livelihood and daily supporting needs of the wife, in the event of husband pronouncing *talaq-e-biddat*, and, also of the dependent children. The wife would also be entitled to custody of minor children.

5. The legislation would help in ensuring the larger Constitutional goals of gender justice and gender equality of married Muslim women and help subserve their fundamental rights of non-discrimination and empowerment.

6. The Bill seeks to achieve the above objects.

NEW DELHI; RAVI SHANKAR PRASAD.

*The* 15*th December,* 2017.

# நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முத்தலாக் சட்டம் தமிழ் வடிவம்

**அத்தியாயம் ஒன்று**

*(1)* *(1)* முஸ்லிம் பெண்கள் (திருமண உரிமை பாதுகாப்பு) சட்டம், *2017* என்று இச்சட்டம் அழைக்கப்படும்

*(2)* ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலங்களை தவிர இந்தியாவின் அனைத்து பகுதிகளுக்கும் இது பொருந்தும்

*(3)* அரசிதழ்களின் வழியாக மத்திய அரசு தெரிவிக்கும் நாளில் இருந்து இச்சட்டம் நடைமுறைக்கு வரும்

**2. சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி,**

(a) மின்னணு வடிவம் என்பது தகவல் தொழில் நுட்ப சட்டம், *2000*-இன் பிரிவு *2*-இன் உள்பிரிவு *(1)* இல் (r) பகுதியில் கூறப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்

(b) தலாக் என்பது தலாக் பித்அத் அல்லது இதே போன்ற மற்ற தலாக் முறைகளான முஸ்லிம் கணவன்மார்களால் வழங்கப்படும் உடனடியான மற்றும் மீட்டு பெற முடியாத விவாகரத்தை குறிக்கும்.

(c) நடுவர் (Magistrate) என்பது குற்றவியல் நடைமுறை சட்டம் *1973*-இன் படி, திருமணமான முஸ்லிம் பெண் வாழும் பகுதியில் சட்டத்தை நடைமுறைபடுத்தும் முதல் நிலை நடுவரை குறிக்கும்

**அத்தியாயம் இரண்டு**

**சட்ட விரோத, செல்லுபடியாகாத தலாக்**

*3.* வாய்மொழியாகவோ அல்லது கடிதம் வழியாகவோ அல்லது மின்னணு ஊடகங்கள் வழியாகவோ அல்லது வேறு விதமாகவோ ஒருவர் தன் மனைவியிடம் தலாக் என்று கூறுவது

*4.* பிரிவு *3* இல் கூறப்பட்டுள்ள வழிகளின்படி, யாரேனும் தன் மனைவியிடம் தலாக் கூறினால் அவருக்கு அதிகபட்சமாக மூன்று ஆண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதித்து தண்டனை வழங்கப்படும்.

**அத்தியாயம் மூன்று**

**திருமணமான முஸ்லிம் பெண்களின் உரிமைகளை பாதுகாத்தல்**

*5.* நடப்பிலிருக்கும் சட்டங்களின் காணப்படும் விதிகளின் பொதுத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இல்லாதவாறு - திருமணமாகி தலாக் கூறப்பட்ட பெண் தன்னுடைய வாழ்க்கை தேவைக்காகவும், தன்னுடைய குழந்தைகளுக்காகவும் நடுவரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகையை தனது கணவரிடமிருந்து பெற உரிமையுடையவர்.

*6.* நடப்பிலிருக்கும் சட்டங்களில் காணப்படும் விதிகள் எதை அடக்கியிருந்த போதிலும்- கணவனால் தலாக் கூறப்பட்ட பெண் தன்னுடைய பருவமடையா குழந்தைகளை நடுவரின் தீர்ப்பின் படி தன்னுடைய பாதுகாப்பில் வைத்து பராமரிக்க உரிமையுடையவர்

*7.* குற்றவியல் நடைமுறை சட்டம், *1973*-இல் என்ன அடக்கியிருந்த போதிலும் - இச்சட்டத்தின்படி, பிடியாணை, ஜாமின் இல்லாமல் கைது செய்யப்படக்கூடிய தண்டனைக்குரிய குற்றமாகும்

**சட்டத்தின் நோக்கம் கொள்கை விளக்கம்**

1. உச்ச நீதிமன்றத்தில் நடந்த சாய்ரா பானு Vs இந்திய அரசு என்ற வழக்கிலும் இன்னும் இது போன்ற மற்ற வழக்கிலும், உச்ச நீதிமன்றம் 3:2 என்ற விகிதத்தில் வழங்கிய பெரும்பான்மை தீர்ப்பு முஸ்லிம் கணவன்மார்களால் மனைவிமார்களை விவாகரத்து செய்ய நடைமுறையில் இருக்கும் தலாக் பித்அத் (ஒரே நேரத்தில் மூன்று தலாக்கையும் சேர்த்து கூறுவது - முத்தலாக்) முறை செல்லாது எனக்கூறிட்டு இந்தத் தீர்ப்பு திடீர் மன சலனத்தினால், மறு இணக்கத்திற்கு வாய்ப்பளிக்காத விவாகரத்து முறையிலிருந்து முஸ்லிம் பெண்களை விடுவிப்பதற்கு ஊக்கம் அளித்துள்ளது.

2. தலாக் பித்அத் என்ற நடைமுறை பெண்களின் கண்ணியத்தை குறைக்கின்றது அவர்களை வேறுபாட்டுடன் நடத்திடுகின்றது என்ற அடிப்படையில் மேலே கூறப்பட்ட மனுதாரர் இம்முறையை எதிர்த்து வழக்கு தொடுத்தார். தலாக் பித்அத் என்பது அரசியல் சாசனத்தில் கூறப்படும் அறம், பெண்களின் கண்ணியம், பாலின சமத்துவ கொள்கை மற்றும் அரசியலமைப்பு உறுதியளித்துள்ள பாலின சமத்துவம் இவற்றிக்கு எதிராக இருப்பதால் அரசு எடுத்திருக்கும் நிலைபாட்டை இத்தீர்ப்பானது நியாயப்படுத்துகின்றது. மேலே கூறப்பட்டுள்ள வழக்கின் ஏழாவது எதிர் மனுதாரரான முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் அளித்துள்ள சத்திய பிரமாணத்தில் தலாக் பித்அத் போன்ற மதம் சார்ந்த வழக்கங்களில் நீதிமன்றம் முடிவெடுத்திட எதுவும் இல்லை என்றும் ஆனால் சட்டமன்ற பேரவைகள் இதுகுறித்த சட்டங்களை கூறலாம் என்று வாதாடியது. இந்த நடைமுறைக்கு எதிராக சமுதாயத்திற்கு அறிவுரையை வழங்கிடுவோம் என்றும் உச்ச நீதிமன்றத்தில் இவ்வாரியம் கூறியது.

3. தலாக் பித்அத்-ஐ உச்ச நீதிமன்றம் நீக்கியபோதிலும், முஸ்லிம் தனியார் சட்டவாரியம் உறுதிமொழி கொடுத்திருந்த போதிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இம்முறையை பயன்படுத்தி விவாகரத்து நடைபெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உச்ச நீதிமன்றம் இம்முறையை நீக்கியிருந்தாலும் இத்தீர்ப்பு இம்முறையை பயன்படுத்தி விவாகரத்து செய்யும் நடைமுறையை குறைத்திடவில்லை. எனவே உச்ச நீதி மன்றத்தின் ஆணையை நடைமுறைபடுத்திடவும், சட்டவிரோத விவாகரத்தினால் ஏற்படும் குறைகளை தீர்க்கவும் மாநில அரசுகளின் உதவி தேவை என்றும் உணரமுடிகிறது.

4. தலாக் பித்அத்தினால் மகிழ்ச்சியிழந்த முஸ்லிம் பெண்களுக்கு இழைக்கப்படும் தொடர்ச்சியான தொல்லைகளை தடுத்து நிறுத்திட அவர்களுக்கு நிவாரணம் வழங்கிடும் உடனடி சட்டங்கள் தேவை. உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, முஸ்லிம் கணவன்மார்களால் கூறப்படும் தலாக் பித்அத் முறை சட்டவிரோதமானது மற்றும் செல்லாதது என இந்த மசோதா அறிவிக்கின்றது. மேலும் சட்டவிரோத தலாக் பித்அத்தை மொழிவது தண்டனைக்குரிய குற்றம். மனைவி ஏதும் கூறமுடியாத அளவில் திருமண உறவுகளை முறிக்கும் விவாகரத்துகளை தடை செய்வது இன்றியமையாதது. கணவனால் தலாக் பித்அத் கூறப்பட்ட மனைவி அவரிடமிருந்து தனது அன்றாட தேவைக்காகவும், தனது குழந்தைகளின் தேவைக்காகவும் ஒரு தொகையை பெற்றிடவும் இம்மசோதாவில் மொழியப் பட்டுள்ளது. தன்னுடைய பருவமடையா குழந்தைகளை தனது பொறுப்பில் வைத்து பாதுகாக்கவும் மனைவிக்கு உரிமையுண்டு.

5. திருமணமான முஸ்லிம் பெண்களுக்கு பாலின சமத்துவம் மற்றும் பாலின நீதிகளை வழங்கிடும் அரசியலமைப்பின் பெரிய குறிக்கோள்களை உறுதி செய்திடவும் அவர்களுக்கு அதிகாரத்தையும் பாகுபடில்லா தன்மையையும் உருவாக்கிடவும் இச்சட்டம் உதவிடும்.

6. மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்திட இம்மசோதா நாடுகிறது.

- ரவிசங்கர்பிரசாத்

# அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்



"பத்மாவதி" - என்றொரு திரைப்படத்தைத் தயாரித்தார்கள். இந்தத் திரைப்படம் வெளியே வந்துவிடக்கூடாது என்பதில் எல்லோரும் கவனமாக இருந்தார்கள். சங்கப் பரிவாரத்தினர் இந்தத் திரைப்படத்தை மையமாகக் கொண்டு தங்களுடைய முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்தை முன்னே கொண்டு செல்ல முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

இந்த நாட்டு மக்களை இந்து மக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் பிளந்து தங்கள் வயிறுகளை நிரப்பிட இஃதோர் அரிய வாய்ப்பு என்றே கருதினார்கள்.

இப்படி செய்திடும்போது அவர்களுடைய லட்சியங்களில் ஒன்றும் கைகூடி விடுகின்றது. அந்த லட்சியம் இந்தியாவில் இன்று ராஷ்டிரத்தை நிலை நாட்டுவதே.

இந்த வெறியில் இவர்கள் இந்த நாட்டுக்கு தீராத துரோகம் ஒன்றையும் செய்து வருகின் றார்கள். அது, இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் உலை வைத்து விடுகின் றார்கள். இதனால் இந்தத் திரைப்படம் அதாவது பத்மாவதி என்ற திரைப்படம் திரையிடப் படக்கூடாது என கபளீகரங்களைச் செய்து வந்தார்கள்.

திரைப்படம் திரையிடப் படக்கூடாது என்பதற்கு சங்கப் பரிவாரத்தினர் கூறும் காரணங்கள், பத்மாவதி என்ற சித்தூர் ராணி, அலாவுதீன் கில்ஜி என்ற முஸ்லிம் மன்னரிடம் காதல் கொண்டாள், மையல் கொண்டாள் என்பனவே!

இந்தத் திரைப்படம் திரையிடப்படுமானால் இந்து பெண்கள், குறிப்பாக இராஜபுத்திர பெண்கள் மக்கள் மன்றத்தில் தலை குனிந்து நின்றிட வேண்டியது வரும் என்றார்கள்.

இந்து பெண்கள் இஸ்லாத்தை ஏற்பதும் முஸ்லிம்களைத் திருமணம் செய்வதும் அன்று தொட்டே இந்தியாவில் நடக்கும் ஓர் அன்றாடைய நிகழ்வு. அதை வைத்துக்கொண்டு வெறுப்பை வளர்ப்பது, கொள்கையற்றவர்களின் பிழைப்பு வாதம் இந்திய வரலாறு முழுவதும் பெண்களும் ஆண்களும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேதான் வருகின்றார்கள். காரணம், ஜாதிக் கொடுமைகள் - சதி என்ற - பெண்களுக்கும் விதவைகளுக்கும் இழைக்கப்படும் அநீதி என்பவாகும்.

ஆனால் அலாவுதீன் கில்ஜி அவர்கள் முறையாக திருமணங்கள் செய்து கொண்டவர். அவருடைய முதல் மனைவி அவருடைய மாமன் ஜலாலுதீன் கில்ஜியின் மகள், மாலிக்க-இ-ஜஹான். இரண்டாவது மனைவி மெஹ்ரு. இன்னொரு மனைவி ஜெயாசியாமாலி. இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். இவருக்கு இரண்டு மகன்கள் ஒருவர் ஷிஹாபுதீன்உமர், இன்னொரு மகன் குதுபுதீன் முபாரக்.

அதேபோல் வரலாற்றின் எங்கேயும் அவர் பெண்களுக்காக அல்லது மாற்றாரின் மனைவி யரை கவருவதற்காகப் படை நடத்தினார் என்றொரு குறிப்பு இல்லை. அதுபோல அவர் சித்தூர் ராணி பத்மாவதி மீது காதல் கொள்ள வில்லை. கவர்ந்து வர படை நடத்திடவில்லை. சித்தூர் ராணி பத்மாவதியும் அவர்மீது காதல் கொண்டார் என்பதும் பொய்.

சித்தூர் பத்மாவதியும் முறைப்படி ரட்டன் சிங் என்பவரை மணந்திருந்தார். ரட்டன் சிங் இறந்தபோது, அவர் உடன் கட்டை ஏறி தன்னை மாய்த்துக்கொண்டார். இது உண்மையான வரலாறு.

ஆனால் அலாவுதீன் கில்ஜி மரணித்து (1316)-ல் இருநூறு ஆண்டுகளுக்குப் பின் எழுதப் பட்ட ஒரு கட்டுக்கதை, அதில் காதல் ஒரு காதல் படலாம் கதையளவில் சுவாரஸ்யமாக இருக்கலாம். நிச்சயமாக அது உண்மையல்ல.

இதையெல்லாம் விட ஆழ்ந்து கவனித்திட வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அது பிற்றை நாட்களில் இந்தியாவின் அனைத்து துறைகளிலும் புகுந்த வகுப்புவாத பாசிசம் - இந்துத்துவா என்பது.

இந்த பாசிஸ்ட்டுகளுக்கு ஒரு நிர்பந்தம். அது அவர்கள் அலாவுத்தீன் கில்ஜியின் வாழ்க்கை வரலாற்றை திரித்துக்கூறிட வேண்டும்.

பொய்யையும் புரட்டையும் நிரம்பக் கூறி உண்மையை மறைத்தாக வேண்டும் என்ற கட்டாயம். ஏனெனில் அலாவுத்தீன் கில்ஜியின் உண்மை முகம் இளையத் தலைமுறைக்கு தெரியவந்தால், அவர்கள் வானளாவ அலாவுதீன் கில்ஜியைப் புகழ்வார்கள். அவரைப்போன்ற ஆட்சியாளர்களால் தான் இந்தியாவை போன்ற அகண்டு விரிந்த நாட்டை ஆட்சிச் செய்திட இயலும். நீதியையும், அமைதியையும் நிலைநாட்டிட இயலும் என்பதை உணர் வாளர்கள். இதனால் முஸ்லிம்கள், அவர்களின் வாழ்க்கை வழிகாடடியாம் இஸ்லாம், இவற்றின் மீது மிகச்சிறந்த எண்ணங்களைக் கொள்வார்கள். இந்த மார்க்கத்தை ஏற்பார்கள்.

இதில் இந்தியாவில் சுமார் 200 ஆண்டு களுக்கு முன் வேரூன்றிய பாசிஸ்ட்டுகளுக்கு ஏற்படும் மிகப்பெரிய இழப்பு. என்னவெனில் அவர்களால் வகுப்பு வெறியை வளர்த்திட இயலாது. அதனால் இந்துத்துவாவை வளர்த்திட இயலாது. அரசியல் நடத்தி வயிறு பிளைந்திட இயலாது.

அலாவுதீன் கில்ஜியைப் பொறுத்தவரை அனைத்து வரலாற்று ஆசிரியர்களுக்கும் ஒரே குரலில் சொல்லும் கருத்து இந்தியாவையும் இந்து மதத்தையும் காப்பாற்றியவர் அலாவுதீன் கில்ஜி. அப்படி அவர் யாரிடமிருந்து இந்தியா வையும் இந்து மதத்தையும் காப்பாற்றினார்.

அதனை விரிவாகப் பார்ப்போம்...

**அலாவுதீன் கில்ஜி - இந்தியா - இந்துமதம்**

அலாவுதீன் கில்ஜி அவர்கள் 1296 முதல் 1316 வரை இந்தியா என்று இன்று அழைக்கப்பம் நிலப்பரப்பை ஆட்சி செய்தவர்.

இவர் இன்று அவர் மீது அவதூறுகளை அள்ளித் தெளிப்பவர்கள் கூறுவதைப்போல், வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்த மன்னரல்ல. இவர் பிறந்தது டெல்லியில்தான். சில வரலாற்றுக் குறிப்புகள் அவர் வங்காளத்தில் பிறந்தவர் எனக் குறிப்பிடுகின்றன. ஆக அவர் அந்நிய நாட்டவர் அல்ல என்பது திண்ணம்.

அவர் ஆட்சியில் அமர்ந்த காலக் கட்டத் தில் இன்று இந்தியா என்று அழைக்கப்படும் இந்த நிலப்பரப்பில் பல்வேறு மன்னர்கள், பேரரசர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரும் தங்களை இந்துக்கள் என்றோ இந்து இராஜாக்கள் என்றோ சொல்லிக் கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் குலத்தின் பெயராலும், சில நேரங்களில் இனத்தில் பெயராலும்தான் அறியப்பட்டார்கள்.

இந்த மன்னர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வதும், தங்கள் ஆட்சிகளின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொள்வதும் வழக்கம்.

இந்த வகையில்தான் சேரன் என்பார் சோழன் என்பார். பாண்டியன் என்பார், இவர்கள் அடிக்கடி மோதிக் கொண்டார்கள். சேர்ந்தொரு நாள் வாழ்ந்ததில்லை என பிற்றைநாள் தமிழர்கள் ஆதங்கப்பட்டார்கள்.

ஆக சண்டையிட்டுக் கொள்வது சமருக்கு நிற்பதும் சாம்ராஜ்யங்களை அகலப்படுத்திக் கொள்வதும் அன்றைய நாள் வரலாறு.




இந்த வகையில் அலாவுதீன் கில்ஜி அவர்கள் பல நாடுகளைக் கைப்பற்றினார்கள். தங்கள் ஆட்சியின் எல்லையை விரிவுபடுத்தினார்கள். மிகப்பெரியதொரு நிலப்பரப்பை ஆட்சி செய்தார்கள்.

அவருடைய ஆட்சியில் எல்லைகளை வரலாற்று ஆய்வாளர் மூனிஸ் போரா அவர்கள், ஹிமாலயாவின் அடிவாரம் முதல் ஆதமின் பாலம் வரை (நமது இராமேஸ்வரம்) ஆட்சி செய்தார். (நூல் Alaudeen Khilji The Saviour of Hinduism) நமது பாண்டிய மன்னர்களையும் வெற்றி கொண்டார் என்கின்றார் வரலாற்று விரிவுரையாளர் சந்திஸ் சந்திரா (நூல் : Mughals The Medevial History of India ) இதில் அலாவுதீன் கில்ஜி அவர்கள் வெற்றிகொண்ட சாம்ராஜ் யங்கள் ஏராளம்... ஏராளம்... அதில் அவர் சித்தூரையும் வெற்றி கொண்டார்.

அவருடைய வெற்றிப் படலத்தில் குறிப் பிடத்தக்க வெற்றி அவர் அன்றைய உலகின் வெல்ல முடியாதவர்கள் என்று கருதப்பட்ட மங்கோலியர்களை வென்றது.

**மங்கோலியர்கள்**

இமயமலையின் அடிவாரத்தில் தொடங்கி மங்கோலியர்கள் தங்களுக்கு எதிர்பட்ட சாம்ராஜ்யங்களுக்கு எதிராக தொடர்ந்தார்கள் யுத்தங்களை. எதிர்த்து நிற்பார் யாருமில்லை, மங்கோலியர்களின் பெயரைக் கேட்டால் அண்ட சராசரங்களும் நடுங்கும் என்ற அளவிலேதான் அன்றைய உலகம். மங்கோலியர் பயத்தால் பீடிக்கப்பட்டிருந்தது.

மங்கோலியர்கள் - என்று சொல்வதும் மாபெரும் "பூச்சாண்டி" எனச் சொல்வதும் ஒன்றென கருதப்பட்ட காலம் அது.

குழந்தைகள் பால் குடிக்க மறுத்தால், தாய்மார்கள் மங்கோலியர்களிடம் சொல்லிக் கொடுத்து விடுவேன், என்றால் குழந்தைகள் பாலை குடித்துவிடுமாம். இப்படி மங்கோலி யர்களைப் பற்றிய பயம் பாலகர்கள் முதல் பெரியவர்கள் வரை தொற்றிக் கொண்டிருந்த காலம் அது.

மங்கோலியர்கள் மேற்கொண்ட போர்கள் வெறும் போர்களாக மட்டும் இருப்பதில்லை. கண்ணில் கண்டதையெல்லாம் அழிப்பார்கள். பச்சிளம் குழந்தைகளையும் பயங்கரமாக கொலை செய்வார்கள். பெண்களின் கருப்பை யிலிருக்கும் சிசுக்களையும் சிதைப்பார்கள்.

கையில் கிடைப்பதையெல்லாம் கொள்ளை யடிப்பார்கள். ஆண்களை அவர்கள் ஆயுதந் தாங்கி போராடாதவர்களாக இருந்தாலும் சரணடைந்தவர்களாக இருந்தாலும் ஈவிரக்க மின்றிக் கொலை செய்வார்கள். இளம் வயது பெண்களைக் கவர்ந்து செல்வார்கள்.

இந்த மங்கோலியர்கள் சீன தேசத்தின் மீது படையெடுத்தார்கள். குரூரங்களையும் கொலை பாதகங்களையும் கட்டவிழ்த்துவிட்டார்கள். அவர்கள் முழுமையாகச் சீனாவை வெற்றிக் கொண்டு திரும்பியபோது சீனாவில் வாழ்ந்த மக்களில் 45% நாற்பத்தைந்து சதவிகிதத்தினர் மட்டுமே உயிரோடு இருந்தார்கள். ஆதாரம் Alauddin Khilji The Saviour of Hinduism? By Monish Borah)

மங்கோலியர்கள் தாம் வரலாற்றில் மிகவும் பரந்து விரிந்த நிலப்பரப்பு ஒன்றை ஆட்சி செய்தார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றவர்கள் சைனாவிலிருந்து ரஷ்யா வரையுள்ள அனைத் தும் ஆட்சி செய்தார்கள். அத்தோடு துருக்கி யிலிருந்து மத்திய ஆகிய நாடுகள் வரை அனைத்தையும் அவர்கள் ஆட்சி செய்தார்கள் என கூறுகின்றார்கள்.

### முஸ்லிம்களின் ஆட்சி

ரஷ்யா மங்கோலியர்களின் ஆக்கிரமிப்பால் தன் வளர்ச்சியில் 200 ஆண்டுகள் பின்னுக்கு தள்ளப்பட்டது இஸ்லாமிய உலகம் அப்போதைய இஸ்லாமிய சாம்ராஜ்யம் வலிமைமிக்க நிலையிலிருந்து சற்று கீழே இறங்கி இருந்தது. கலிபா என்ற இஸ்லாமிய ஆட்சித் தன்மை அப்போது பாக்தாத்தில் (இன்றைய ஈராக்) இருந்தது. அவற்றையெல்லாம் துவம்சம் பண்ணினார்கள் மங்கோலியர்கள்

அடுத்து எந்த முஸ்லிம் நிலப்பரப்பை காவு கொள்ளலாம் என அவர்கள் நினைக்கின்றார் களோ அந்த நிலப்பரப்பு அட்டிஇன்றி அவர்களுககு அடிபணிந்தது மன்னர்களைச் சிறைப்பிடிப்பது என்ற சொல்லாட்சியே அவர்களின் அகராதியில் இல்லை. வெற்றிக் கொண்ட நாடுகளை ஆண்ட மன்னர்களை கொலை செய்தார்கள். முஸ்லிம் உலகத்தின் மேல் அவர்க்ள பாய்ந்த வேகம், வெட்டி வீழ்த்திய மனிதர்கள் இவற்றால் அவர்கள் இறைவனின் சாபம்.

Sourage of God அதாவது முஸ்லிம் உலகின் மீது வீழ்ந்தது. இறைவனின் சாபம் என எண்ணினார்கள்.

முஸ்லிம்கள் ஆட்சி வீற்றிருந்த பாக்தாத்-ஐ விட்டு அவர்கள் அகன்றபோது ஓரிரு மனிதர்கள் மட்டுமே உயிரோடு இருந்தார்கள். எஞ்சியோர் அத்தனை பேரும் கொலை செய்யப்பட்டார்கள்.

(Source : Islam and the world by Abul Sasan Ali Nadwi)

பாக்தாத்திலிருந்த நூல் நிலையத்தின் நூல் களையெல்லாம் டைகிரீஸ் நதியில் எறிந்தார்கள். இதனால் இடைகிரிஸ் நீரின் நிறமே சிலகாலம் வரை கறுப்பானது.

ஷேஷாத்திரி குமார் why India shoud be grateful to Alauddin Khilji

**(முஸ்லிம் உலகம் மங்கோலியர்கள் எப்படி எதிர்கொண்டது என்பதை தனிக்கட்டுரையாக தந்துள்ளோம்)**

### இந்தியாவை நோக்கி

இப்படி உலகையெல்லாம் அடித்து அழித்து நொறுக்கிப் போட்டுக் கொண்டுவந்த மங்கோலியர்கள் அன்றைய இந்தியாவையும் அழிக்கலாம் கையகப்படுத்தலாம் என்று திட்டம் போட்டார்கள். அவர்கள் கையகப்படுத்திய பகுதிகளையெல்லாம் விட இந்தியாவை கையகப்படுத்துவதை முதன்மையானது எனக் கருதினார்கள். காரணம் இந்தியாவின் இயற்கை வளம். இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களை அழித்துவிட்டு அதன் வளங்களைக் கையகப்படுத்தி தங்கள் கிடுக்கிப் பிடிக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என விரும்பி னார்கள்.

அதனால் பெரும் படையுடன் வந்து இந்தியாவை தாக்கினார்கள். இது 1298-இல் நடைபெற்றது. ஆனால் அவர்களின் போதாத காலம் இந்தியாவில் அலாவுத்தீன் கில்ஜி அவர்களின் ஆட்சி நடைபெற்றது.

மங்கோலியர்கள் தங்கள் போரின் ஒரு யுக்தியில் இந்தியாவின் வடக்கு பகுதியையும், மேற்குப் பகுதியையும் கிழக்குப பகுதியையும் முற்றுகை இட்டார்கள். இதற்காக பல லட்சம் படைகளைத் திரட்டி வந்தார்கள். ஒவ்வொரு திக்கிலும் இரண்டு இலட்சம் படை வீரர்களை நிறுத்தி இருந்தார்கள்.

மங்கோலியர்கள் தங்கள் முதல் தாக்குதலை 1297-இல் தொடங்கினார்கள். இந்தத்தாக்குதலை மங்கோலியர்கள் நடத்தியபோது இநதியாவில் முஸ்லிம்கள் மிகவும் குறைவாகத்தான் வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். இன்றைய சொல்லாடசியில் இந்துக்கள் என அறியப்படு பவர்கள் இந்துக்கள் என அழைக்கப்படுகிறார் கள்தாம் எண்ணிக்கையில் அதிகமாக வாழ்ந் துக் கொண்டிருந்தார்கள். அத்தோடு அவர்கள் இந்தியாவில் மட்டுமே வாழ்ந்து கொண்டிருந் தார்கள் என்கின்றார் வரலாற்று ஆசிரியர் மனிஸ்போரா!

(Source Alauddin Khilji - The Saviour of Hundiism by Monish Borah)

இந்நிலையில மங்கோலியர்களை எதிர் கொள்வதில் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் அலாதியானதொரு படையைத் திரட்டிட வேண்டியதாயிற்று. அந்தப் படைகளை தக்க வைத்திட பெரும் நிதியையும் திரட்டிட வேண்டியதாயிற்று. அனைத்தையும் பாங்குற செய்தார். அதற்காக சிறப்பான புதிரான



பொருளாதார கொள்கைகளைப் பின்பற்றிட வேண்டியதாயிற்று. அலாவுத்தீன்கில்ஜி அவர்கள் அதற்கான வியூகம் வகுத்தார். நடப்பிலிருந்து பொருளாதார நடவடிக்கைகளை மாற்றி அனைத்து தேவையான நிதியைத் திரட்டினார்.

அலாவுத்தீன் கில்ஜியின் நுண்மாண்நுளை புலத்துப் பொருளாதாரக் கொள்கைகளை இன்றளவும் உலகம் போற்றுகின்றது. (அதனை அடுத்த இதழில் தருவோம்)

மொத்தத்தில் தேவையான படை பலத்தை திரட்டினார். மங்கோலியர்களின் முற்றுகையை உடைத்தார். மங்கோலியர்களின் கூடாரத் திற்குள் படை நடத்திச் சென்றார். மங்கோலியர் களைப் புறமுதுகிட்டு ஓடிடச் செய்தார். இப்படி மங்கோலியர்கள் தங்கள் முதல்முற்றுகையில் தோற்றார்கள். 20,000 மங்கோலியர்கள் மாண் டார்கள். அலாவுத்தீன் கில்ஜியின் படைகளை சிந்து பகுதியில் உலுக்கான் அவர்கள் வழி நடத்தினார்கள். மங்கோலியர்கள் இந்தியாவை வெற்றிகொள்ள இன்னும் அதிகப்படைகள் வேண்டும், அதிக ஆயுதங்கள் வேண்டும் என கணித்தார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். காலம் கனிய காத்திருந்தார்கள்.

மங்கோலியர்கள் 1299-இல் மீண்டும் ஒருமுறை இந்தியாவைத் தாக்கி கையகப்படுத் திட முயற்சி செய்தார்கள். அதிலும் படுதோல் வியைக் கண்டார்கள். 8000 படை வீரர்களை இழந்தார்கள்.

அன்றைய நாட்களில் உலகிலேயே அதிகமான ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் ஒரு பெரும்படை இருந்தது என்றால் அது அலாவுத்தீன் கில்ஜி அவர்களின் படைதான்.

(Source : Why India Mould be Grateful to Alavudeen khilji : By Sheshadri Kumar)

மங்கோலியர்கள் மீண்டும் 1303-இல் வந்து ஒரு தாக்குதலை நடத்தினார்கள். அதிலும் தோல்வியைச் சந்தித்தார்கள். இந்தப் போரில் அலாவுத்தீன் கில்ஜியின் படைகளை மாலிக் நாயக் என்ற மாவீரன் தலைமைதாங்கி வெற்றிமுகம் நோக்கி நடத்திச் சென்றான்.

மீண்டும் 1305-இல் மங்கோலியர்கள் இந்தி யாவை தாக்கிட வந்தார்கள். இதில் அலாவுத்தீன் கில்ஜியின் தளபதியாக மாலிக்காபூர் அவர்கள் பொறுப்பேற்றியிருந்தார்கள் வென்றார்கள்.

மங்கோலியர்கள் இந்தியாவின்மேல் கொண்ட மோகம் அத்தோடு நின்றுவிடவில்லை. 1306-இல் மீண்டும் படை நடத்தி வந்தார்கள். இந்த முறை அவர்களால் டெல்லி வரை வந்து டெல்லியை அழித்திட முடிந்தது. ஆனால் வெற்றியை உறுதி செய்திட இயலவில்லை. இப்படி அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இந்தியாவை மங்கோலியர்களின் கோர தாக்குதல்களிலிருந்து அதனால் ஏற்படவிருநத அழிவுகளிலிருந்தும் காப்பாற்றினார்கள்.

## வரலாற்று ஆய்வாளர்கள் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் இந்து மதத்தையும் - இந்துக்களையும் காப்பாற்றினார்கள் என ஏன் கூறுகின்றார்கள்?

இந்தக் கேள்விக்கு ஷேஷாத்திரி குமார் அவர்கள் கூறும் பதில்...

- "இந்தக் கேள்விக்கு விடைகாண முதலில் மங்கோலியர்களைப் பற்றிய ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அது அவர்கள் எப்படி தங்கள் எதிரிகளையும் எதிரி களின் உடைமைகளையும் நடத்து வார்கள் என்பதே."
- "அவர்கள் ஒரு நாட்டை வெற்றிகொள்

வார்கள் என்றால், அவர்கள் அந்த நாட்டைத் தரைமட்டமாக்கி விடு வார்கள்., அவர்கள் அந்த பூமியில் எதையுமே விட்டு வைக்க மாட்டார்கள்."

- "அத்தோடு அந்த நாட்டில் அன்று வரை இருந்த கலாச்சாரத்தின் கடைசி அத்தாட்சியையும் அழித்துத் தடந்தெரி யாமல் ஆக்கிவிடுவார்கள். தாங்கள் வெற்றிகொண்ட இடங்களில் மங்கோலியர்கள் ஒருபோதும் குடியமர்ந்த தில்லை."
- வெற்றிகொண்ட இடத்தில் கிடைககும் எல்லா செல்வங்களையும் இன்னும் தாங்கள் எவை, எவற்றையெல்லாம் பெறுமானமுள்ள பொருள்கள் என கருதுகின்றார்களோ அவற்றையெல்லாம் தங்கள் நாடான மங்கோலியாவுக்கே எடுத்துச் சென்று விடுவார்கள். "(அது இப்போதைய உஸ்பெக்கிஸ்தான் அப்போது அவர்களின் தலையாய பூமி இப்போது இஸ்லாமிய பூமி)"
- "அவர்கள் உயிரோடு விட்டு விடுபவர் கள் யாராக இருக்கும் என்றால் சில விஞ்ஞான அறிவுடையவர்கள் என அவர்கள் கருதுபவர்களைத்தான். இவர் களையும் அந்த பூமியில் விட்டு வைக்க மாட்டார்கள். தங்கள் நாட்டுக்கே அழைத்துச் சென்று விடுவார்கள்."
- "பெண்களையும் அடிமைகளையும் தங்களுக்கு சேவகம் செய்ய அழைத்துச் சென்று விடுவார்கள். ஆண்களைக் கொன்றுவிடு வார்கள்."
- "மங்கோலியர்கள், ஆக்கிரமித்து வெற்றி கொள்வார்கள் என்றில்லை அவர்கள் நாகரீகங்களையும் கலாச்சாரங்களையும் துடைத்தெறிந்து விடுவார்கள். இதனால் தான் மங்கோலியர்களை இறைவனின் சாபம் என அன்றைய வரலாற்றில் கூறுவார்கள்."
- மங்கோலியர்கள் ஏனைய ஆக்கிரமிப் பாளர்களைப் போன்றவர்களல்ல. மங் கோலியர்கள் அலாவுத்தீன் கில்ஜியை வென்றிருப்பார்கள் என்றால் அவர்கள் இந்திய நாகரீகத்தை உலகவரை படத்திலிருந்து முற்றாகத் துடைத் தெறிந்திருப்பார்கள்.
- இறுதியாக ஷேஷாத்திரி குமார் இப்படிக் கூறுகின்றார்...
- "If we have a Hindu Culture that survives in India a large credit for that hasto go to Alavuddin Khilji, one of History's a greated worriors and kings".. He saved Hindurism - (Why India Sould be grateful to alavuddin khilji sheshadri kumar.)
- "இந்தியாவில் இன்றளவும் இந்து கலாச் சாரம் என்ற பெயரில் ஒன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கான பெருமையும் அலாவுத்தீன் கில்ஜித்குத்தான் சொல்ல வேண்டும். அவர் வரலாற்றின் மிகப்பெரிய போர் வீரர் அத்தோடு மன்னராகவும் மாட்சிமமிக்க ஆட்சி நடத்தியவர் அவர். இந்தியாவை மங்கோலியர்களிடமிருந்து காப்பாற்றினார். அதனால் அவர் ஒரு வினோதமான வகையில் இந்து மதத்தைக் காப்பாற்றினார்."
- (ஆதாரம் : Why India Sould be greatful to Alavuddin Khilji by Shashadri Kumar, Radiance : Views Weekly = 3-9, December 2017)
- இதையே பல்வேறு ஆதாரங்களுடன் வரலாற்று ஆய்வாளர் MONISH BORAH மோனிஸ்போரா அவர்கள் இப்படி கூறுகின்றார்.

**அலாவுத்தீன் கில்ஜி எப்படி இந்தியாவைக் காப்பாற்றினார்?**

- நமக்கும் இன்றைய தலைமுறைக்கும் விளக்கம் தந்திட மோனிஸ் போரா அவர்கள் நம்முன் ஒரு கேள்வியை வைக்கின்றார். அந்தக் கேள்வி How did Alavuddin Khilji saved Hindurism? அதாவது அலாவுத்தீன் கில்ஜி இந்தி யாவை எப்படிக் காப்பாற்றினார்?
- மங்கோலியர்களை எதிர்கொண்டபோது அலாவுத்தீன் கில்ஜி இந்துக்கள் அதிக மாக வாழ்ந்துகொண்டிருந்த தன்னுடைய



சாம்ராஜ்யத்தை தற்காத்திட வேண்டிய நிலையில் இருந்தார். அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் மலாய் நாடடிலும், இந்திய - சைனாவிலும் கொஞ்சம் இந்துக்கள் வாழ்ந்தார்கள் என்றாலும் அவர்களைவிட அதிகமாக பௌவுத்தர்கள் என்ற யுத்த மதத்தைச் சார்ந்தவர்களும், முஸ்லிம்களும் அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இதனால் இந்திய துணைக் கண்டந்தான் அடிப்படையில் இந்துக்களின் வலுவான வசிப்பிடமாக இருந்தது.

- மங்கோலியர்கள் அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் 6 தாக்குதல்களை இந்தியாவின் மீது தொடர்ந்தார்கள். அவற்றுள் இரண்டு பெரிய அளவிலான கடுமையான தாக்குதல்கள். இவை 1298-யிலும் 1303யிலும் நடந்தவை. இந்தத் தாக்குதல்களை அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் தடுத்தார்கள் என்பது மட்டு மல்ல. அவற்றில் மங்கோலியர்களுக்கு கடுமையானஇழப்புகளையும் ஏற்படுத்தி னார்கள்.
- அலாவுத்தீன் கில்ஜியான வெற்றிக்கு அவளுடைய குதிளைப்படையின் பலம் முக்கியக் காரணம். இது அலாவுத்தீன் கில்ஜியின் கடுமையான உழைப்பால் உருவாக்கப்பட்டது. ஏனெனில் மங்கோ லியர்கள் தங்கள் குதிரைப்படையின் வலுவால்தான் அடுக்கடுக்கான வெற்றிக்களைக் குவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த உண்மையை தன்னுடைய ஒற்றர்கள் வழி முன்னரே தெரிந்து வைத்திருந்தார் அலாவுத்தீன் கில்ஜி அவர்கள்.
- மனித வரலாற்றில் மிகப்பெரிய குதிரைப்படை மங்கோலியர்களிடம் தான்இருந்தது. அந்தவலுவானபடையை ஒருமுறை அல்ல, இரண்டு முறை அல்ல பல முறை தோல்வியடையச் செய்வது என்பது வரலாற்றில் அன்றுவரை இல்லாத சாதனை. அன்றுவரை வரலாறு அறியாத ஒன்று.

### இதில் ஒரு கேள்வி?

- அலாவுத்தீன் கில்ஜி அவர்கள் தமது சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்காவிட்டால் அதாவது அவர் தோற்றுப் போயிருந்தால் என்ன நடந்திருக்கும்?
- இதனை புரிந்திட வேண்டும் என்றால் நாம் சில அடிப்படைகளைப் புரிந்திட வேண்டும். மக்கள் பரவலாக வாழ்ந்த

பகுதி என்ற அளவிலும், பூகோள அடிப் படையிலும் சிந்து சமவெளி இந்தியாவின் மிகப்பெரிய நிலப்பரப்பு. குறிப்பாக அன்றைய நாட்களில் இந்தியாவின் மிகப்பெரிய நிலப்பரப்பு சிந்து சமவெளி தான். (Indo Gangetic Plains)

- அன்றும்-ஒருவகையில் இன்றும் இந்தியா வின் மக்கள் தொகையில் பெரும்பகுதி இந்தப் பகுதியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது.
- இன்றைய இந்தியாவில் மக்கள் தொகை யின் அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் மும்பை, டெல்லி, கல்கத்தா, பெங்களூர் ஆகிய நகரங்கள் ஆகும். இவை அன்றிருக்கவில்லை. இதனால் அன்றைய இந்தியாவில், குறிப்பாக அலாவுத்தீன் கில்ஜியின் காலத்தில் சிந்து சமவெளி இந்தியாவின் மார்பிடம் என்ற அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.
- இதனை சீனா நாட்டுடன் ஒப்பிட்டுப் பாருங்கள், சீனாவிலும் பல சமவெளிகள் இருக்கின்றன. ஆனால் சிந்து சமவெளி யைப்போல் பெரும் நிலப்பரப்பாக ஒரு பெருவெளி என பெருமைகளைப் பெற்றிடவில்லை. காரணம், அவை அடிக்கடி மலைப்பாங்கான இடங்களால் பிரிக்கப்பட்டுக் கிடந்தன.
- இதனால் சைனாவின் இருந்த சமவெளிப் பகுதிகளில் படையெடுத்து வருபவர்கள், மலைகளையும், பாறை களையும் கடந்தே ஆக வேண்டும். அவர் களால் வேகமாக ஒரே வீச்சில் நிலப் பரப்புகளை ஆக்கிரமித்திடவோ, அழிக் கவோ இயலாது. ஆனால் சிந்து சமவெளிப் பகுதியில் இதுபோன்ற தடைகள் இல்லை. அங்கே வெல்வோர் வேகமாக பெரு நிலப்பரப்புகளை ஆக்கிரமிக்கலாம். தங்கள் ஆட்சியின் கீழ்கொண்டு வந்திடலாம்.
- அதேபோல் சீனாவின் இருந்தச் சமவெளிப் பகுதியில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களோ அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களோ இருக்கவில்லை.
- இவற்றால் மங்கோலியர்கள், சைனாவின் உள் புகுந்து தாக்குதல்களை நடத்திய போதும் அவர்களால் வேகமாக முன்னே றிட இயலவில்லை. அதற்காக அவர்கள் அரும்பாடுபட்டிட வேண்டிய தாயிற்று. ஆனாலும் வென்று காட்டினார்கள்.
- ஆனால் இந்தியாவின் நிலை அப்படி



யல்ல. இந்தியாவுக்குள் புகும் ஒரு படை மேற்கு பகுதியின் எல்லையிலுள்ள தடையை உடைத்துவிட்டால் தங்கு தடையின்றி முன்னேறிக் கொண்டே போகலாம். வரலாறு முழுவதும் இது தடையின்றி நடந்திருக்கின்றது. அந்நிலையில் அவர்கள் இந்தியாவின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை எளிதாகக் கையகப்படுத்திடலாம். அவை சிந்து சமவெளியில் எளிதாக அகப்பட்டுவிடும்.

- ஆக, மங்கோலியர்கள், இந்தியாவின் மேற்கு பகுதியில் இட்ட முற்றுகையையும் வடக்குப் பகுதியில் இட்ட முற்றுகையையும் தகர்த்ததன் மூலம் மங்கோலியர்கள் இந்தியாவின் மார்பிடத்தை அண்ட முடியாமல் அலாவுத்தீன் கில்ஜி செய்துவிட்டார். இந்த சிந்து சமவெளிப் பகுதிதான் அன்றைய உலகின் மிகவும் அதிகமாக வளம் வரப்பெற்ற பகுதி. இந்தப் பகுதியை மங்கோலியர்கள் அண்டவிடாமல் செய்துவிட்டார் அலாவுத்தீன் கில்ஜி.
- அதேபோல் மக்கள் தொகையில் பெரும்பகுதி குறிப்பாக இந்து மக்கள் அடர்த்தியாக வாழ்ந்த பகுதியில் மங்கோலியர்கள் தங்கள் கொலைகளை நடத்திடவோ, குழந்தைகள் முதற்கொண்டு கண்டதையெல்லாம் வெட்டிப் போடவோ அலாவுத்தீன் கில்ஜி அனுமதிக்கவில்லை. இதன்மூலம் இந்து மக்களையும் அவர்களின் கலாச்சாரத்தையும் காப்பாற்றி விட்டார் அலாவுத்தீன் கில்ஜி.
- சிலர் மங்கோலியர்கள் வெற்றி பெற்றிருந்தால் இந்துக்களை மட்டுந்தானா அழிந்திருப் பார்கள். முஸ்லிம்களையும் தானே அழித்திருப் பார்கள் என்றொரு எதிர் வாதத்தை வைக் கின்றார்கள்.
- இப்படி முரட்டுக்கேள்விகளை கேட்பவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றார்கள். அது முஸ்லிம்களும் அழிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் உலக வரைபடத்திலிருந்து அகற்றப்பட்டிருக்க மாட்டார்கள். காரணம், அந்நிலையில் அதாவது (கி.பி.1250-1300 களில் இஸ்லாம் உலகின் பல பகுதிகளில் பரவி நிலைத்திருந்தது. ஆகவே மங்கோலியர்கள் இஸ்லாத்தையும் - முஸ்லிம்களையும் உலக வரைபடத்திலிருந்து துடைத்தெறிந்திட முடியாது.
- ஆனால் 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்துக்கள் பெரும்பாலும் இந்தியாவுக்குள் ளேயே வாழ்ந்து வந்தார்கள். ஆகவே மங்கோலியர்கள் ஓர் இனப்படு கொலைக்கு உள்ளாக்கி இருந்தால் இந்துக்கள் பெருவாரியாகக் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். ஒரு வேளை அவர்கள் முற்றாகத் தடந்தெறியாமல் துடைக்கப்பட்டும் போயிருக்கலாம். இது இந்து மதத்திற்கு மிகப்பெரிய அழிவாக இருந்திருக்கும்.
- மோனிஸ் போராவின் சொற்களை அதை இங்கே அப்படியே தருகின்றோம்.

  But the Hindus by the late, 13th and early 14th century remained largely confined to the Indian sub Continent, So a mass slaughter of Hindus in India would have been disastrous for the Hindu Religion and might very well have led to its extinction

ஆதாரம் : Alauddin Khilji the Saviour of Hindurism : By Monish Borah

## பாகம் - 2

# மங்கோலியர்களும் இஸ்லாமிய உலகமும்

அன்பார்ந்த வாசகர்களே!

அலாவுத்தீன் கில்ஜி அவர்களின் வரலாற்றில் மங்கோலியர்கள் மிகப்பெரிய எதிரிகள். 13ஆம் நூற்றாண்டில் மங்கோலியர்களை விஞ்சிய ஓர் வல்லரசு அவனியில் இருக்கவில்லை.

அப்போது இஸ்லாமிய சாமராஜ்யம் ஒன்று உலகில் அழுத்தமாக அரசோச்சிக் கொண்டிருந்தது. அதனையும் மங்கோலியர்கள் தாக்கினார்கள், தகர்த்தார்கள், இந்த வரலாற்றையும்

இன்றைய வரலாற்றியாசிரியர் குறிப்பிடவே செய்கின்றார்கள். குறிப்பாக அலாவுத்தீன் கில்ஜி அவர்களின் வீர வரலாற்றையும், அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிடவே செய்கின்றார்கள்.

மங்கோலியர்கள் முஸ்லிம் உலக அழித்துக் கொண்டிருந்தபோது ஒரு மாவீரன் எகிப்த்தின் சுல்தான் செய்ஃபுதீன், மங்கோலியர்களை முதன் முதலாக வெற்றிக்கொண்டனர் அந்த வரலாற்றையும் இங்கே தருகின்றோம்.

உற்பத்தி செய்த பொருளை அறிமுகப்படுத்திட விரும்பியவர்கள் இவர்களெல்லாம் பாக்தாத் நோக்கிப் பயணம் செய்தார்கள். உலகில் மிகவும் தரம் வாய்ந்த இலக்கியங்களின் உற்பத்தி நிலையமாக பாக்தாத் இருந்தது.

கலீஃபாக்கள் வரிசையில் அப்பாஸிய கலீஃபாக்கள் உலக முஸ்லிம்களின் தலைமையை ஏற்று நடத்திக் கொண்டிருந்தபோது அவர்களின் தலைமையகமாக பாக்தாத் இருந்தது.



மங்கோலியர்கள் முஸ்லிம்களைக் குறிவைத்துத் தாக்கினார்கள் ; அராஜகங்களைக் கட்டவிழ்த்து விட்டார்கள். முஸ்லிம்களின் மண்டை யோடுகளால் பிரமிட்களை எழுப்பினார்கள் என்றும், முஸ்லிம்களின் பிண மலையின் மேல் நின்றுகொண்டு தங்கள் வீரத்தைப் பறை சாற்றினார்கள் என்றும் வரலாறு பேசும்.

இவர்கள் கி.பி. *1258* ஆம் வருடங்களில் வாழ்ந்தவர்கள். அதாவது இன்றிலிருந்து ஏறத்தாழ *750* வருடங்களுக்கு முன்னால் வாழ்ந்தவர்கள்.

இந்தக் காலக்கட்டத்தில் பாக்தாத் பெரும் நகரம். உலகிலேயே மிகவும் முக்கியமான ஒரு நகரம், மட்டுமல்ல மிகவும் பிரபல்யமான நகரம்.

உண்மையைச் சொன்னால் உலகில் அறிவைத் தேடியவர்கள் அப்போது பாக்தாத் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

வியாபாரத்தில் உயர்ந்து நிற்க விரும்பிய வர்கள், உலக மக்களுக்கெல்லாம் தாங்கள்

கலீஃபா ஹாரூன் ரஷீத் (ரஹ்) அவர்களின் காலத்தில் எல்லா அரசியல் நடவடிக்கை களுக்கும் தலை நகரமாக இருந்தது. பாக்தாத் விஞ்ஞான வளர்ச்சியின் மையமாக இருந்தது.

கலீஃபா ஹாரூன் ரஷீத் அவர்களின் காலக்கட்டதைப் பற்றி நமது முதல் பிரதமர் ஜவஹர் லால் நேரு அவர்கள் தன் மகள் இந்திரா காந்திக்கு எழுதியிருந்த கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

"கலீஃபா ஹாரூன் ரஷீத் அவர்கள் காலத்தில் கிழக்கே சீன பேரரசரிடமிருந்தும் மேற்கே சார்லமேன் சக்கரவர்த்தியிடமிருந்தும் வந்த தூது கோஷ்டிகள் அவருடைய சபையில் வந்திருந்தன. பாக்தாதும் அதேபோல் அப்பாஸிய கலீஃபாக்களின் ஆளுகையின் கீழிருந்த இதர இடங்களும் அப்போதைய ஐரோப்பாவைவிட மிகவும் முன்னேறி இருந்தன.

ஆட்சி நடத்திடும் கலை, வாணிபம், கல்வியில் முன்னேற்றம் இவற்றில் பாக்தாதும்



அப்பாஸிய கலீஃபாக்களின் ஆட்சியின் கீழிருந்த இதர இடங்களும் முன்னணியில் நின்றன.

அப்பாஸிய கலீஃபாக்களின் காலத்தில் நமக்கு மிகவும் உற்சாகம் தரும் செய்தி என்னவெனில் விஞ்ஞான வளர்ச்சியில் அவர்கள் காட்டிய ஆர்வம் இன்றைய உலகில் விஞ் ஞானம் என்பது மிகப்பெரியதொரு விஷயம் என்பனை நீ அறிவாய். நாம் அதற்கு மிகவும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம். விஞ்ஞானம் "சும்மா" இருந்துகொண்டு எல்லாம் ஷேமமாக நடக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதில்லை. எல்லாவற்றையும் நடத்திக் காட்டுவது மாறாக ஒவ்வொரு விஷயமும் ஏன் நடக்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க முனைவது.

அன்றைய உலகில் எகிப்திலாகட்டும், சீனாவிலாகட்டும், இந்தியாவிலாகட்டும் நாம் இந்த விஞ்ஞான முறையைக் காணவில்லை. பண்டைய கிரீஸில் இதைச் சிறிது காண்கின்றோம். ரோமாபுரியில் இது பூஜ்யமாயிருக்கின்றது. ஆனால் அரேபியருக்கு இந்த விஞ்ஞான ஆராய்ச்சி உணர்வு இருந்தது" ஆகவே அவர்களை தற்கால விஞ்ஞானத்தின் தந்தையர் எனக் கூறலாம்.

பாக்தாத் நகரும், ஹாரூன் அல் ரஷீதும் என்ற அத்தியாயம் (50) நேரு தன் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் ; (Glimpses of World History. Page 151, Oxford University Press, *12 ஆம் பதிப்பு 1997)*

பெருமை மிகு இந்தப் பாக்தாத்தில்தான் உலக பிரசித்திப் பெற்ற ஆசாத் மருத்துவமனை இருந்தது. மருத்துவ முறையை அதில் சிகிச்சை முறையை உலகில் முஸ்லிம்கள் முறைப்படுத்திக் கொண்டிருந்த காலம். அது இந்த ஆசாத் மருத்துவ மனை அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைந்தது. முறையான குளியலறையை அமைத்து வழி காட்டிய பெருமை இந்த ஆசாத் மருத்துவ மனைக்குச் சாரும். இந்தக் குளியறைக் குத்தான் "ஹமாம்" என்று பெயர் "ஹமாம்" என்ற சொல்லுக்கு அனைத்து வசதிகளையும் கொண்ட அரபுக்களின் குளியறை என்ற பொருள். இப்படித்தான் இன்றைக்கிருக்கும் அகராதிகள் கூட விளக்கம் சொல்கின்றன.

இப்படி அனைத்திற்கும் முன்னோடியாக நின்ற பாக்தாத் மக்கள் (முஸ்லிம்கள்) வந்த வளத்தால் வாழ்ந்தது போதாதென்று ஊழலிலும் ஊதாரித்தனத்திலும் அடியெடுத்து வைத்தனர். அரண்மனை காவலர்களிலிருந்து அனைத்துத் தரப்பாரும் அடித்த கொள்ளைக்கு அளவில்லை

ஒரு சாதாரண அரண்மனைக் காவலன் எப்படி ஓர் உல்லாசபுரியை அமைத்து வாழ்ந்தான் என்பதை அறிஞர் அலீமியான் அவர்கள்

இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

இஸ்லாத்தின் நகரம் எனக் கருதப்பட்ட பாக்தாத் கலீஃபாக்களின் இருப்பிடம் ஈரானியர்கள், பைசாந்தியர்கள் இவர்களிடமிருந்து ஊதாரித்தனத்தையும் விஞ்சி நிற்கிறது. சமையல் செய்த உணவை பரிமாறிவிடும் சாதாரண வேலையைச் செய்தவர்கள் கூட செல்வச் செழிப்பில் களித்துக் கிடந்தார்கள். தரை துடைப்பவர்கள் அரண்மனைக்குள் அடிமையாக நுழைந்தவர்கள்தாம். ஆனால், அவர்கள் உப்பரிகைகளைக் கடடி ஒய்யாரமாக வாழ்ந்தார்கள். அலாவுத்தீன் தப்ரேசி அல் ஜஹாரி என்ற அடிமையை ஆயிரம் தினார் கொடுத்து வாங்கினார் கலீஃபா ஜாஹிர் அவர்கள்.

ஆனால் இவர் அரசு பணியில் ஊழல் செய்து ஆண்டுதோறும் சேர்த்த சொத்தின் மதிப்பு மூவாயிரம் திர்ஹம் பாக்தாதில் இவர் கட்டிய வீடு ஊரார் வாய்பிளந்து வியந்து நின்று பார்க்கும் அளவுக்கு மிகவும் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. முஜாஹித்தீன் அய்பக் அல்சலா அப்துல் கனி என்ற பெயர்களைக் கொண்ட அரண்மனையின் பணியாட்கள் தாங்கள் வாழ்ந்த தரணி நடுங்கும் ஆடம்பர வாழ்வால் வரலாற்றில் தங்கள் பெயர்களைப் பதித்துக் கொண்டார்கள்.

இப்படி ஆடம்பரத்தின் ஊதாரித்தனத்தில் ஊறிக்கிடந்த இவர்கள் எந்தக் கல்வி அறிவும் இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் பாக்தாதிலிருந்த மிகப்பெரிய கல்வி நிறுவனமான மதரஸத்துல் முஸ்தான், சாரியாவின் ஆசிரியர்களுக்கு பிச்சைக் காசுகள் தாம் சம்பளமாகத் தரப்பட்டன. கலீஃபாவின் அரண்மனையை சுத்தம் செய்பவன் ஐந்தாயிரம் தீனார்களை சம்பளமாகப் பெற்றுக் கொண்டிருக்கும்போது இவர்கள் யாசகர்களைப்போல் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

(மன்னர்) கலீஃபா முடிசூடிய நாள் பிறந்த நாள் இவையெல்லாம் தங்கள் ஊதாரித்தனத்தையும் உல்லாச வாழ்வையும் ஊருக்கெல்லாம் அறிவிக்கக் கிடைத்த பொன்னான வாய்ப்புகளாகக் கருதினார்கள். ஆட்சியிலிருந்தோரும் அடிமட்டத்து மக்களும் பொன்னை தண்ணீராய் தாரை வார்த்து களித்துக் கிடந்தார்கள். இப்படி உல்லாசத்தில் மதி மயங்கி நின்ற கலீஃபாவுக்கு, கஅபாவுக்கான மேலாடையை அனுப்பக்கூட நினைப்பும் நேரமுமில்லை. காஃபாவே 21 நாட்கள் திரையின்றி கிடந்தது.

இப்படி முஸ்லிம்கள் தங்களை மறந்து, அல்லாஹ்வின் அழகிய வழி காட்டுதல்களை மறந்து கழித்துக் கொண்டிருந்தபோதுதான், கிழக்கே மங்கோலியர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தைக் கட்டி எழுப்பிக் கொண்டிருந்தார்கள். மங்கோலியர்களை செங்கிஸ்கான் என்ற மாவீரன் வழி நடத்தி வந்தான். இவர்களுக்குத் தார்தாரிகள் என்றொரு பெயரும் உண்டு.

இந்த மங்கோலியாவிலிருந்து ஒரு வியாபாரக் கூட்டம், மங்கோலியாவை அடுத்திருந்த "ஹவாரிஜம்" என்ற இடத்திற்கு வந்தது. இந்த மங்கோலிய வியாபாரக் கூட்டத்தை உளவு பார்க்க வந்தவர்கள் எனக் கருதிக் கொண்டார். கவாரிஜிம் என்ற பகுதியை ஆண்ட 'ஹவாரிஜிம் ஷா' என்ற முஹம்மத் ஷா.

மங்கோலியர்கள் அப்போதுதான் தங்கள் சாம்ராஜ்யத்தை மெல்ல மெல்ல விரிவாக்கிக் கொண்டிருந்தார்கள். இதனால்தான் வியாபாரிகள் கோலத்தில் வந்தவர்கள் உளவு பார்க்க வந்தவர்கள்தாம் எனக் கருதிக் கொண்ட 'ஹவாரிஜிம் ஷா' அவர்களைப் பிடித்து கொலை செய்து விட்டார்.

ஏன் எங்கள் வியாபாரிகளைப் பிடித்துக் கொலை செய்தீர்கள் என விசாரித்துவர இன்னொரு குழுவை அனுப்பினார்கள் மங்கோலியர்கள். அந்தக் குழுவுக்கும் மரண தண்டனை வழங்கிவிட்டார் ஹவாரிஜிம் ஷா.

இங்கே பிரிதோர் உண்மையையும் நாம் கவனிக்க வேண்டும். வரலாற்றில் யாரும், ஹவாரிஜிம் ஷா ஒரு கொடுங்கோலன் எனச் சொல்லவில்லை. அவர் மிகவும் நல்லவர், பய பக்திமிக்கவர், சிறந்த போர் வீரர். அவர்களிடம் குறையாகக் காணப்பட்டது அவர் அக்கம் பக்கத்து முஸ்லிம் ஆட்சியாளர்களையும் படையெடுத்துச் சென்று வென்றார். தனக்கென ஒரு பெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்திருந்தார்.

விளக்கம் கேட்கப்போனவர்களும் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தியால் ஆத்திரமடைந்தார்கள் மங்கோலியர்கள். முஸ்லிம்களைத் தாக்கிட

புயலெனப் புறப்பட்டார்கள். புறப்படும்போது செங்கிஸ்கான் இப்படிக் கூறினாராம்.

"ஒரு வானத்தில் இரண்டு சூரியன் இருக்க முடியாது. பூமியில் இரண்டு கான்கள் இருக்க முடியாது"

முதலில் மங்கோலியாவுக்கு பக்கத்து முஸ்லிம் பகுதியான "புக்காரா" என்ற பகுதி அவர்களின் கைகளில் சிக்கியது. அங்கே வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்கள் அனைவரையும் கொன்றார்கள்.

பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள் என்று யாரையும் விட்டு வைக்காமல் வாளுக்கு இரையாக்கினார்கள். "சமர்கண்ட்" என்ற பகுதிக்கு அவர்களின் பாய்ச்சலில் பஸ்பமானது. அத்தனை குடிமக்களும் கொலை செய்யப் பட்டார்கள்.

"ராஹா" என்ற தெஹ்ரான் (ஈரான்) பக்கத்து பூமி "ஹமதான்" (இது அன்றைய பாரசீகத்தின் எல்மண்ட் மலைக்குப் பக்கத்தல் உள்ளது) ஸன்ஜான்(வடகசு பாரசீகம்) ஆகிய பகுதிகளிலும் புகுந்தார்கள் அனைவரையும் கொன்றார்கள்.

ஹவாரிஜிம் முஹம்மத் ஷா அன்றைய வானில் ஒரு சூரியன் என செங்கிஸ்கானால் வர்ணிக்கப்பட்ட அவர் தன் ஆட்சியின் கீழிருந்த நிலப்பகுதிகளை விட்டுவிட்டு ஓடினார்.

காஸ்பியன் கடல் என்ற கடலைக் கடந்து ஓரிடத்தில் தனிமைப்பட்டு நெஞ்சம் உடைந்து மெத்தக் கவலையோடு மரண மடைந்தார். ஹவாரிஜிம் ஷாவை பழிவாங்கியதோடு அவர்கள் தங்கள் குரூரங்களுக்கு ஒரு முடிவுகட்டி இருக்கலாம். ஆனால் அவர்கள் தங்கள் கொலை வெறித்தாக்குதல்களைத் தொடர்ந்தார்கள்.

அத்தோடு நில்லாமல் குக்கிராமங்களிலும் புகுந்து ஏதுமறியாத மக்களையும் கொன்று குவித்தார்கள். அவர்களுடைய அநியாயமும் அட்டூழியமும் அனைத்து எல்லைகளுக்கும் பரவிற்று. அக்கம் பக்கத்து நிலப்பரப்புகளிலும் பாய்ந்தார்கள்.

நாடுகளைப் பிடிப்பவர்கள் அதனை ஆட்சி செய்வார்கள். அமைதியாக வாழ விரும்பும் மக்களுக்கு அனுமதி தருவார்கள். முடிந்தால் பாதுகாப்பு வழங்குவார்கள், பரிபாலிப்பார்கள்.

ஆனால் மங்கோலியர்களோ வென்றவர் களைக் கொன்று அவர்களின் இரத்தத்தில் கால் நனைய நடந்து சென்றார்கள். ஈரவிக்கமற்ற இவர்களின் வாள்கள் அனைத்துத் தரப்பு மக்களின் கழுத்துக்களையும் பதம் பார்த்தன.

இவர்கள் தாக்கிய வேகமும் குரூரமும் அவற்றைப் பார்த்தவர்களை மட்டுமல்ல, கேட்பவர்களையும் இன்னும் அவற்றைப்



படிப்பவர்களையும் பதறச் செய்திடும்.

மங்கோலியர்கள் என்ற சொற்களைச் சொன்னவுடனேயே செவிமடுத்தோர் மதி மயங்கினர். அந்த அளவுக்குக் குரூரம் நிறைந் தவனாய் இருந்தன அவர்களது கொலையும் வெறியும்.

அலறித்துடித்தார்கள் முஸ்லிம்கள் மங்கோலி யர்களின் பெயரைக் கேட்டவுடனேயே!

எந்த அளவுக்கு முஸ்லிம்கள் அரண்டு போயிருந்தார்கள் என்பதை அறிவுறுத்த ஒரு சிறு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடுகின்றோம்.

மங்கோலியன் ஒருவன் முஸ்லிம் வீட்டுக்குள் புகுந்தான். உள்ளே இருந்தவர்களைக் கொன் றான். அந்த வீட்டை முழுமையாகக் கொள்ளை யடித்தான். கொள்ளையடித்தவற்றை மூட்டைக் கட்டினான். ஒரு முஸ்லிமை கைதியாகவும் அழைத்துச் சென்றான். இப்படி வெட்டுண்டு இறந்த முஸ்லிம்களில் யாரும் அந்த மங்கோலியனை எதிர்க்க முன் வரவில்லை.

இத்தனையும் நடந்து முடிந்த பின்னர்தான் கைதான முஸ்லிமிற்கு ஒரு உண்மை தெரிய வந்தது. அது, அங்கே வந்து அத்தனை அடா வடித்தனங்களை செய்துவிட்டுத் திரும்பியது மங்கோலிய ஆண் அல்ல. ஆண்வேடம் பூண்ட மங்கோலியப் பெண் என்பதே!

(ஆதாரம் Saviours of Isllamic Sprint, by Abul Hasan Nadwi pp 288/289)

இப்படி முஸ்லிம்கள் மங்கோலியதார் தாரிகள் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே குலை நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

தாங்கள் மேற்கொண்ட தாக்குதலின் வேகம் குரூரம் இவற்றால் மங்கோலியர்கள் வெல்ல முடியாதவர்கள் என்ற பெயரைப் பெற்றார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இஸ்லாமிய சிந்தனையாளர் அலீ மியான் (அபுல்ஹஸன் அலீ) அவர்கள் இந்த மங்கோலிய தார்தாரிகளைப் பற்றி எழுதும்பொழுது "அந்த அநியாயத்திற்கு தார்தாரிகள் தந்த தெய்வ தண்டனை என்றே தலைப்பிட்டிருக்கின்றார்கள்" செங்கிஸ் கான் தன்னை இப்படித் தன் வாயால் அறிமுகப்படுத்திக் கொள்வானாம்.

இந்த மங்கோலியர்களைப் பற்றி எழுதிடும் போது நமது முதல் பிரதமர் பண்டித ஜவஹர் லால் நேரு அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

"செங்கிஸ்கான், மங்கோலியன் பூமியை அதிரச் செய்தவன்"

"Chengiz Khan, the Mongol Shaker of the Earth" என்று குறிப்பிடுகின்றார்.

பிந்தைய இலக்கிய உலகில் செங்கிஸ் கலாச்சாரம் என்ற சொல் செயலில் வந்தது. அதன் பொருள் கொலை, கொடூரம், வெறித்தனம் என்றானது. (History of Islam by Prof Masudal Hasan, Vol 11)

இப்படி மங்கோலிய தார்தாரிகள் கொடுமை களை அமெரிக்க அளவில் அன்றைய முஸ்லிம்கள் மேல் அன்று கட்டவிழ்த்துவிட்டார்கள்.

சில வரலாற்றாசிரியர்கள் மங்கோலியர் களைப் பற்றி எழுதும்போது

"The Invincibility of Mongol, Tartars"

"மங்கோலிய தார்தாரிகளின் வெல்ல முடியாமை" என்றே எழுதுகின்றார்கள்.

### பாகம்-3

## முஸ்லிம் உலகின் மேல் மங்கோலியர்களின் இரண்டாம் கட்டப்போர்

மங்கோலியர்கள் ஒவ்வொரு இடமாக வென்று இப்போது தங்கள் பார்வையை பாக்தாதின் மீது பாய்ச்சினார்கள்.

மங்கோலியர்களை யாரேனும் வென்று விட்டார்கள் என்று எவரேனும் சொன்னால் அதை நம்ப வேண்டாம் என்று பொருள்படும் அரபி பழமொழி ஒன்றும் புழக்கத்தில் வந்ததாம். இந்த அளவுக்கு மங்கோலியர்கள் வெல்ல முடியாதவர்கள் என்ற பட்டத்திற்கும் பாராட்டிற்கும் உரியவர்களாக இருந்தார்கள்.

புக்காரி, ஹவாரிஜிம், சமர்கண்ட், சாஹி, ஹமதான், ஸன்ஜான், கஸ்வின் (பாரசீகத்திலுள்ள ஒரு பட்டணம்), மார்ப் (பாரசீகத்தில் "முர்காப்" என்ற நதிக்கரையிலுள்ள ஒரு பட்டணம்), நிஷாப்பூர் (குராஷான் என்ற ஆஃப்கானிஸ் தானிலுள்ள மிகவும் முக்கியமான பட்டணம்)

இப்படி ஒவ்வொரு இடமாக வெற்றி கொண்டு வந்தார்கள் மங்கோலியர்கள் (என்ற தார்தாரிகள்) உண்மையைச் சொன்னால் ஒவ்வொரு இடமாக தங்கள் வெறியை வெளிப் படுத்தி, முஸ்லிம்களை ஈவிரக்கமின்றி கொன்று வந்தார்கள்.

இப்போது அவர்களின் பார்வை பாக்தாத் தின்மேல் பாய்ந்தது. பாக்தாத் மீது இவர்களின் பார்வை வீழ்ந்தபோது பாக்தாத் செல்வச் செழிப்பில் திளைத்துக் கிடந்தது. அல்லாஹ்வை மறந்த ஆட்டங்களும் விரயங்களும் அவர்களை ஆட்கொண்டிருந்தன.

பாக்தாதின் பாதுகாப்புகளை பற்றியாரும் கவலைப்படவில்லை. பாவம் அவர்களுக்கு மகிழ்ந்திருக்கவே நேரம்போதவில்லை. இந்நிலையில் அவர்களுக்குப் போர் செய்யும் மனம் எள்ளளவுமில்லை. அந்த வசதியிலேயே திழைத்திருக்க விரும்பினார்கள்.

பிறந்த நாள், பெருநாள் என்று தங்கள் ஆடம் பரத்தை கடை விரிக்க தருணம் பார்த்துக் கிடந்தார்கள். பெருநாள்களில் ஊர்வலங்கள், அந்த ஊர்வலங்களில் வரும் களிப்பாட்டங் களெல்லாம் முடிந்திட மாலை நேரம் ஆகிவிடு மாம். அந்தி சாய்ந்த பின் பெருநாள் தொழுகையை தொழுவார்களாம்.




'கலீஃபா' பதவி ஏற்ற நாள், அவர்களுக்கு குழந்தை பிறந்த நாள் என்று நாட்களை காத்திருந்து கணித்து கழித்துக்கிடந்தார்கள்.

அக்கம் பக்கத்து நாடுகளை - அல்லது முஸ்லிம்களின் ஆட்சியின் கீழிருந்த நிலப்பரப்பு களை மங்கோலிய முரட்டுப்படை கால்களில் போட்டு மிதித்து கொண்டு வருவதையோ - அவர்களால் வரவிருக்கும் ஆபத்துகளையோ இவர்களால் கணித்திட இயலவில்லை. இதனால் பாக்தாதிலிருந்த ஆட்சியாளர்கள் பாக்தாதின் பாதுகாப்புகளைக் கண்டுகொள்ளவே இல்லை.

மங்கோலியப்படைகள் பாக்தாதினுள் எந்தச் சிரமுமின்றி புகுந்தன. மங்கோலியதார்தாரிகள் அதாவது வெல்ல முடியாதவர்கள் எனப் போற்றப் படுவோர் பாக்தாதை நோக்கிப் பாய்கின்றார்கள் என்ற செய்தியை கேட்டே அலறி துடித்தார்கள் பாக்தாத் முஸ்லிம்கள்.

சேர்த்து வைத்திருக்கும், இல்லை குவித்து வைத்திருக்கும் செல்வங்களை அனுபவிக்க அவகாசமில்லாமல் போய்விடுமோ என ஆதங்கப்பட்டார்கள், ஆத்திரப்பட்டார்கள்.

பாக்தாதிற்குள் மங்கோலியதார்தாரிகள் புகுந்துவிட்டார்கள் என்ற செய்தி கேள்விப் பட்டதும், பாக்தாதில் வாழ்ந்த மக்கள் விசித்திர மானதோர் வழிமுறையை கையாண்டார்கள். தங்கள் கைகளிலிருந்த முத்துக்களையும் பவளங் களையும் விழுங்கிவிட்டார்கள்.

தார்தாரிகள் உள்ளே புகுந்கு ஈரவிக்கமின்றி கொலைகளை செய்தார்கள். அவர்களுக்கு பாக்தாத் மக்கள் தாங்கள் வைத்திருந்த விலை யுயர்ந்த பொருள்களை விழுங்கிவிட்டார் என்ற செய்தி தெரிந்தது.

இதனால் முஸ்லிம்களை கொலை செய்யும் போது முஸ்லிம்களின் வயிற்றின் மீதுதான் முதல் தாக்குதலை நடத்தினார்கள். வயிற்று கிழிந்தபோது அதில் இருந்த முத்துக்களும், பவளங்களும் வெளியே வந்தனவாம்.

பாக்தாதில் அப்போது 20 இலட்சம் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்களில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட யாரையும் விட்டு வைக்காமல் அத்தனை பேரையும் கொன்று குவித்தார்கள் தார்தாரிகள்.

தார்தாரிகள் இப்படிக் கெலைகளைச் செய்தாலும் "கலீஃபாவை" நெருங்க அஞ்சினார்கள். காரணம் அவர்களிடையே ஒரு நம்பிக்கை நடப்பிலிருந்தது.

அந்த நம்பிக்கை...

"கலீஃபா"வின் இரத்தம் ஓட்டப் பெற்றால் ஓட்டுபவர்கள் மீது (அதாவது மங்கோலிய தார்தாரிகள் மீது) இறைவனின் சாபம் இறங்கும்.

இந்த நம்பிக்கையால் அவர்கள் கலீஃபாவின் இரத்தத்தை ஓட்ட அஞ்சினார்கள். அதே நேரத்தில் கலீஃபாவை உயிரோடு விடவும் அவர்களுக்கு விருப்பமில்லை.

பலநாள்கள் ஆலோசனை செய்தார்கள் பிறகு கலீஃபாவின் இரத்தத்தை ஓட்டாமல் தீர்த்துவிடுவது என முடிவு செய்தார்கள். அதற்கோர் புதிய உத்தியைக் கையாண்டார்கள்.

அந்த யுக்தி,

கலீஃபா வாழ்ந்த பங்களாவிலிருந்து விளையுயர்ந்த தரை விரிப்பைக் கொண்டு கலீஃபாவைப் போர்த்திடுவது என்பது! பின்னர் அந்த தரை விரிப்பின் மேல் அழுத்தம் கொடுத்து கொன்று விடுவது என முடிவு செய்தார்கள்.

இதற்கிடையில் கைதியாக இருந்த கலீஃபாவுக்கு உணவுப்பொருட்களை அனுப்பி வைத்தார்க்ள. அங்கே உணவு பொருள்களாக அணிவகுத்தவற்றில் உண்ணும் தகுதியில் எதுவுமில்லை.

முஸ்லிம்கள் எந்தப் பொருட்களை தங்களுடைய பாதுகாப்பைவிட பெரியதாகக் கருதினார்களோ அந்தப் பொருட்களையே அதாவது முததுப்பவளம், வைரம், வைடூரியம், மாணிக் கப்பரல்கள் இவற்றையே ஒரு பொற்தட்டில் வைத்து கலீஃபாவுக்கு அனுப்பினார்கள்.

கலீஃபா கேட்டார்,

"என்ன? பசித்து நிற்கும் கைதிக்கு இப்படியொரு தட்டை அனுப்பி இருக்கின்றீர்களே" என்று இதற்கு இப்படிப் பதில் சொன்னார் மங்கோலிய தளபதி ஹூலுக்,

"ஆமாம் நீங்கள் உங்கள் பாதுகாப்பைவிட இவைதானே முக்கியம் எனக் கருதினீர்கள். அவற்றையே உண்ணுங்கள். உங்கள் பாதுகாப்பைவிட பளபளக்கும் இவைதானே உங்களுக்கு முக்கியம் ஏன் அவற்றை நான் தந்தால் முகஞ் சுளிக்கிறீர்கள்"

இப்படி உலகைக் கட்டி பிடித்து வாழ்ந்ததை அவர்களுக்கு சுட்டிக் காட்டிவிட்டு திட்டமிட்டபடியே அரண்மனை கார்பெட்டில் அழகாய் சுருட்டி கலீஃபாவின் உயிரைப் போக்கினார்கள் மங்கோலியதார் தாரிகள்.

**எகிப்து**

அடுத்து மங்கோலியதார்தாரிகளின் பார்வையில் எகிப்து வீழ்ந்தது.

அப்பாசிய கலீஃபாக்களின் இருப்பிடமான பாக்தாதை பந்தாடியபின் "கெய்ரோ" வைப் பற்றி சிந்திக்கத் தலைப்பட்டார்கள் தார்தாரிகள்.

அதற்குள் சிரியா, ஜோர்டான் போன்ற பகுதிகளும் அவர்களின் கண்சிமிட்டலுக்கு ஆளாகின.

மங்கோலிய தார்தாரிகள் அடுத்துத் தங்கள் தாக்குதலை எங்கே நடத்தலாம் என்பதை குறித்து ஆலோசித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சுருங்கச் சொன்னால், இப்போது அமெரிக்காவைப்போல் அப்போது மங்கோலிய தார்தாரிகள் முஸ்லிம் உலகை அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

2003 ஆம் ஆண்டு அமெரிக்கப்படைகள் ஈராக்-ஐ தாக்கியபோது அமெரிக்கப் படைகள் குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள், பல்கலைக் கழகங்கள், பள்ளிக் கூடங்கள், நூல் நிலையங்கள், மருத்துவமனைகள், மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக அழித்து வருகின்றன.

இதேபோல்தான் அன்று மங்கோலியர்கள் முஸ்லிம்கள், முஸ்லிம்கள் நிர்மாணித்து வைத்திருந்த கல்விக் கூடங்கள், அருங்காட்சி நிலையங்கள், விலைமதிப்பற்ற நூல் நிலையங்கள், இஸ்லாமிய கலைகளைப் பறைசாற்றும் கட்டடங்கள் அனைத்தையும் தரை மட்டமாக்கினார்கள்.

2003-இல் அமெரிக்கா கோடிக்கணக்கான "டன்" எடையுள்ள குண்டுகளைப் போட்டு அத்தனையையும் அழித்தது.

மங்கோலிய தார்தாரிகள் முஸ்லிம்களை வாள், ஈட்டி போன்றவற்றைக் கொண்டு கொலை செய்தார்கள், சொத்துக்களையும் நிறுவனங்களையும் நெருப்பிட்டுக் கொளுத்தினார்கள்.

2003-இல் எப்படி எந்தக் காரணமுமில்லாமல் அடுத்து சிரியா, அடுத்து ஈரான் என்று அமெரிக்கா பட்டியல் தயாரித்ததோ அதே போல் தான் மங்கோலியர்களும் புக்காராவிலிருந்து தொடங்கி பாக்தாத், டமாஸ்கஸ் (சிரியாவின் தலைநகர்) கெய்ரோ (எகிப்தின் தலைநகர்) என்று தன் பட்டியலை நீட்டிக் கொண்டே சென்றார்கள்.

இன்றைய அமெரிக்காவின் அட்டூழியங் களையும், அது கட்டவிழ்த்துவிடும் தீவிரவாதங் களையும் தடுக்க முடியாது என்றும் அமெரிக்கா வெல்லவே முடியாத சக்தி என்றும் உலக முஸ்லிம்கள் நினைக்கின்றனர்.

இதேபோல்தான் அன்று மங்கோலியதார் தாரிகளை வெல்லவே முடியாது என்று அன்றைய முஸ்லிம்கள் நினைத்தார்கள். முஸ்லிம் நிலபரப்பு களை ஆட்சி செய்து கொண்டிருந்த முஸ்லிம் ஆட்சியாளர்கள் நினைத்தார்கள், நிலை குலைந் தார்கள்.

இன்று உலக மக்கள் அனைவரும் அமெரிக் காவுக்கு எதிராக தங்கள் அதிருப்தியை தெரிவிக் கின்றார்கள் (ஃபாசிச சிந்தனை கொண்ட ஒரு சிறு கூட்டம் இதற்கு விதிவிலக்கு) அதனால் விளைந்த பலன் ஒன்றுமில்லை. அமெரிக்கா தான் தாக்கிட நினைத்தவற்றையெல்லாம் தாக்கிக் கொண்டே இருக்கின்றது.

அன்று உலக மக்கள் கருத்தை ஒன்றாய் மங்கோலிய தார்தாரிகளுக்கெதிராகத் திருப்பிட எதுவுமில்லை. இன்றைக்கிருப்பதைப்போல் அன்றைக்கு ஊடகங்களில்லை அப்படி இருந்தால் கூட அதனால் விளையும் பயன் எதுவுமில்லை.

இன்றைக்கிருப்பதைப்போல் அன்றைக்கோர் ஐ.நா. என்ற உலக அமைதி காக்கும் அவை ஒன்று இல்லைதான். ஆனால் ஐ.நா.வால் விளையும் பலன்தான் என்ன? ஐ.நா. அமெரிக்கா வின் கைப்பாவையாக அமர்ந்து முஸ்லிம்களை அநியாயத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றது.

அன்று அநியாயங்களை எதிர்க்கும் ஒரே அணியாக முஸ்லிம்கள் மட்டுந்தான் இருந்தார் கள். ஆனால் அவர்களோ அந்தக் கடமையை மறந்து தார்தாரிகளின் கைகளில் அழிவைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

மங்கோலியர்கள் எந்தப் பக்கம் அடுத்துத் தொடரலாம் தாக்குதலை என எண்ணி முடித்து, அலிப்போவைத் தாக்கினார்கள். அடுத்து டமாஸ்கஸ் நோக்கிப் பாய்ந்தார்கள். அங்கே முஸ்லிம்களை கொலை செய்தார்கள், டமாஸ்கில் வாழ்ந்த கிருத்தவர்கள் அவர்களை வரவேற் றார்கள்.

இப்போது அறிவுள்ள எவரும் தானே அறிவார்கள் மங்கோலிய தார்தாரிகளின் அடுத்த தாக்குதல் எகிப்தை நோக்கித்தான் இருக்கும் என்பதை. இந்நிலையில் மங்கோலிய தார்தாரிகள் ஈவிரக்கமற்ற மனித பிண்டங் களாகவே மாறி காட்டேரிகளாய் காட்சித் தந்தார்கள்.

அவர்களின் அப்போதைய மூர்க்கத் தனத்தை வரலாறு இப்படி பதிவு செய்கின்றது.

"எவரைப் பற்றிய அச்சமூகம் அவர்களுக் கில்லை. எந்த ஆற்றலும் அவர்களைத் தடுக்கவோ, தாக்கவோ முடியாது"

"இரக்கம் காட்டுங்கள் என யார் எடுத்து வைக்கும் பிரார்த்தனையும், அவர்கள் நெஞ்சை இளகச் செய்திடாது"

சுல்தான் மாலிகுல் முஸாஃபர் செய்ஃபுதீன் (ரஹ்) அவர்கள் தாம் அப்போது எகிப்தை ஆட்சி செய்து வந்தார்கள். தினமும் அவர்கள் தவறாது திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள்.

அந்தத் திருக்குர்ஆனிலிருந்தே எதிர்வர விருக்கும் மங்கோலிய தார்தாரிகளின் எதிர்ப்பை சமாளிக்கும் உத்தியையும் கண்டெடுத்தார்கள்.

எதிர்வரும் அந்தப் போராட்டத்தை எப்படி எதிர்கொள்வது என்ற வினாவுக்கு அல்லாஹ் இப்படி வழிகாட்டினான்.

"நீங்கள் சொற்ப(மான பேர்தளவாட)ங் களைக் கொண்டிருந்தாலும் சரி! நிறைய(ப் போர்த்தளவாடங்களைக்) கொண்டிருந்தாலும் சரி, நீங்கள் புறப்பட்டு, உங்கள் பொருட் களையும், உயிர்களையும் கொண்டு அல்லாஹ் வின் பாதையில் அறப்போர் புரியுங்கள். நீங்கள்



அறிந்தவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிகவும் நல்லது" (அத்தௌபா 9:41)

உலகில் அநியாயங்களை வேடிக்கையாகவும், அதையே வாடிக்கையாகவும் கொண்டவர்களின் கைகளைத் தடுத்து பூமியில் குழப்பத்தை முற்றாக ஒழித்து அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்த வரலாறு இதுபோன்ற இறைமறை வசனங்களுக்கு ஏராளமாக உண்டு. எழுத ஏடு தாங்கமாட்டாது.

இஸ்லாமிய வரலாற்றில் இதுபோன்ற வசனங்களால் ஊக்கமும் உற்சாகமும் பெற்று வரலாறு படைத்தவர்கள் வரலாறாக வையத்தில் வாழ்கின்றார்கள். மறுமையில் படைத்தவனிடம் மகோன்னதை கூலிகளைப் பெற்று நிரந்தர சுகத்தைச் சுவைக்கின்றார்கள்.

ஆம்! அப்படியொரு வரலாற்றைப் படைத்தார் எகிப்தின் ஆட்சியாளர் சுல்தான் மாலிகுல் முஸாஃபர் செய்ஃபு தீன் (ரஹ்) அவர்கள்.

தன்னுடைய படைவீரர்களிடம் இறைவனின் வழிகாட்டுதலை உணர்த்தினார்கள்.

"ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வின் பாதையில் (போருக்குப் புறப்பட்டுச்) செல்லுங்கள் என்று உங்களுக்குக் கூறப்பட்டால், நீங்கள் பூமியின் பக்கம் சாய்ந்து விடுகின்றீர்களே! உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? மறுமையை விட இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டே நீங்கள் திருப்தியடைந்து விடுகின்றீர்களா? மறுமை(யின் வாழ்க்கைக்கு) முன்பு இவ்வுலக வாழ்க்கையின் இன்பம் மிகவும் அற்பமானது" (அல்குர்ஆன் 9:38)

மங்கோலியர்களாம், அவர்களுக்குத் தார்தாரிகள் என்ற மற்றொரு பெயராம், வருவார்களாம் வெல்வார்களாம், அவர்களின் வாளுக்கு இரையாகியே ஆக வேண்டுமாம்.

அவர்கள் வரவும் வேண்டாம், அவர்களின் வாளுக்கு வேலை கெய்ரோவில் வேண்டாம். செல்வோம் அவர்களை அவர்களின் முகாமிலேயே சந்திப்போம், வெல்வோம் அல்லது வீர மரணத்தை அடைவோம் எனப் புறப்பட்டார்கள்.

இப்போது சிரியாவை சின்னா பின்னாப் படுத்திவிட்டு, ஃபாலஸ்தீனுள்ள நாசரேத்திற்கு பக்கத்திலுள்ள "அய்ன்ஜாலுத்"தில் மங்கோலியர்கள் பாசறை இறக்கி இருந்தார்கள். அவர்களை அங்கே வைத்து எகிப்திய முஸ்லிம் படைகள் சந்தித்தன.

இறைமறை வசனங்கள் தந்த பலம் அதனால் இயல்பாக எழுந்த வேகம், அதனால் வந்த அதிரடித் தாக்குதல் இவற்றால் நிலை குலைந்தார்கள் மங்கோலியர்கள். அதுவரை விட்டுவிட்டு அவர்கள் அப்படியொரு தாக்குதலை சந்தித்ததே இல்லை.

பின்னங்கால் பிரிடயில்பட ஓடினார்கள். தாங்கள் கட்டவிழ்த்துவிட்ட அடாவடிகள், அவற்றில் அடித்த கொள்ளைகள் அவற்றில் சேர்ந்த பொருட்கள் இவற்றையெல்லாம் முஸ்லிம்களின் வீரத்தைப் பறைசாற்றிக் கொண்டே ஓடினார்கள். மங்கோலியர்கள் முதன்முதலாக தோல்வியைத் தழுவினார்கள்.

ஆங்காங்கே தங்கியிருந்த அற்ப சொற்ப மங்கோலியர்களும் உயிருக்குப் பயந்து ஓடினார்

கள். வரலாற்றில் அன்று வீழ்ந்த மங்கோலிய மகிமை மீண்டும் எழவே இல்லை.

அவர்களில் பெரும்பாலோர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு மங்கோலிய தார்தாரிகளாக தங்கள் வாளை சுழற்றவில்லை அவர்கள். ஈமான் கொண்ட முஸ்லிம்களாக நீதிக்காகவும், அநீதிகளை அழித்தொழிக்கவுமே தங்கள் வாளை சுழற்றினார்கள்.

அவர்களை ஓரிடத்தில் வென்றோம் ஓராயிரம் இடத்தில் இஸ்லாம் அவர்களைத்தான் வயப்படுத்திற்று.

**இஸ்லாம் மங்கோலியர்களை வென்ற வரலாறு...**

மங்கோலிய படைகள் தந்த அழிவு தடுத்து நிறுத்தப்பட்டது. மறுபக்கம் இஸ்லாமிய பிரச்சாரம் இனிதே நடைபெற்றுக் கொண்டிருந்தது. இருந்தாலும் மங்கோலியர்களை ஆட்கொள்ள இருவேறு கொள்கைகள் காத்துக் கிடக்கின்றன.

பௌத்தம் - மற்றொன்று கிறிஸ்தவம்

அவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாத்தையே வழி நடத்தும் கொள்கையாக ஆக்கிக் கொண்டார்கள்.

செங்கிஸ்கானின் பேரன் "பராக்காகான்" என்பவர் தாம் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவர் ஆட்சியிலிருந்த போது இரண்டு முஸ்லிம் வியாபாரக் கூட்டங்கள் அவருடைய இடத்தை கடந்து சென்றன. அந்த வியாபார கூட்டத்தை வழி மறித்து, அந்த வியாபாரிகளை தனியாக அழைத்துச் சென்றார். அவர்களை தகாத சொற்களால் அதாவது "நாய்" எனக்கூறினார். ஏசியபோது அவர்களில் ஒருவர் ஆமாம்! ஈமான் கொள்ளவில்லையென்றால் அப்படித்தான்" என்றார் வியாபாரிகளில் ஒருவர். உடனேயே ஈமான் என்றால் என்ன என்று கேட்டார் மன்னன்.

ஈமான் என்றால் என்ன என்பதை விளக்கிச் சொன்னார். அந்த வியாபாரி மன்னன் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

சில வரலாற்றுக் குறிப்புகளில் மன்னர் பராக்கா கான் அவர்கள் சென்று இஸ்லாத்தைப் பற்றி வினவினார் என்று மட்டும் வருகின்றது.

(Praching of Islam : by T.W. Arnold)

இன்னும் சில வரலாற்றுக் குறிப்புகள் ஒரு பக்கம் கிலாஃபத் சீர்குலைந்தது, மறு பக்கம் அதனைச் சீர்குலைத்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டே இருந்தார்கள் என்று மட்டும் குறிப்பிடுகின்றன. (History of Islam by Masudul Hassan)

நமது மதிப்பிற்குரிய மார்க்க அறிஞர் அலீமியான் அவர்கள் மங்கோலியர்கள் இஸ்லாத்திற்கு வந்த வரலாற்றை இஸ்லாமிய பிரச்சாரகர்களுக்குச் சொந்தமாக்கி அவர்களை வாயாரப் பாராட்டுகின்றார்கள். அவர்கள் இஸ்லாத்திற்கு வந்த விதத்தைப் பின்வரும் இறைமறை வசனத்தைக் கொண்டு முடிக்கின்றார்கள்.

"அல்லாஹ் யாருக்கு வழிகாட்ட நாடுகின்றானோ, அவருடைய நெஞ்சை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்காக விசாலமாக்குகிறான். யாரை அவன் வழிகெடுக்க நாடுகின்றானோ அவருடைய நெஞ்சை வானத்தில் ஏறுபவன் நெஞ்சைப் போல இறுகிச் சுருங்கும்படி செய்கிறான். இவ்வாறே ஈமான் கொள்ளாதவருக்கும் அல்லாஹ் தன் தண்டனையை ஏற்படுத்துகின்றான்" *(அல்குர்ஆன் - 6:125)* (Saviours of Islamic Sprit) by Abul Hassan Ali Nadvi

இஸ்லாம் மங்கோலியர்கசை சென்றடைந்த பின்னர், அது அங்கே புயல் வேகத்தில் பரவிற்று. இந்த இனிப்பான வரலாற்றில் இன்னொரு உண்மை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இது இன்னொரு மங்கோலிய பெருங்கூட்டம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நிகழ்ச்சி.

**செங்கிஸ்கானின் மற்றொரு பேரன் "அபாகா கான்"**

அபாகா கான் "தப்ரேஸ்" என்ற இடத்தை மையமாகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தான். அபாகா கானின் தாயார் "டோருஸ் காத்தூன்" ஒரு கிறிஸ்தவ பெண்மணி. அந்த வகையில் அபாகா கான் ஓர் கிறிஸ்தவ பெண்மணியையே திருமணம் செய்திருந்தார்.

அபாகா கான் தன்னை கிறிஸ்தவத்திற்கு மாற்றிக்கொள்ளவில்லை என்றாலும் மனைவியின் பரிந்துரையின் கீழ் கிறிஸ்தவத்திற்கு பெரிய அளவில் உதவிகளை செய்து வந்தான். கிறிஸ்த

வர்கள் எல்லா சலுகைகளையும் பெற்று பெரு வாழ்வு வாழ்ந்தார்கள்.

அதேநேரத்தில் நேரடியாகவும் மறை முகமாகவும் மக்கள் இஸ்லாத்தை வெறுக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

மீண்டும் முஸ்லிம்கள் சொல்லொணா துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆட்படுத் தப்பட்டார்கள். கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ள நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டாயப் படுத்தப்பட்டார்கள் முஸ்லிம்கள்.

இத்தனை கெடுபிடிகளுக்குப் பின்னரும் யாரும் இஸ்லாத்தை விட்டு விட்டு கிறிஸ் தவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சுற்றியுள்ள இடங்களில் இஸ்லாம் தான் வேகமா கப் பரவியது. அபாகா கானின் பக்கத்து நாட்டின் ஆட்சியாளர்"பெராக்கான்" இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். போராக் கான் என்ற மற்றொரு ஆட்சியாளர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

ஆக அபா கானை சுற்றி முஸ்லிம்கள் ஆட்சி யாளர்கள். அபாகா கான் அவர்களைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர போர் முரசு கொட்டினான் போர் மூண்டது.

பராக்கான் படையும், அபாகான் படைகளும் மோதின, இரண்டு தலைமுறைகளுக்கு முன் இஸ்லாத்தை அழிக்கப்போரிட்டார்கள். இப்போது அவர்களில் ஒரு சாரார் இஸ்லாத்திற் காக போரிட்டார்கள் என வரலாறு மாறியது.

அபாகா கான் பல வெற்றிகளைப் பெற்றார். ஆனாலும் அக்கம் பக்கத்து முஸ்லிம்களை அல்லது முஸ்லிம் ஆட்களைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவந்திட இயலவில்லை.

அபாகா கான் *1280*-இல் நடந்த போரில் பெரும் தோல்வியைத் தழுவினார். "அய்ன் ஜாலுத்" தோல்வியைபோல் இதுவும் ஒரு பெரும் தோல்வியானது. அபாகா கானால் இந்தத் தோல்வியைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை. *1281*-இல் அவர் இறந்தார்.

அபாகா கான் இறந்தபோது அவருக்கு வயது நாற்பது மட்டுமே!

அபாகா கான் தன் மகன் "அர்கு.." என்பவர் தான் மங்கோலியர்கள் சார்பில் ஆட்சிக்கு வர வேண்டும்" என்று உயில் எழுதி வைத்தான்.

ஆனால் அவருடைய சகோதரர் "தகுபத்" என்பவர் ஆட்சியை பிடித்துக் கொண்டார். ஆட்சிக்கு வந்த இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். தனது பெயரை "அஹ்மத்" என மாற்றிக் கொண்டார்.



இப்போது எகிப்தை "மம்லு முஸ்லிம்கள்" ஆட்சி செய்து வந்தார்கள். மங்கோலிய மன்னர்களில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் போர் நடக்கும் போதெல்லாம் மக்களில் பலர் அபயம் தேடி எகிப்தை சென்றடைந்தனர்.

அந்த மக்களை அன்போடு வரவேற்று ஆதரவளித்து உதவிகளை செய்தார்கள் எகிப்திய முஸ்லிம்கள். இஸ்லாத்தையும் எடுத்துச் சொன்னார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஆட்சியாளர்களின் பெருந்தன்மையால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்று எகிப்திலேயே நல்ல முஸ்லிம்களாக வாழ்ந்தார்கள்.

இப்படி மங்கோலியர்கள் இஸ்லாமிய மயமானார்கள். முஸ்லிம்களின் மண்டை ஓடுகள், முஸ்லிம்களிடமிருந்து வழிந்த இரத்த அணு, பிணக் குவியல் இவற்றின்மேல் நடந்தவர்கள் இஸ்லாத்திற்காக வாழ்ந்தார்கள், மடிந்தார்கள்.

### ஸார் மன்னர்களின் கெடுபிடிகள்

காலங்கள் உருண்டோடின, இதே தார்தாரிகள் ருஷ்யாவின் "ஸார்" மன்னர்களின் ஆட்சியில் இஸ்லாத்தை விட்டுவிடும்படி பணிக்கப்பட்டார்கள். ஈமானை இழக்க மாட்டோம் என உறுதியாக நின்றார்கள்.

அதன்பின்னர் வநத ருஷ்யா ஆட்சியாளர்கள் அவர்களுக்கு சொந்த நாடொன்று இல்லை என ஆக்கினார்கள். அவர்கள் நாடின்றி அலைந்தார்கள். ஆனாலும், ஈமானின்றி அலயவில்லை. ஈமானை இழக்கக்கூடாது என்பதனால் அநேக துன்பங்களையும் ஏற்றார்கள்.

வரலாற்றின் பிந்தைய காலக்கட்டத்தில் அவர்கள் விசித்திரமான ஒரு சித்திரவதையைச் சந்தித்தார்கள்.

### ரஷ்ய ஸார் மன்னர்கள்

புகை வண்டியைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அதில் சரக்கு ஏற்றிடும் பெட்டியில் இந்த முஸ்லிம்களை (வரலாற்றின் ஒரு காலக் கட்டத்தில் மங்கோலிய தார்தாரிகள்) அந்தச் சரக்குப் பெட்டியில் ஏற்றினார்கள். ஒரு சரக்கு ரெயில் பெட்டியில் 20 பேர் பயணம் செய்யலாம் என்றால் 100 பேரை ஏற்றினார்கள். காற்றுப்புக முடியாமல் அந்தச் சரக்குப் பெட்டிகளை மூடினார்கள்.

முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் எல்லோரும் இப்படியே அடைக்கப்பட்டார்கள். சில கிலோ மீட்டர்கள் சென்றவுடன் பெட்டிகளைத் திறந்து பார்ப்பார்கள் சில முஸ்லிம்கள் இறந்திருப்பார்கள். அவர்களை இழுத்துக் கீழே தள்ளுவார்கள். மீண்டும் பயணம், மீண்டும் இதே நிலை.

ஆனாலும் அவர்கள் ஈமானை இழக்கவில்லை. ஈமானில் உறுதியாக நின்றார்கள். மரணத்தைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை.

## மங்கோலியர்கள் வாழ்க்கையில் எதிர்படும் உண்மைகள்

- *மங்கோலியர்கள்தாம் 13ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சாம்ராஜ்யங்களின் அதிபதிகள்.*
- *அவர்கள் வீரத்திலும், தீரத்திலும் ஒப்பாருமிக்காருமில்லாமல் இருந்தார்கள்.*
- *அதேபோல் மனிதர்களைப் பிணங்களாகக் குவிப்பதில் குரூரமாக நடந்துகொண்டார்கள்.*
- *இவர்களைப் பற்றிய பீதியும் பயமும் மனித இனத்தின் நாடி நரம்புகளிலெல்லாம் வேரூன்றி நின்றது. மொத்தத்தில் அன்றைய காலங்களின் மனிதாபிமானமற்ற வல்லரசு.*
- *இத்தனை வீரம், தீரம், கோரம், குரூரம் இவற்றையெல்லாம் அரசு பெருநிலத்தில் வீழ்த்திக் காட்டியவர் சுல்தான் செய்புஃதீன் என்ற முஸ்லிம்.*
- *இந்தியத்துணைக் கண்டத்தில் அலாவுத்தீன் கில்ஜி என்ற முஸ்லிம்.*
- *ஏனெனில் எந்தப் பெரும்படையையும் அந்தப் படைகளின் மூர்க்கத்தனத்தையும் முறித்துக் காட்டும் வல்லமை அல்லாஹ்வின் அறுதி வேதமாம் அல்குர்ஆனுக்கும், அதனை உண்மையிலேயே பின்பற்றுபவர்களுக்குமே வரும். அல்ஹம்துலில்லாஹ்!*

முஸ்லிம்களை மூர்க்கத்தனமாக தாக்கியவர்கள் இஸ்லாத்தை ஏற்று அதற்காக உயிர் தியாகம் செய்த வரலாற்றில் மங்கோலிய தார்தாரிகளும் இணைகின்றார்கள்.

இந்திய பாசிஸ்ட்டுகளின் அடாவடித் தனங்கள் இன்று நமக்கு பிரமிப்பைத் தரலாம். வெல்ல முடியாதவர்கள் என்ற எண்ணத்தையும் தரலாத். ஆனாலும் இந்த பாசிஸ்ட்டுகளை வெல்லும் திறன் இஸ்லாத்திற்கு உண்டு.

இந்திய பாசிஸ்ட்டுகள் அற்புதமான ஆள் பலத்தைப் பெற்றிருக்கலாம். அதற்கு இஸ்லாத்தின் ஆன்மீக வழிகாட்டுதல்கள் மிகவும் அதிகமாகத் தேவைப்படுகின்றது என்பது மட்டும் உண்மை.

இந்தியாவின் ஜாதிவெறிக் கொள்கை முதற்கொண்டு, இங்கு குடும்ப வாழ்க்கையில் நிகழும் நித்திய குளறுபடிகள் வரை தீர்க்கும் தகுதி இஸ்லாத்திற்கே உண்டு.

இஸ்லாம் தன் ஆத்ம பலத்தால் இந்தியாவையும் அமெரிக்காவையும் நிச்சயம் வெல்லும் இன்ஷா அல்லாஹ்.

இந்த வெற்றியைக் கட்டியங்கூற சில "அய்ன் ஜாலுத்"கள் தேவைப்படலாம். இதற்கு நாம் அண்ணலெம் பெருமானாரின் அழகிய முன் மாதிரியை அனைத்துத் துறைகளிலும் அப்படியே பின்பற்றிட வேண்டும்.

மங்கோலியர்களின் வரலாற்றை எழுதும் வரலாற்றாசிரியர் இப்படியொரு சுவையாயன செய்தியை சொல்வார்கள்

"அரசியல் முனையில் முஸ்லிம்கள் தோற்றுப்போன இடங்களிலெல்லாம் இஸ்லாம்தான் ஆத்ம பலத்தால் வென்றது"

"அவர்கள் அல்லாஹ்வின் ஒளியைத் தம் வாய்களைக்கொண்டு (ஊதி) அணைத்துவிட நாடுகின்றார்கள். நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன் ஒளியைப் பூரண மாக்கி வைப்பான்" *(ஸப்ஃபு - 61:3)*

**உலகில் வளரும் மக்கள் தொகையை விட இஸ்லாம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. - ரம்ஸ் பரோடி.**





அந்த பெண்ணை ஐ.எஸ்.ஐ.எஸ். என்னும் தீவிர வாத அமைப்பில் சேர்ப்பதற்காக சிரியா அனுப்புவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இப்படி லவ் ஜிஹாதால் ஏராளமான பெண்கள் கேரளாவில் மதமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

இந்த மதமாற்றங்களுக்கு பின்னால் தடைசெய்யப்பட்டு சிமி-யும் இன்னும் சில இஸ்லாமிய அமைப்புகளும்தான் இருக்கின்றது என்பது தான் இவர்களின் தினசரி விவாதங்கள். யார் இந்தப் பெண்? இந்த வழக்கின் பின்னணி தான் என்ன? என்பதை நீதிமன்றங்களில்

# ஹாதியா - மறுக்கப்படும் மதச் சுதந்திரமும், பரப்பப்படும் இஸ்லாமிய வெறுப்பும்

கடந்த வருடம் 2017 ஆகஸ்டு 16-ம் தேதி அன்று நமது நாட்டின் முன்னணி ஆங்கில தொலைகாட்சி சேனல்கள் அனைத்தும் உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள ஒரு வழக்கை பற்றிய விவாதங்களை அனல் பறக்க நடத்திக் கொண்டிருந்தது.

அந்த சேனல்களில் குறிப்பாக டைம்ஸ் நவ், ரிபப்லிக் டிவி, மற்றும் இந்தியா டுடே போன்ற சேனல்கள் தங்களுடைய விவாத நிகழ்ச்சியை “Don’t Hindu girls have Rights?” இந்துப் பெண் களுக்கு உரிமைகள் கிடையாதா? “#Hindu girls for ISIS”, ஐ.எஸ்.ஐ.எஸ்.க்காக இந்துப் பெண்கள். “How a Hindu girls forced to convert to islam?” ஒரு இந்துப் பெண் இஸ்லாத்தை ஏற்கும்படி எப்படி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளாள்? “Love Jihad Exposed“ லவ் ஜிஹாத் அம்பலப்படுத்தப் பட்டது, போன்ற தலைப்புகளோடும், ஹாஷ்டா குகளோடும், தொடர்ந்து ஒரு வாரம் இதுவே அந்த சேனல்களில் விவாதப் பொருளாக இருந் தது. இந்த விவாதங்களில் இந்த சேனல்கள் சொன்ன செய்தி என்னவென்றால் கேரளாவை சேர்ந்த ஒரு இந்துப்பெண் கட்டாயப்படுத்தி மதமாற்றப்பட்டதோடு மன ஆதிக்கத்திற்கு ஆட்படுத்தப்பட்டு திருமணம் செய்து இப்போது

சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து பெறப் பட்ட தகவல்களோடு நாம் இக்கட்டுரையில் காண்போம்.

**அகிலா முதல் ஹாதியா வரை**

கேரளா மாநிலம் கோட்டயம் மாவட்டத் தின் வைக்கம் என்ற ஊரில் பிறந்தவர் தான் அகிலா. அகிலாவின் தந்தை அசோகன் ஒய்வு பெற்ற மத்திய ரிசர்வ் காவல்துறையை சேர்ந் தவர். அகிலா பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச் சிக்குப் பின் ஹோமியோபதி மருத்துவம் படிப் பதற்காக சேலம் சிவராஜ் சித்த மருத்துவக் கல்லூரியில் 2011-ஆம் ஆண்டு சேருகின்றார். கேரளா மாநிலம் பெருந்தல்மன்னா என்னும் ஊரை சேர்ந்த அபூபக்கர் என்பவரின் மகள்கள் ஜெசீனா மற்றும் பாஸீனா ஆகிய இருவரும் அகிலாவின் அறைத்தோழிகளாக தங்குகின் றனர். அவர்கள் இருவரின் இஸ்லாமிய அடிப் படையிலான ஐவேளை தொழுகை, அவர்கள் நற்குணங்கள் மற்றும் செயல்பாடுகள் அகிலாவை கவர்ந்ததால் அகிலா இஸ்லாத்தை ஆய்வு செய்து இஸ்லாம் குறித்த நூல்கள் வீடியோ பிரசுரங்களை கேட்டு இஸ்லாத்தை தனது வாழ்வியல்

நெறியாக ஏற்றுக் கொள்ள திட்டமிட்டு இஸ்லாத்தை பின்பற்ற தொடங்கி இருக்கின்றார்.

கடந்த *2016* ஜனவரி மாதம் இரண்டாம் தேதி ஹாதியா தனது வீட்டில் இஸ்லாமிய அடிப்படையிலான தொழுகையை நிறைவேற்று வதை பார்த்த அவரது தந்தை அசோகன் கடுமையாக கண்டித்துள்ளார். இதனால் மனமுடைந்த அகிலா தன் தோழிகளுடன் சென்றுவிட்டார்.

ஜனவரி *6*ஆம் தேதி அன்று பாஸினா, ஜெசீனா உடன் அவர்களது தந்தை அபூபக்கரும் சேர்ந்து கடத்தி கட்டாய மதம் மாற்றம் செய்து சட்டவிரோத காவலில் வைத்திருப்பதாகவும் தன்னுடைய மகளை மீட்டுத்தரும்படியும் கேரள உயர்நீதிமன்றத்தில் அகிலாவின் தந்தை அசோகன் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார் WP(crl.)No 25 of 2016 (S) இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு.சி.கே.அப்துல் ரஹீம், திரு.ஷாஜி அடங்கிய அமர்வு போலீஸ் விசாரணைக்கு உத்தரவிட்டது.



போலீசார் உடனடியாக அபூபக்கரை கைது செய்து சிறையில் அடைத்தனர். (Perinthalmanna Police registered Crime No.21 of 2016 Under Section 57 of Kerala Police 4(t) Sec153 A, 295 and 107 IPC)

இதனிடையே ஜனவரி *19, 2016* அன்று நீதி மன்றத்தில் ஆஜரான அகிலா தனது வாக்கு மூலத்தில் சேலத்தில் தனது அறைத் தோழிகளாக இருந்த ஜெசீனா மற்றும்பாஸீனா சகோதரிகளின் இஸ்லாமிய அடிப்படையிலான ஐவேளை தொழுகை முறைகள் மற்றும் நற்குணங்கள் தன்னை கவர்ந்ததால் இஸ்லாம் குறித்த நூல்கள் வீடியோ பிரசங்கங்களை கேட்டு தான் இஸ்லாம் மதத்தின் பால் ஈர்க்கப்பட்டதாகவும், தன்னை யாரும் கடத்தவில்லை என்றும் கூறினார். இந்த வழக்கை மேற்கொண்டு விசாரித்த போலீசார் “அபூபக்கரால், அகிலா சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை” என்று அறிக்கையை தாக்கல் செய்ததின் அடிப்படையில் ஜனவரி *20-2016* அன்றுஅசோகனின் மனுவை கேரள உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

சட்டப்படி இஸ்லாத்தை ஏற்க அகிலா திட்ட மிட்டதை அடுத்து அகிலாவை தர்பியத்துல் இஸ்லாமிய மையத்தின் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அபூபக்கர் ஏற்பாடு செய்தார். அதன் அடிப்படையில் அகிலா அங்கு சேர்ந்து இஸ்லாத்தை பயின்று தனது பெயரை ஹாதியா என்று மாற்றம் செய்து கொண்டார்.

**லவ் ஜிஹாத் என்னும் விஷமப் பிரச்சாரம்**

தனக்கு திருமணம் செய்து கொள்ள வயது வந்தபடியால் ஹாதியா திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தார். அதனடிப்படையில் இணையதளத்தில் வரன்களை தேடி அவருக்கும் ஷஃபின் ஜஹான் என்ற இளைஞருக்கும், *2016* ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. இதனை அறிந்துக் கொண்ட ஹாதியாவின் தந்தை அசோகன் தன் மகளை ஒரு இஸ்லாமிய இளைஞனுக்கு திருமணம் செய்து கொடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்திற்கு ஆள் சேர்த்து சிரியாவுக்கு அனுப்ப திட்டம் தீட்டப்பட்டு வருகிறது என்று *17* ஆகஸ்ட் *2016* அன்று மற்றொரு ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார். (W.P.(Crl.)No.297 of 2016)

இவ்வழக்கை திரு.சுரேந்திர மோகன், திரு. ஆப்ரஹாம் மேத்தீவ் அடங்கிய அமர்வு நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. மீண்டும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரான ஹாதியா, தன்னிடம் பாஸ்போர்ட் கூட இல்லை என்பதால், தான் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் சேர்ந்து சிரியா நாட்டுக்கு செல்ல போவதாக கூறும் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என்பதை தெளிவுபடுத்தினார். அதன்பின் நிச்சயிக்கப்பட்டபடி *19.12.2016* அன்று புத்தூர் மசூதியில் வைத்து ஷஃபின் ஜஹான் - ஹாதியா திருமணம் நடந்தது. இப்படியாக இஸ்லாத்தை தன் வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொண்டு பின்பு




திருமணம் செய்த ஹாதியாத் திருமணத்தை பாசிச பயங்கரவாதிகளும் அவர்கள் பக்க வாத்தியங்களான ஊடகமும் “லவ் ஜிஹாத்” என வெறுப்புப் பிரச்சாரமும் செய்வது அடிப்படை மனிதனின் மதச் சுதந்திரத்திற்கு எதிரானது. இதனையே நீதிமன்றமும் ஆமோதிப்பது நீதிமன்றங்கள் மனுநீதிமன்றமாக மாறியதையே காட்டுகின்றது.

*2009*ஆம் ஆண்டுநடந்த சில திருமணங் களை மேற்கோள் காட்டி எழுந்த “லவ் ஜிஹாத்” என்னும் பிம்பத்தை அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் அப்போதைய கேரள D.G.P. ஜாகோப் புனூஸ் கேரளா உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் லவ் ஜிஹாத் என்பது தவறான பரப்புரை ஆகும். அப்படி ஒன்றும் நிகழவில்லை என்று தெரிவித்தார். அதனை அப்போதைய உயர்நீதிமன்ற நீதிபதிகள் K.T.சங்கரனும், வி.சசிதர நம்பியாரும், நிராகரித்தனர். இப்படி யாக ஒன்றுமில்லாத விஷமப்பிரச் சாரமான லவ் ஜிஹாதை ஊதிப்பெரிதாக்கிய பெருமை கேரள உயர்நீதி மன்றத்தையே சாரும்.

**சட்டத்திற்கு புறம்பான கேரள உயர்நீதிமன்றத் தீர்ப்பு**

*21.12.2016* அன்று வழக்கு சம்பந்தமாக தன் னுடைய கணவருடன் நீதிமன்றத்தில் ஆஜரான ஹாதியாவை கண்ட நீதிபதிகள் உடனடியாக அவர் கணவரிடமிருந்து அவரை பிரித்து ஹாஸ் டலில் அடைக்க உத்தரவிட்டனர். மேலும் இந்த திருமணம் குறித்து போலீஸ் விசாரித்து அறிக்கை அளிக்க உத்தரவிட்டனர். போலீசார் இஸ்லாமிய முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளதாகவும், இதில் சட்டப்படியான எந்த தவறும் கண்ட றியப்படவில்லை என்றும் அறிக்கை தாக்கல் செய்தனர்.

இதனை ஏற்றுக்கொள்ளாத நீதி மன்றம் மேலும் இது சம்பந்தமாக கிரைம் பிரான்ச் போலீசார் விசாரணைக்கு உத்தரவிட்டனர். கிரைம் பிரான்ச் போலீசார் ஷஃபின் ஜஹான் பாப்புலர் ஃப்ராண்ட் ஆஃப் இந்தியா அமைப்பை சேர்ந்தவர் என்றும் அவர்மீது ஒரு கிரிமினல் வழக்கு உள்ளதாகவும் அறிக்கை தாக்கல் செய்தனர்.

கல்லூரி நாட்களில் போராட்டங் களில் ஈடுபட்டதால் தன் மீது இந்த கிரிமினல் வழக்கு பதியப்பட்டதாகவும், தான் கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை என்னும் ஷஃபின் ஜஹானின் வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாமல் மே *24, 2017* அன்று இவர்களின் திருமணத்தை ரத்து செய்து உத்தர விட்டதோடு ஹாதியாவை அவர் பெற்றோரிடம் ஒப்படைத்தது. அவரை வெளியாட்கள் யாரும் சந்திக்ககூடாது என்றும் அவர் வீட்டிற்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கவும் சட்டத்திற்கு புறம்பான புதுமையான வினோதமான தீர்ப்பை தந்தது கேரள உயர்நீதிமன்றம்.

திருமணமான இரண்டே நாட்களில் ஹாதியா அவர் கணவரிடம் இருந்து பிரிக்கப்பட்டார். மேஜரான ஒரு பெண் தன்னுடைய சுய விருப் பத்தின்படி மதத்தை ஏற்றுக் கொள்ள அரசியல் சாசனம் அளித்துள்ள உரிமைக்கு மாறாகவும் இரண்டு பேர் மனம் விரும்பி செய்து கொண்ட திருமணத்தை செல்லாது என்று தீர்ப்பளித்த கேரள உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ஷஃபின் ஜஹான் சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்தார்.

**முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஏற்றிய NIA விஷம்**

ஷஃபின் ஜஹானின் மேல்முறையீட்டை வழக்காக விசாரித்த அப்போதைய உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி J.S.கெஹர் ஹாதியா அவரது தந்தை கூறுவது போன்று ஏமாற்றப் பட்டு மதம் மாற்றப்பட்டாரா என்று தேசிய புலனாய்வுத்துறை (NIA) விசாரிக்க உத்தர விட்டார். மேலும் இது தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் ஹாதியாவின் கருத்தையும் கேட்க நீதிமன்றம் ஒப்புக் கொண்டது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பதவியில் இருந்து நீதிபதி J.S.கெஹர் ஓய்வு பெற்றதை தொடர்ந்து ஷஃபின் ஜஹான் மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுகி NIA தொடர்பான அதன் முந்தைய உத்தரவை திரும்பப் பெறும்படி விண்ணப்பத்தார். NIA என்பது தீவிரவாதத்தை தடுப்பதற்காக அமைக்கப்பட்டது என்பதை யும் அதனை இவ்வழக்கில் நீதிபதி உட்புகுத்தி யதையும் பார்க்கையில் J.S.கெஹரின் நீதிபதி கவுன் காவியிலானது என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஷஃபின் ஜஹான் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் துஷ்யந்த் தவே இந்த வழக்கில் NIA விசாரணைக்கு உத்தரவிட்டது. இந்தியாவின் பல வழிபாட்டு சமூகத்தின் அடிப்படையையே அசைக்கிறது என்றும், பாஜகவின் இரண்டு மூத்த தலைவர்கள் சிறுபான்மை சமூகத்தில் தான் திருமணம் முடித்துள்ளனர். அதனால் அவர்களின் விஷயத்திலும் NIA விசாரணை உத்தரவிடப் படுமா என்ற கேள்வி எழுப்னிர். மேலும் அவர் இந்த வழக்கில் NIA விசாரணைக்கு உத்தரவிட்டு தங்களது அதிகாரத்தை நீதிமன்றமே மீறியுள் ளது. இந்த வழக்கில் மாநில அரசு மனுதாரராக இல்லை, மத்திய புலனாய்வுத் துறையும் மனு தாரராக இல்லை. இங்கு NIA விசாரணைக்கு எந்த தேவையும் இல்லாத போது தேவைக்கு அதிகமாக அதனை உத்தரவிட்டு நீதிமன்றம் தனது அதிகாரத்தை மீறியுள்ளது என்று அவர் கூறினார்.

### ஹாதியா வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளின் கருத்து

ஹாதியா வழக்கு தற்போதைய தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதி A.M.கான்வில்கர் மற்றும் நீதிபதி D.Y.சத்திரசூத் அடங்கிய பென்ச் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண் டது. இது குறித்து கருத்து கூறிய தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா சட்டப்பிரிவு 226இன் கீழ் ஒரு திருமணத்தை உயர்நீதிமன்றம் ரத்து செய்ய இயலாது என்றும் அதுபோல் ஹாதியா ஒரு 24 வயது பெண் என்பதால் அவரது கட்டுப்பாட்டை அவரின் தந்தை எடுத்துகொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணையின்போது கருத்து தெரி வித்த நீதிபதி A.M.கான்வில்கர் கூறுகையில்

தன் வாழ்நாளில் இப்படியொரு வழக்கை பார்த்ததில்லை என்றும் பொதுவாக இதுபோன்ற வழக்குகளில் பெண் மேஜர் என்றால் அவரின் கருத்தைக் கேட்டு அத்துடன் வழக்கு முடித்து வைக்கப்படும் என்றும் என்னைப் பொருத்தவரை இந்த வழக்கு அடிப்படையற்றது என்று தெரிவித்தார்.

உச்சநீதிமன்ற நீதிபதி D.Y சந்திரசூத்தின் சித்து விளையாட்டு

உச்சநீதிமன்றம் 27ம் தேதி டிசம்பர் மாதம் ஹாதியாவை நேரில் ஆஜராக ஆணை பிறப்பித்தது. அவர் உச்சநீதிமன்றத்தில் ஆஜராக புதுடெல்லி செல்லும் முன்பாக விமான நிலையத்தில் அவர் அளித்த பேட்டியில் நான் ஒரு முஸ்லீம் என்னை யாரும் நிர்பந்தித்து மதம் மாற்றவில்லை. என் கணவரோடு வாழவே நான் விரும்புகிறேன் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உச்சநீதிமன்றத்தில் டிசம்பர் 27 ஹாதியா வழக்கு விசாரணை தொடங்கியதிலிருந்து ஷஃபின் ஜஹானின் வழக்கறிஞர் கபில் சிபில் இவ்வழக்கில் ஹாதியாவின் கருத்தே முக்கிய மானது என்பதால் அவரிடம் விசாரணை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் ஹாதியா நீதிமன்றத்தில் பேசுவதற்கு அனைத்து விதத்திலும் முட்டுக்கட்டை போடப்பட்டது.

ஒரு நிலையில் வழக்கறிஞர் கபில்சிபிலிடம் ஹாதியா Stockholm Syndrome ஆல் பாதிக்கப் பட்டிருக்கலாம் என்று கூட உச்சநீதிமன்ற நீதிபதி சந்திரசூத் தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறுகையில் உங்கள் வழக்கில் அது இருக்கிறது என்று நான் கூறவில்லை. ஆனால் Stockholm Syndrome என்று ஒன்று உள்ளது.

மேலும் அசோகன் தரப்பு வழக்கறிஞர் ஹாதியா மனநல ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுள் ளார். அதனால் அவரை தற்போது விசாரிப்பது சரி இல்லை என்று கூறினார். இதற்கு பதிலளித்த வழக்கறிஞர் கபில்சிபில் எந்த வகையான மனநல ஆதிக்கத்தை குறித்து நாம் இங்கே பேசுகின்றோம். ஹாதியா கடந்த 8 மாதங்களாக அவரது பெற்றோருடன் இருந்துள்ளார் என்று தெரிவித்தார்.

இவ்வழக்கில் சேர்க்கப்பட்ட NIA தரப்பு வழக்கறிஞரோ அவர்கள் சமர்ப்பித்த 100 பக்க

அறிக்கையை படித்த பின்னரே ஹாதியாவிடம் அவரது கருத்தை கேட்க வேண்டும் என்று கூறினார்.

இதுகுறித்து கேரள அரசு வழக்கறிஞர் கிரியிடம் நீதிபதிகள் கருத்து கேட்க "உங்கள் முன் சமர்ப்பிக்கப்பட்ட NIA ஆவணங்கள் முக்கிய மானது என்றால் நீங்கள் ஹாதியாவிடம் பேசு வதற்கு முன்னர் அந்த ஆதாரங்களை குறித்து பார்க்கலாம் என்று NIA விற்கு ஆதரவான கருத்தை கூறினார். இதுகுறித்து தனது அதிருப் தியை தெரிவித்த வழக்கறிஞர் கபில்சிபில் நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே ஹாதியா இங்கு வரவழைக்கப்பட்டுள்ளார் என்றும் இவ்வழக்கில் ஹாதியாவின் கருத்து என்ன என்பதனை கேட்பதை விட்டு விட்டு ஊடகங்கள் பரப்பும் விஷப்பிரச்சாரம் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றோம் என்று கூறினார்.

இந்நிலையில் நீதிமன்ற அலுவல் நேரம் முடிவுறுகிறது. அதனால் ஹாதியா மறுநாள் விசாரிக்கப்படுவார் என்ற நிலையில் வழக்கறிஞர் கபில் சிபிலின் தொடர் முயற்சியால் ஹாதியா நீதிபதிகள் முன் ஆஜர்படுத்தப்பட்டார். அவர் மலையாளத்தில் உரையாற்றவும் அதற்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டது. ஹாதியாவிடம் பேசத் தொடங்கிய நீதிபதிகள் அவரது பள்ளி படிப்பு மற்றும் அவரது வருங்கால திட்டங்கள் குறித்து கேட்டார். இதற்கு பதிலளித்த ஹாதியா எனக்கு என்னுடைய சுதந்திரம் திரும்பவும் வேண்டும் என்று கூறினார்.

மேலும் தனக்கு தனது கணவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். 11 மாதங்கள் தான் சட்ட விரோத காவலில் வைக்கப்பட்டிருந்ததாகவும் தனக்கு மனதளவில் பெருமளவு சித்திரவதைகள் தரப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். தனக்கு தன் கணவரையே பொறுப்பாளராக நியமிக்க வேண்டும் என்றும் அவர் நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்டார். மேலும் தான் தனது கணவருக்கும், மார்க்கத்திற்கும் உண்மையாக இருக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

பாதியில் தடைப்பட்ட அவரது கல்லூரிப் படிப்பை அரசு செலவில் கல்வி பயில விருப்பமா என்று கேட்டதற்கு தனது கணவர் இருக்க ஏன் அரசு செலவில் கல்வி பயில வேண்டும் என்று பதிலளித்தார் ஹாதியா.

மேலும் தான் ஒரு சிறந்த மருத்துவராக விருப்பம் எனவும் தேசத்தின் சிறந்த குடிமகள் என்றும் தான் இஸ்லாமிய மார்க்கத்தை தொடர வேண்டும் என்றும் நீதிமன்றத்திடம் ஹாதியா கூறினார். ஹாதியாவின் பதில்கள் இதுவரை இது லவ் ஜிஹாத் கட்டாய மதமாற்றம் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறிய அனைத்து விஷ பொய் பிரச்சாரங்களையும் தகர்த்தது.

ஆயினும் பலமுறை தான் தன் கணவருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று தனது விருப் பத்தை ஹாதியா தெரிவித்தபோதும் அதை அனுமதிக்காத நீதிமன்றம் ஹாதியாவை அவரது வீட்டுச் சிறையிலிருந்து மீட்டு அவர் முன்னர் கல்வி பயின்ற சிவராஜ் ஹோமியோபதி கல்லூரியில் சேர்த்தது.

அங்கு அவர் அவரது கல்வியை தொடரலாம் என்று அறிவித்தது. மேலும் கல்லூரி முதல்வர் ஹாதியாவின் பொறுப்பாளராக இருப்பார் என்றும் அனைத்து மாணவிகளைப் போல ஹாதியாவும் அங்கு நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் அவரின் பாதுகாப்பை தமிழக அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறிய நீதிமன்றம் இது தொடர்பான அடுத்தகட்ட விசாரணை வருகிற ஜனவரி மாதம் மூன்றாம் வாரத்திற்கு ஒத்தி வைத்துள்ளது.

**ஷாபானு மற்றும் ஹாதியா வழக்கு மாறி வந்த சந்திரசுத்துகளின் தீர்ப்புகள் :**

நாடே அல்லோல கல்லோல பட்ட ஷா பானு வழக்கில் தீர்ப்பு கூறியவர் அப்போதைய தலைமை நீதிபதி C.J.சந்திரசூத் இன்று நாடே எதிர்நோக்கும் ஹாதியா வழக்கில் நீதிபதியாக இருப்பவர் C.J.சந்திரசூத்தின் மகன் D.Y.சந்திரசூத்.

C.J.சந்திரசூத் ஷா பானு வழக்கில் அளித்த தீர்ப்பில் (Muslim husband obligation to provide maintenance for a divorced wife who is unable to maintain herself) அதாவது முஸ்லீம் கணவனுக்கு விவாகரத்தான அவனது மனை விக்கு அவனே பொறுப்பாளன் ஆவான். அவனே அவள் வாழ்வதற்குண்டான ஜீவனாம்சத்தை

தரவேண்டும் என்று விவாகரத்தானாலும் மனைவிக்கு கணவனே பொறுப்பு என்று தீர்ப்பு வழங்கினார்.




ஹாதியா வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதி D.Y.சந்திரசூத் (Husband cannot to be guardian of wife and wife is not a chattel of husband) அதாவது கணவன் மனைவிக்கு பாதுகாவலனும் அல்ல. மனைவி என்பவள் கணவனுடைய சொத்தும் அல்ல என்கின்ற முரணான தீர்ப்பை வழங்கினார்.

இப்படியாக முன்னுக்குப்பின் முரணான தீர்ப்பை ஹாதியா வழக்கில் கொஞ்சம் கூட அடிப்படை விழிமையங்கள் அற்ற நிலையில் வேண்டுமென்றே D.Y.சந்திரசூத் தீர்ப்பாக வழங்கியுள்ளார்.

**ஹாதியாவிற்கு அளிக்கப்பட்ட உற்சாக வரவேற்பு**

வழக்கு விசாரணைக்குப்பின் கல்லூரி வந்த ஹாதியாவை கோவை விமான நிலையத்திலும் சேலம் கல்லூரி வளாகத்திலும், நீதி அமைதிக்கான மக்கள் இயக்க ஏற்பாட்டில் தோழமை இயக்கங்களான தமுமுக, RYA, RYF, SUMS ஆகிய இயக்கத்தை சேர்ந்தவர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு "We stand with Hadiya", "SC against Hadiya", "Stand against Judicial Terrarism" என்னும் முழக்கங்களுடன் ஹாதியாவை வாழ்த்தியும் நீதிமன்ற விதிமீறலை கண்டித்தும் குரல் உயர்த்தி ஹாதியாவிற்கு உற்சாக வரவேற்பளித்தனர். இதனை கண்ணுற்ற ஹாதியாகவும் மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் கரம் அசைத்துச் சென்றார்.

இரண்டு இடத்திலும் காவல்துறையினர் தம்மாலான தகிடுதத்தங்களை செய்து கூடியோரை கலைக்க முற்பட்டனர். இந்த அரசின் அடக்குமுறைகளும் காவல்துறையின் தகிடுதத்தங்களும் நாம் படித்த பாலர் பாடம் என்பது போல் நம் தோழர்கள் கூடிய நோக்கத்தை நிறைவேற்றிச் சென்றனர்.

**ஹாதியா வழக்கில் கேரள உயர்நீதிமன்றமும், இந்திய உச்சநீதிமன்றமும் செய்த தவறுகள்**

கேரள உயர்நீதிமன்றம் ஹாதியாவின் திருமணத்தை ரத்து செய்தது ஒரு ஆட்கொணர்வு மனுவின் அடிப்படையில் ஆட்கொணர்வு மனு என்பது அரசியல் சட்டபிரிவு 21 வழங்கியுள்ள வாழ்வதற்கான உரிமையை உறுதிசெய்யும் ஒரு மனு ஒருவர் காணாமல் போகிறார். அவரை காவல்துறை கண்டுப்பிடிக்கவில்லை என்றால் ஹேபியஸ் கார்ப்பஸ் என்னும் ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்யலாம். காவல்துறை ஒருவரை அழைத்து செல்லும்போது அவரை நீதிமன்றத்தின் முன் ஆஜராக்காமல் இருந்தால் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்படும். காவல்துறையினர் வந்து அவர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நீதித்துறை நடுவர் முன் நேர்நிறுத்தப்பட்டுள்ளார் என்று தகவல் தெரிவித்தால் அந்த வழக்கு முடித்து வைக்கப்படும்.

உதாரணத்திற்கு எனது மகளை காணவில்லை என்று ஆட்கொணர்வு மனுதாக்கல் செய்யப்பட்டால் காவல்துறை அந்த பெண்ணை கண்டுபிடிக்கையில் அவருக்கு திருமணம் ஆகியிருக்கும். நீதிமன்றத்தின் முன் ஆஜராக்கப்படும் அந்தப் பெண் உரிய வயது வந்தவராக இருந்தால் நீதிபதிகள் அந்தப் பெண்ணை அழைத்துப் பேசுவார்கள். சம்பந்தப்பட்ட பெண், நான் என் விருப்பத்தில் எனக்கு பிடித்தவரோடு வாழப் போகிறேன் என்று கூறினால் நீதிமன்றத்தால் வேறு எதுவுமே செய்ய முடியாது.

ஹாதியாவின் வழக்கில் கேரள உயர்நீதிமன்றம் எங்களுக்கு தெரிவிக்காமல் எப்படி திருமணம் செய்யலாம் என்று கோபப்படுகிறது. நீதிமன்றத்தின் முன் ஆட்கொணர்வு மனு நிலுவையில் இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காகவே ஹாதியா திருமணம் செய்யக் கூடாதா என்ன? அவர் தேர்ந்தெடுத்த நபர் சரியானவரா! தவறானவரா! என்பதை முடிவு செய்ய வேண்டியது ஹாதியாதானே தவிர நீதிமன்றம் அல்ல.



Estd. 1936

**Therbiyathul Islam Sabha**

P.I. ROAD, MUKHADAR, CALICUT - 673 003
(Registered under the act XXI of 1860, Reg. No: S2/43)
Phone. 0495 - 230563, 2306013
E-mail: therbiyath1936@gmail.com

DISCHARGE CERTIFICATE

Certificate No: 6247
Name of Convert
Present Name: HADIYA
Previous Name: AKHILA ASOKAN
Name of father: ASOKAN
Name of mother: PONNAMMA
Permanent Address / Present Address
DEVIKRIPA,
T.V.PURAM PO,
VAIKOM,
KOTTAYAM,686 606
Former Religion: HINDU
Caste: EZHAVA
Age: 24
Sex: FEMALE
Identification Mark: A BLACK MOLE ON THE LEFT EYE BROW
Admission Register No: 346/16
Date of Admission: 16-07-2016
Date of Discharge: 25-07-2016
Progress of study SATISFACTORY
Conduct GOOD

This is to certify that HADIYA has embraced Islam and successfully completed the Islamic course conducted by Therbiyathul Islam Sabha.

Therbiyathul Islam Sabha,
Mukhadar ,
Calicut. 25-07-2016

President/ Secretary

எங்களிடம் சொல்லாமல் திருமணம் செய்து விட்டீர்கள் என்ற ஒரு புள்ளியில் தொடங்கிய கேரள உயர்நீதிமன்றம், 1608-ல் உருவான ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் ஹாதியாவின் திருமணத்தில் தலையிடுகிறது, பேரன்ஸ் பேட்ரியே (Parents Patrae) என்ற லத்தீன் பிரயோகத்தின்படி குடிமக்கள் அனைவருக்கும் கருணையின் அடிப்படையில் அரசன் பெற்றோர் ஸ்தானத்தில் உள்ளான்.

அரசனின் கட்டளையை நிறைவேற்றும் காரணத்தால், நீதிமன்றங்கள், குழந்தைகள் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு திருமணங்களில் கூட தலையிடலாம் என்பதே இந்த கோட்பாடு. இந்த கோட்பாட்டின் அடிப்படையிலேயே கேரள உயர்நீதிமன்றம் தலையிட்டு திருமணத்தை ரத்து செய்தது.

உச்சநீதிமன்றம் இப்போது விசாரித்து வருகிறது. பேரன்ஸ் பேட்ரியே கோட்பாட்டின் அடிநாதம் குழந்தைகள் நலன். இந்த வழக்கில் கேரள உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும், ஹாதியாவை குழந்தையாக கருதுவது தான் அடிப்படைச் சிக்கல், ஹாதியா குழந்தை அல்ல என்ற கபில்சிபிலின் வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை.

திருமணத்தை ரத்து செய்து உத்தரவிட்ட தன் மூலம், கேரள உயர்நீதிமன்றம் சிவில் நீதிமன்றத்தின் அதிகாரத்தை தன் கையில் எடுத்துக் கொண்டுள்ளது என்பதை காணமுடிகிறது.

மேலும் கணவனுக்கு மனைவி சொத்தில்லை. கணவன் மனைவிக்கு காப்பாளன் இல்லை என்கின்ற அடிப்படை முரணான தீர்ப்பை அளித்த நீதிதுறையின் மாண்பினை கேள்விகுறியாக்கி யுள்ளது உச்சநீதிமன்றம்.



**ஹாதியாவிற்காக உயரும் குரல்கள்**

தற்போது சேலத்தில் கல்லூரியில் உள்ள ஹாதியா செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில், நீதிமன்றத்தில் நான் கேட்டது சுதந்திரம். ஆனால் நீதிமன்றமோ என்னை வீட்டுச் சிறையிலிருந்து கல்லூரிச் சிறைக்கு மாற்றியிருப்பதாக கூறினார்.

இன்று ஹாதியாவிற்காக பல்வேறு தரப்பினரும் நாடு முழுவதும் மொழிகளை கடந்து குரல் எழுப்பியும், நீதித்துறையின் அவலங்களையும் தோலுரித்துக் காட்டியும் வருகின்றனர். வீட்டுச்சிறையில் இருந்து கல்லூரிச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ள ஹாதியாவிற்காக வரும் காலங்களில் நீதி கிடைக்கவும் நீதித்துறையிலிருந்து பாசிஸம் முற்றுமுழுதாக வேரோடும் வேரடி மண்ணோடும் புடுங்கிவீசப்பட ஓய்வுக்கு ஓய்வுதந்து உழைப்போம். பாசிஸத்தின் பிடியிலிருந்து மக்களை காப்போம்.

- ஹாரீஸ் முஹம்மது

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.